S. 4/2

உ

குமரன்றுணை.

கருவூரார் நொண்டி

என்னும்

வாதகாவியம் 88.

ஸ்ரீமாக். வாகவி.
க. பாக்ஷா ஸாஹிபு,
திருத்தின் சாம்.

இஃது

மதுரை யானைக்கல்தெரு வித்துவான்

மூ. குழந்தைவேலுப் பிள்ளை அவர்கள்

கேட்டுக்கொண்டபடி

மதுரை வித்துவான்

த. குப்புசாமிநாயுடு அவர்களால்

பரிசோதிக்கப்பெற்று:

மதுரைப் புதுமண்டபம் புத்தகஷாப்

இ. ராம.

குருசாமிக்கோனார்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசிவீதி

ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

இதன்விலை] 1918. [ரூ. 1–8–0.

ரிஜிஸ்டர் காப்பி ரைட்.

S. 412

உ

பரமபதிதுணை.

கருவூரார் நொண்டி என்னும்,

வாதகாவியம் 700.

ஸ்ரீமாந். வரகவி.
ம. பாஷா ஸாஹிபு,
திருநாகேச்சுரம்.

காப்பு.

சித்தி தந்த சிறந்த விநாயகன்
பத்தி தந்திடப் பாதம் பணிந்துயான
நத்தி யிந்த நவில்காவி யஞ்செய
முத்தி தந்த முதல்வனைப் போற்றுவாம். (0)

போற்று கின்ற கருவூரான் வாக்கிது
ஏற்ற மானதோர் கற்ப முறைகளிற்
சீற்ற முள்ளநற் சித்தர்கள் மெச்சிட
மாற்ற லான வகைதனைச் சொல்லுவேன். (1)

சொல்லு வேன்பல சந்தத் துடனிது
வல்ல வாத வயித்திய நொண்டியாய்
எல்ல வர்களும் பாடிப் படித்திட
நல்ல நாளினில் நானிதைப் பாடுவேன் (2)

பாடு வேன்பல சந்தத்தின் சிந்ததாய்
நாடு வேனினி நற்குரு பாதத்தைத்
தேடு வேனினி சிந்தை மகிழ்வொடு
கூடு வேன்குரு போகர்தன் பாதமே. (3)

வேறு.

பாடுகிறேன் ரசவாத நொண்டிச்சிந்தைப் - பலசந்த மாய்ப் பாட வாணிகாப்பு, கோடுபெற்ற கொங்கைமின்னாள் பெற்றபாலன் - குகன்தமையன் மூலவிநா யகனுங்காப்பு, நாடுகின்ற காவுதனில் வாசஞ்செய்யும் - நல்லபதினெண்பர்கள்தன் பாதங்காப்பு, தேடுகின்ற பொருளனைத்துங் கொடுக்குமென்றாய் - சிற்பரையாள் பாதமது தினங்காப்பாமே. (4)

வண்ணச் சந்தம்.

பூவுலாவிய தேவிசுந்தரி போதகந்தரி மாயிசிற்பரை - பூணு நற்சிவ ஞானமுற்றிடவே கொண் டாடிவே, காவுலாவிய போகநாயகர் கடவுள்சத்திய ரிஷிகள்தேவர்கள் - கருணையுளநந்தி பாதமே துணையே காப்பாய் நினையே, பாவுலாவிய போகநாதர்கை படிசமாகிய கொங்கணர் - பண்புபெற்றிடுங் கருவூரான் வாக்கே வெகு போக்கே, நாவுலாவிய சட்டைமாமுனி நாதர்சுந்தரர் மச்சரும் - நாதர் கோரக்கநாதரைப் பணிந்தேன் முடி புனைந்தேன். (5)

விருத்தம்.

காசினியில் யான்படைத்த கற்பங்கேளாய் - கடிதாக நூற்றெட்டுக் கற்பமாகும், நேசமுடன் சித்தியதாங் கற்பங்கொண்டால் - நிலைபெற்றே ஞகாச நெறிகள்பெற்றேன், பாசமற்று நேசமுற்றுப் பாரில்வாழும் - பண்புதனை விட்டிழுந்து பரத்தைத் தேடும், ஆசையுற்றுப் பேரின்ப மாகுஞ்சித்தி - அடவாகக் கற்பமுறை சித்திபாரே. (6)

நூலின் பெருமை.

பாரப்பா வெகுகோடி காலமட்டும் -பண்பாகச் சடத்தோடேயிருப்பதற்கு, நேரப்பா கற்பமது கொள்ளவேணும் - நேர்மையுடன் பத்தியமா யிருக்கவேணும், சாரப்பா உப்புவகை கட்டவேணும் - கருத்துடனே குருமுடித்துக் கொள்ளவேணும், சீரப்பா யிவையாவும் முடித்தோன்சித்தன் - செகத்தினிலே நெடுநாளுமிருப்பான்சீரே. (7)

சீருலவு கற்பமுறை போதமீறும் - செல்வரகத் தியமுனிவர் நந்திதேவர், தாருலவு திருமூலர் சட்டைநாதர் - தமையனெனுங் கொங்கணவர் சகஸ்திரவேதை, காருலவு கற்பகோ ரக்கநாதர் கைவளர்நா கார்ச்சுனருங் காளமேகர், பாருலவு போகமுனி நாதர்தந்த - பாலனெனுங் கருவூரான் பாடற்கேளே. (8)

கேளப்பா அகத்தீசர் கற்பம்நூறு - கிருபையுள்ள நந்தீசர் கற்பம்நூறு, நாளப்பா போகமுனி நாதர்கற்பம் - நாற்பத்திநாலுகற்பம் நன்றாய்க்கொண்டார், வேளப்பா சட்டைமுனி தின்றகற்பம் - மேதினியி லிருபத்தோர் கற்பமாகும், ஆளப்பா கொங்கணவ ரீரெட்டாக - அருந்தினர் கற்பமிக அருந்தினரே. (9)

அருந்தினர் திருமூல ரறுபத்தாறு - அற்புதமாய்க் கற்பங்க ளன்பாய்க்கொண்டார், பொருந்தியதோர் கோரக்க நாதர்தானும்—பூதலத்திற் றெண்ணூறு கற்பங்கொண்டார், திருந்தியதோர் ரோமரிஷி கூனக்கண்ணர் -செப்பமுள்ள மச்சமுனி யிராமதேவர், வருந்தியே யெழுபத்தோர் கற்பங்கொண்டார் - மானிலத்திற் சாகாத வரம்பெற்றாரே. (10)

வரம்பெறமுப் பத்துமுக் கோடிதேவர் - மாதர்களே மேவுவர் காண் மகவான்வாழ்வு, சரம்பெற்றா ரறுபத்து நாலுகோடி- சத்த ரிஷி மாமுனிவர் சடத்தினலே, பசம்பெற்றார் குகைதோறுஞ் சமாதிகொண்டார் - பண்புபெற்றா ரவர்கள்கொண்ட கற்பம்நூறு, சிரம்பெற்றா ரமுதமுண்டார் சிவயோகத்தின் - சிந்தையதா யுளம கிழ்ந்து தெளிந்துவாழ்ந்தார். (11)

வாழுகின்ற ரிஷிகள்முத்தி வயிராக்யத்தால் - மானிலத்திற் றவசிருந்து பேரும்பெற்றார், ஆழுகின்ற கற்பமெல்லாம் பத்துக் குக்கீழ் - அருந்தினர் சிவத்தியான மன்பாய்ப்பெற்றார், ஏழுநா ருயிரத்தோர் சித்தர்கூடி - இனிமையுட னெழுபத்தோர் கற்பங் கொண்டார், கோழுமில்லை உயர்வுமில்லை தாழ்வுமில்லை - கூர்பக லும் ராவில்லை சடம்பெற்றாரே. (12)

சடம்பெற்றார் கற்பமெல்லாங் கொண்டபின்பு - தாரணியி லடங்காத வேதைபெற்றார், திடம்பெற்றார் பத்திமுத்தி மாறுவ ண்ணம் - சிறப்பாக வயிராக்கிய வரங்கள்பெற்றார், கடம்பெற்றார் கடவுளடி தன்னைக்கண்டார் - காசினியிற் சிவயோக கல்விமானாய், இடம்பெற்றார் வச்சிரமிட்ட காயமானர்-இயல்பாக வாதநொண்டி திரம்பெற்றாரே. (13)

நொண்டிச்சிந்து.

துநுமுடிக்க.

வீரனெனு மாகாச தீரனிந்த
மேதினியா ளுஞ்சாதி லிங்கத்தளவாய்
சூரனெனுந் துள்ளுகுட்டி கட்டிநொண்டி
தொந்தோமென் றுடிக்கொள்ளத் துசங்கட்டினன். (14)

சீனனெடு சாரபூரம் மனே
சிலையொடு தாளகஞ் செப்புத்தொட்டியாம்
சோனகன் மெய்த்துவரும் சாரநொண்டி
தொந்தோமென் றுடிக்கொள்ளத் துசங்கட்டினன். (15)

சவுக்காரம் அன்னபேதி கெந்திகவச்
சாரஞ்சாரக் கட்டிமூலி கையாகும்
சுவத்திரை முத்திரையிதாம் நொண்டி
தொந்தோமென் றாடிக்கொள்ளத் துசங்கட்டினான்.(16)

உரிசிக்குங் கரியுப்பு வெடி
யுப்புஅட்டு வளயலுப்புக் கல்லுப்பு
துருசைவெளுக்குமண்ணுப்பு நொண்டி
தொந்தோமென் றாடிக்கொள்ளத் துசங்கட்டினான்.(17)

இந்துப்பு நீருப்பு நாவிவெள்ளை
யிணங்குமந்தப் பாஷாணந் துள்ளியைக்கட்டும்
துந்துமி கட்டியுரிக்கும் நொண்டி
தொந்தோமென் றாடிக்கொள்ளத் துசங்கட்டினான் (18)

முத்துப் பவளமிருதார் சாரங்கூவிள
மூலிசூ தனைக்கட்டும் பூரினிலே
துத்தங் கெவுரிகாரீயம் நொண்டி
தொந்தோமென் றாடிக்கொள்ளத் துசங்கட்டினான்.(19)

உருக்குத்தொட்டிப் பொன் னிமிளை நவ
லோகம்நுரை பொடிகற்றா மரையாலே
சுருக்கிட்டுப் புடமிடச் செம்பாம் நொண்டி
தொந்தோமென் றாடிக்கொள்ளத் துசங்கட்டினான்.(20)

அழுகண்ணி மார்க்க மெவர்க்கும் உண்டுமது
ஆயிரத்தெண் மாற்றுமே லாக்கிவிக்கும்
தொழுகண்ணி ரசத்தைவிட் டாட்டும் நொண்டி
தொந்தோமென் றாடிக்கொள்ளத் துசங்கட்டினான் (21)

ஈசுரமூ லிரசங்கட்டும் தெய்
வேந்திரன் பதவியுண் டாக்கிவைக்கும்
துருசிப்படை களைவெல்லும் நொண்டி
தொந்தோமென் றாடிக்கொள்ளத் துசங்கட்டினான். (22)

நாகதேவ தாளிரசங் கட்டும்வீரன்
நன்றுரைத்த தலைவனைப் பின்கட்டாய்க்கட்டும்
தோசத்துரு சைவெளுப்பிக்கும் நொண்டி
தொந்தோமென் றாடிக்கொள்ளத் துசங்கட்டினான். (23)

காந்தச் சவளையிரக்கக் குன்றி
காரையிலேச் சாறுவிட்டுப் புடம்போடச்
சோந்திடுந் தங்கமீயம் நொண்டி
தொந்தோமென் றூடிக்கொள்ளத் துசங்கட்டினன். (24)

ஆடுஞ் சரக்குவகை சொன்னேமிந்த
அறுபத்து நாற்சரக்கின் பலத்தைக்காணும்
சூடுந்தங்க வாபரணம்போல் நொண்டி
தொந்தோமென் றூடிக்கொள்ளத் துசங்கட்டினன். (25)

விருத்தம்.

சரக்குள வழியுங் கூருஞ் சாற்றிய பின்பு கேளாய்
திருக்கண்ட கண்ணுக்கெல்லாந் தீவினை யில்லையப்பா
உருக்கண்ட சரக்கும் பார்த்தே உற்றதோர் சரக்கைத் தாக்கக்
குருக்கண்டு முடிக்குஞ் செய்தி கூறுவேன் புவியு ளோர்க்கே.

நொண்டிச்சிந்து. (துருசுக்கரு.)

நாய்ப்பாகல் விரையெடுத்துத் தானதை
நன்று யுலர்த்தியதை யரைத்திடவே
வாய்ப்பாக்கு வெற்றிலைதான் தின்று
வாய்நீரை விட்டதையு மரைத்தெடுத்து. (27)

சிறுவில்லை யாய்ப்பிடித்து ஒரு
சித்துக் கலசத்தினில் வைத்தடக்கி
உறுப்பான மேல்மூடி செய்ததனை
உற்பனமாய்த் தயிலங்க ளப்போதிறக்கி. (28)

பீங்கானில் வைத்தெடுத்து நல்ல
பெரிய குருவென் றருமைசெய்து
பங்காய்ப்பச்சைத் துருசதற்கு மேலே
பரிவாகப் பூசிவெயிற் புடமாக. (29)

வைக்கச்சுண் ணம்பாகும் இந்த
மாகுரு நந்தியா வட்டமதிற்
சூதத்தைக் கட்டிவைக்க வொளி
சோதியா யிடுஞ்சாதி லிங்கமுடன். (30)

வேதச்சவ் வீரனையும் செயம்
வெட்டிக் குறிப்பாகக் கட்டிவைக்கும்
தாளகம் வெள்ளையப்பா அதிற்
சார்ந்த மனேசிலை பற்பமப்பா. (31)

வேணுவின் பத்திரியில் தின
  மீதிற் சிவந்திடும் வெள்ளியிலே
சோதனை பத்தரைகாண் மாற்று
  தொட்ட சவுக்காரச் சுண்ணமதாம். (32)

வெளுத்த அரிதாரம் நல்ல
  வெள்ளியிற் சேர்த்திட வயதொன்பது
தெளித்த மனோசிலைதான் சுத்தச்
  செம்பினி லெட்டரை தீர்க்கமப்பா. (33)

பொரிகாரஞ் சுண்ணம்பாம் கற்
  பூரமுந் தண்ணியில் நீறுமப்பா
சீனமுஞ் சுண்ணம்பாம் நல்ல
  செம்புடன் வெள்ளியுஞ் சுண்ணம்பாம். (34)

தங்கமுஞ் சுண்ணம்பாம் குப்பி
  சயவீரந் தானுபதி சுண்ணம்பாம்
உலோகமுஞ் சுண்ணம்பாம் இந்த
  ஒன்பது சுண்ணமு மோரிடையாய். (35)

சரியிடை யாய்ச்சேர்த்து அது
  தான்களஞ்சி சவ்வீரந் தான்சேர்த்து
இதுக்குச் சரியிடையாய் நவச்சாரம்
  இயல்பாகக் கூட்டிக்குரு வெட்டிலொன்றாய். (36)

பீங்கானில் வைத்திருக்க அது
  பேரான மறுநாளிற் சலமாகும்
உலோகங்கள் தண்ணீராம் யீயமது
  ஒருமா நூற்றுக்கு யீயதிலே. (37)

மாத்தது பத்தேழாம் அந்த
  மதயானை யுந்தண்ணீ ராகுமப்பா
காந்தம் வெள்ளி தண்ணீராம் நல்ல
  கருவான நாதஞ்சிப்பித் தண்ணீராம். (38)

சத்தியுப்பு நீராகும் இது
  தாண்டவ மாடும்வகை தான்கேளாய்
வங்கம் அரிதாரம் ரசம்
  மட்டை மடையன்சவ்-வீரமப்பா. (39)

பிரதானி தங்கச்சுண்ணம் இவர்
  பேரிற் பெரியோ ரெழுவர்களை
மூந்தின செயநீரால் விட்டு
  மூன்று நாழிகை யரைத்திடவே. (40)

கட்டி மெழுகாகும் இந்தக்
  காரண மான குருவதனைத்
தப்பாது செம்பினிலே இது
  தானொரு மாவிடை தானீய. (41)

தங்கச்செம் பாகுமப்பா இந்தத்
  தங்கச்செம் பதனிற் றானொருமா
வெள்ளியிடை நூறுகளஞ்சி யதின்
  மேற்சத பேதி காணுமப்பா. (42)

ஆயிரத் தெண்மாத்து தங்க
  மாக யிருக்கின்ற தோரிடையும்
சவ்வீர மோரிடையும் அந்தத்
  தாளு பதியுஞ் சரியிடையாய். (43)

சூதமுஞ் சரியிடையாய் விட்டுத்
  தொந்தித்துச் செயநீரை நன்றாக
விட்டரைத்துத் தங்கக்குகையில் மிக
  விரும்பியே குக்கிடப் புடம்போட. (44)

முருக்கம்பூச் செந்தூரமாம் இது
  முன்காணி கோடியைப் பேதிக்குங்காண்
செந்தூர மாவிடையாய் மண்டலந்
  தேனிலே சேர்த்திதைக் கொண்டுவிட்டால்: (45)

ஈசுர னிவனாவான் வேறே
  இயல்பான சித்தர்களுந் தேவர்களும்
அடிபணிந் தேதொழுவார் இவரும்
  அம்பல மாடத் துணிந்துகொண்டு (46)

தொந்தோமென் றாடுவர்காண் நல்ல
  தூயமா யவன்செத்துப் பிறந்தாலும்
இவனுக்கீ டாவதில்லை சொல்ல
  இதுவுற் பனமப்பா நிச்சயங்காண். (47)

சிவனுணை தப்பாது நல்ல
தேவலோக ரம்பைகளும் பணிகள்செய்வார்
தப்பாது முக்காலுந்தான் இதைத்
தாரணியில் யாவருக்குஞ் சொல்லாதே. (48)

சொன்னு லெழுநரகம் இதனை
சொல்லாட்டா லிவனே பெரியோனும்
இவனுக்கொப் பாருமில்லை எங்க
ளீஸ்வரி யாணை தப்பாது. (தந்தன) (49)

விருத்தம்.

மடையன்சங் கிலிய தாக வங்கமோர் தூண தாகக்
கொடியவப் பிரகச் சுண்ணங் கோளிலாச் சூடன் கூட்டி
மடையனைக் கவசங் கட்டி வங்கத்தில் ரசத்தை யூட்டித்
திடமுடன் தனப்பால் விட்டுச் சேர்த்தரை மெழுக தாமே.

ஆனந்தக்களிப்பு.

மெழுகை யொருமா வெடுத்து நல்ல
வெள்ளியில் நூறு களஞ்சியிலீயப்
பழுப்பேறி நின்றே உலாவும் மதி
பதினெரு மாத்துச் சரியாகக்காணும் (51)

தப்பில்லை தப்பில்லை யப்பா உமுரிச்
சாரத்தின் கட்டியில் வகையொன்றுகேளு
ஒப்பில்லா தக்குரு வப்பா யிந்த
ஊருக்குள் விடியுமுன் ஞெலியிடுஞ்சாவல். (52)

மெய்ப்பான சுண்ணும் பெடுத்தே அதற்கு
வேண்டுஞ் சவுக்காரத் தெண்ணெய்யைவாங்க
வையகத் தோரறி யாமல் கடையில்
வாங்கியே வைத்து மகிழ்வாகநீயும். (53)

பிண்ணாக் கிலைமூலி வாங்கு அதைப்
பேய்க்குமட்டிக் காயினுள் ளாகவேவைத்து
வண்ணான் துறையில் வெளுத்த அந்த
மண்ணுப்பி னுலேகுரு வாகுமப்பா. (54)

வெளுத்தசவுக் காரம் நீறும் முன்
விடையிட்ட சாரமுஞ் சுண்ணும்புங்கூட்டி
பழுது படாம லரைத்து அந்தப்
பச்சைத் துருசக்குப் பூசிவெயிலில். (55)

வைக்க வெளுப்பேறு மப்பா பின்னும்
மண்ணுப்பி னாலேபுட மிடக்கல்லாம்
சிக்கென வுலையில்வைத் தூதப் பின்
சிவந்து வெளுப்பேறிச் சுண்ணமுமாகும். (56)

தண்ணீர் வராத யிலையில் இந்தச்
சற்குரு விழுந்தவுடன் தண்ணீர்வருகும்
உண்மைஉகா யிலைத் தண்ணீர் நல்ல
உற்றதொரு கெந்திரசம் செந்தூரமாகும். (57)

வெள்ளியிற் களஞ்சிக் கொருமா அந்த
வேதை பதினொரு மாத்துமேகாணும்
உள்ளபடி யிதைத் தானும் யார்க்கும்
உண்மையைச் சொல்லாதே வெளியிட்டுநீயும். (தானுத)

வெண்பா.

நாகரச பற்பமொடு நல்லதொரு கெந்தகத்தைப்
பாகமுடன் செந்தூரம் பண்ணியே—நாக
ரசலிங்க முங்கூட்டி நானூற்றுக் கொன்றீய
ரசமாத் தறுபத்தி நால். (59)

தொண்டிச்சிந்து.

ரசபதங்கம் தாளகச்செந்தூரம்.

ரசபற்பஞ் செய்வதற்கு செங்கொடுப்பை
நாகமது சிறியா நங்கையிற்கட்டும்
பிரியாமல் வாலை ரசம் யெடுக்கப்
பேணியே அதைநானுஞ் சொல்லுகிறேன். (60)

ரசநாகந் தன்னையுந் தான் கல்வத்தில்
நன்றாய் நுணுக்கி யதையெடுத்து
அமுதம்விட் டரைத்துப் பின்பு
அப்பாலே இன்னமொரு வகைகேளு (61)

வெற்றிலைச் சாறும் விட்டு அரைத்ததில்
வேண்டுஞ்சவ் வீரமதைப் போட்டரைக்க
வாலைரசந் துள்ளியே விழும் இந்த
வகைப்படி நடத்தினா லுற்பனமப்பா. (62)

தாளகச்செந்தூரம்.

தாளகத்தின் வேதையைக் கேள் காரீயந்
தன்னிலே ஊட்டியபின் சொர்னமதுவாம்
வங்கம் வலிந்து போச்சு இந்தயிடை
வளர்தங்கஞ் சேர்த்துருக்கு ரசத்தைவிட்டு. (63)

உண்ண வேதை பண்ணி மனோசிலை
ஓரிடை யாகவே அரைத்துருட்டி
லிங்கம் பொடித்துத் தூவி குக்குடம்
நிச்சயமாய்ப் புடம்போட அசையாது. (64)

செந்தூர மா யிருக்கும் அதனைத்
தேனி லரைத்துமஞ் சாடியுண்டையாய்க்
களஞ்சிவெள்ளி யிற் கொடுக்க மாற்றுறு
கைமேலே காணுமப்பா மெய்யிதுசொன்னேன். (65)

காரீயங் களஞ்சிக் கப்பா கெவுரியைக்
கட்டிக்கொண்டு காசிடை களஞ்சிலீயக்
காரீயங் கலிக்கு மப்பா தங்கத்திற்
கண்ட யிடைக்குச்சரி யாயுருக்கி. (66)

மணியெடுத்து ரச வீரம் லிங்க
மதுவுமோ ரிடையா யெடுத்துக்கொண்டு
செங்கற் குகையில் வைத்துப் புடமிடச்
செந்தூர மாகும்பின்பு தொந்திக்கவே (67)

வங்கமும் ரசமு மொன்றாய்ச் சித்தா
மணக்கெண்ணெய்யி லுருக்கி யிணக்கமுடன்
செந்தூரந் தன்னுடனே நன்றாய்ச்
சேர்த்துக்கா ரீயம் உருகையிலே. (68)

தோய்ந்ததொரு மாக் களஞ்சி யீயம்
சுகமாகத் தானீயப் பழுப்பேறும்
ஒன்பதரை குறை யாது இதை
யொருவருக்குஞ் சொல்லாதே நயமுடனே. (தானதன)

நாகங்கட்டுதல்.

வெண்பா.

வில்வப் பழத்தால் விடக்கினெனும் பாலுமே
சொல்லதொரு மாதளையிற் சோருங்காண்—வல்லபமா
மானரசங் கட்டும் அருங்கொட்டி யின்கிழங்கு
கானமுடன் நாகமதைக் கட்டும். (70)

காத்தவாராயன் சந்தம்.

கட்டுதற்குக் காடைப்புடம் போடக் கற்பூரம்போ லெட்டுமது
வெட்டுதற்குப் பட்டுவிடும் இது வேதையிலே போவதுபார் (71)

தாளகத்தைக் கட்டுதற்கு வகை தானே உரைக்கலுற்றேன்
வாளம்வெடி யுப்புடனே சீனம் வளரும் நவச்சாரம் (72)

பழம்புளியு மோர்பலங்காண்-இது-பதமா யரைத்தெடுத்து
இளங்கு குக்குடமாய்ப்-போட்-டிருக்கநீ ராகுமப்பா (73)

சீனக்காரங் களஞ்சிவகை-வீதம்-செப்பமுடனேயெடுத்து
பானமெனும் வெடியுப்பு-மொரு-பலமாயெடுத்துப்பின்பு (74)

நீராகுங் கண்டாயே-அந்த-நெறிபாகந் தப்பாமல்
வீரான பூரமொடு-சுத்த-வீரன் பணவிடையாய் (75)

பீங்கானில் வைத்திருக்க-அது-பித்தாலுல் மூன்றுநாள்
ஆங்காரச் சத்திபதாய்-இது-அஞ்சாநாள் தண்ணீராம் (76)

இந்தச் சலந்தனிலே-வைத்-தெடுத்தசரக்கெல்லாந்தான்
தொந்தமாய்க் கட்டுமப்பா-மேலும்-சூதமுருகுமப்பா (77)

கட்டுஞ்ச ரக்கெல்லாந்தான்-இந்தக் கன்னியருளினாலே
திட்டமா யிச்சலத்தா-லதைச்-செய்துகட்டிக் கொள்ளுவீரே. (78)

அம்மானைச் சந்தம்.

திருவா யுணரத் திருவம் பலநாதர்
குருவா யுரைத்த குருச்செயநீர் தன்வகைகேள் (79)

குங்கும மின்னார் குடலிரத்தந் தான்பிழிந்து
பொங்குமொரு சீனம் பொடியாய்ப் பொலிவிருத்தி (80)

அண்டத்தை முங்க அதில்நிரம்ப மூடிவைத்துப்
பண்டு மறுநாள் பார்க்கவே தோடுருகி (81)

சுண்ணமதாய்ப் போகத் துடிக ளடங்குமப்பா
எண்ணமுள்ள மஞ்சள்வெள்ளை யின்சவ்வுபோந்திருக்கும்

போந்தகரு வோடே புகலுஞ்சா ரந்துருசு
கூர்ந்தவகை யொன்றுக்குக் கூருங் களஞ்சிரண்டு (83)

போட்டரைக்க நல்ல புதுமை மெழுகாகும்
ஒட்டபழச் சாறும் உருகு'ண்டச் சுண்ணம்பும் (84)

சாரங் களஞ்சிரண்டு தப்பாம லேபோட்டு
வாரநாள் வெய்யலிலே வைத்தால் மெழுகாகும் (85)

அம்மெழுகும் இம்மெழுகும் அம்மியிலே தானும்வைத்துச்
செம்மை யுடனரைக்கச் செயநீராங் கண்டாயே. (86)

கண்டதொரு தண்ணீரில் கட்டுஞ் சரக்கெல்லாந்
துண்டா யிரும்பைத் தோய்த்துப் புடம்போட (87)

செம்பா மிரும்புமப்பாச் செயநீரின் கட்டுமுறை
உம்பர்கள் தன்னாணை உற்பனமும் பொய்யாது (88)

கெவுரி வெள்ளைப் பாசாணக்கட்டு.

காத்தவராயன் சந்தம்.

கற்சுண்ண மோர்களஞ்சி-சீனிக்-காரமு மோர்களஞ்சீ
கற்சுண்ணந் தனைநீற்ற-அந்தக்-காரமது செயநீராம் (89)

காரமிடை நவச்சாரம்-அது-கண்டயிடை துருசையிட்டே
சீருடனே தானரைத்து-அந்தயிடை-சேர்த்துவிடுகெந்தகத்தை

சோரச்சோரத் தானரைத்து-வெகு-துருசாய்வெயிலில்வைத்துக்
காரமுள்ள குருவாகும்-முப்பு-கண்டறிந்துக் கொள்ளுமப்பா. (91)

உப்பில்ரசந் தன்னையுந்தான்-நீயும்-ஊட்டி யரைத்திடவே
செப்பமுடன் மெழுகாகும்-அதைச்-சிறப்பாக வேயெடுத்து (92)

வெள்ளியுந்தா னிருபதுக்கு-மெழுகு-வேண்டியே ஒன்றீய
உள்ளபடி மாத்தேழு-தப்பாது-உண்மையாய்ச் சொல்லிவிட்டேன்

துருசுச்செம்பு வேதை.

நொண்டிச்சிந்து.

நல்ல துருசுச்செம்பு வேதை
நன்றாகச் சொல்லுகிறேன் தெம்பாகவே
வல்லதொரு அரிதாரம் சுத்திசெய்து
வகையா யெடுபலம் பத்துதனை. (94)

எலுமிச்சம் பழச்சாற்றால் ஒருசாமம்
இயல்பாக வேயரைத்துப் பிசகாமல்
வலுமையாய்க் கண்டரவி தகட்டிற்கட்டி
மற்றபடி நொருங்கமட்டும் புடமூன்றிட்டு. (95)

வசமாகக் குகையிலிட்டு பொன்
வண்டுகூட்டிச் சேர்த்தரைத்து உருக்கச்சத்தாம்
தசமாகுஞ் சத்தினுட பெருமை
தயவான வெண்கலம் போற்றேனும். (96)

சத்துடைத்துக் கற்பூரத்தைப் பாதிசேர்த்து
தயவாய்முன் பழச்சாற்றில் சத்தையாட்டி
மத்தபடி வில்லைதட்டிக் காயவைத்து
வகையுடன் சிவக்கமட்டும் புடம்போடு. (97)

மதியெட்டில் ரெண்டுசேரு விற்றிடவே
மாத்தது யெட்டாகும் மகிழ்வாக
விதியுடன் துருசுக்குள்ளே செம்பைக்கொண்டு
வேணுமென்ற சத்தாக்கி உருக்கிக்கொள்ளு. (98)

உருக்கின செம்பெடுத்து மதியுள்ளே
ஒருமையாய்ப் பாய்ச்சிட யேமமாகும்
பெருக்கின கண்டாது செம்புதானும்
பெருகவே மாளாட்டால் ஏமமில்லை. (99)

நல்லதொரு களிம்பாகும் குணமில்லை
நாட்டிலுள் ளோர்பிழைக்கச் சொல்லுகிறேன்
வல்லசெம்பு யேமமோரிடை யுருக்கியே
வாகாய்த் தகடடித்து நயமாக. (100)

சத்தியுடன் சீனஞ்சேர்த்து பழச்சாற்றால்
தாட்டிகமா யரைத்து அப்பியேதான்
சித்தியுடன் புடம்போட்டு நொருக்கியே
தெளிவாகக் கற்பூரம் பாதிசேர்த்து. (101)

செம்பாகப் புடம்போடச் செந்தூரமாம்
செப்பமா யதையெடுத்து மதியெட்டில்
சுயமாக ரெண்டுதாக்க அது
சுந்தரம்போ லேமமாகும் கண்டறிந்து. (102)

வித்துச் செலவுசெய்து யேழைகட்கு
மிகஅன்ன தானங்கள் தான்கொடுத்து
சித்தி மிகவும்பெற்று ஞான
தெரிசன மேயாகும் தெரிந்திடுவாய். (103)

உப்புக்கட்டு. [விருத்தம்]

பாரப்பா கொங்கணவ ருப்புதன்னைப்-பரிவாகக் கட்டறியா ரென்றுஞ் சொன்னார், நேரப்பா கட்டுதற்கு வகையைக்கேளு - நீதியுடன் விள்ளுகிறேன் புளித்தஆரை, சீரப்பா சிறுநீரி விடித்துச்சாற்றை - சிறியதொரு சட்டியிலே சென்றுவாங்கி, சேரப்பா உப்புதனை நாலுக்கொன்று-சேர்த்தனலிற் குருகவே தீயிற்காய்ச்சே.

காய்ச்சவே நீரெல்லாம் வத்திப்பின்பு - கடுங்கார மேறுதற்கு வெயிலில்வைப்பாய், வாச்சநில வுப்புநாலு கரியுப்பொன்று-வண்மைகரி யுப்பதற்குப் பாதியண்டம், பூச்சான தோடதனைக் கழற்றிச்சேர்த்துப் - புதுமையுடன் சீனமண்டத் திடையாய்க்கூட்டி, ஆச்சிமா ரமுதப்பால் பழச்சாற்றோடு - அறுசாம மிடைவிடாதரைத்திடாயே. (105)

அரைத்தொரு உப்பதனை வில்லையாக்கி-அடவாக ரவிமுகத்தி லன்றுவைத்து, விரைப்பாகல் கொட்டையிலே தயிலம்வாங்கி - மீறியதோர் துருசுக்கு நன்ருய்ப்பூசி, இரவிபட வைத்துமறு நாளெடுத்து - இனிமையுள்ள உப்பதற்குக் கவசம்பூசி, துருசித ஞற் சுண்ணும்பாம் புடத்திற்போடச் - சுந்தரமாங் குருவாகும் உப்புச்சுண்ணம். (106)

சுண்ணமப்பா பொரிகாரஞ் சீனக்காரம் - சுண்ணமப்பா அரிதாரஞ் சுண்ணமாகும், சுண்ணமனே சிலைவீரன் சுண்ணமாகும் - சுண்ணமப்பா கற்பூரஞ் சுண்ணமாகும், சுண்ணமப்பா தாம்பூரம் சுண்ணமாகும் - சூதமொடு லிங்கவங்கஞ் சுண்ணமாகும், சுண்ண மப்பா வெள்ளிதங்கஞ் சுண்ணமாகும் - துருசினு லுப்பான குருச் சொன்னேமே. (107)

செயநீர்.

குருச்சொன்னே மீரேழு சுண்ணமப்பா - குருவகையின் செயநீராற் கொண்டுநல்க, திருவான நவச்சாரஞ் சரியாய்ச்சேர்த்துச் - சிறப்பாகப் பீங்கானிற் சமமாய்வைத்து, உருவாகும் மூன்றுநாள் தண்ணீராகும் - உற்றஅறு பத்தினுற் சரக்குங்கட்டும், பொருளாகும் அன்னபேதி கள்ளிச்சாற்றில் - போட்டரைத்துத் தெளியவைத்துக் காச்சுப்பாமே. (108)

பேதியுப்பு.

உப்புடனுப் புச்சுண்ணந் தன்னைநீற்ற - உகாயிலையிற் தண்ணீராம் பிராயின்பாலில், சிப்பிசங்கு திருகுகள்ளித் தண்ணீராகும்-சிறுதுத்தி யாலிலையில் றண்ணீருண்டாம், அப்பான சத்ததினுல் நீரதாச்சு - அறுபத்து நாற்சரக்குந் தோய்த்துவாட்ட, மெய்ப் பாகக் கட்டியதோர் சரக்கதெல்லாம் - மெழுகாகும் அட்டலோகம் வேதையாமே. (109)

வேதையாம் மெழுகுதுத்தம் மெழுகுநாகம் - வீரமொடு லிங்கமரி தாரஞ்சூதம், வாதமிகு மெழுகுகெந்தி வங்கமனேசிலையும் - வண்மையுடன் மெழுகாகுஞ் செம்பிற்றுக்க, நாதனென்ன அறுபத்து நாலுமாத்து - நயமான பசும்பொன்னு யிருக்குமப்பா, வேதைதங்க மாவிடையா மெழுகுகூட்டி - வெள்ளியிலே தாக்கச் சதா வேதையாமே. (110)

சதாவேதை யாயிரத்தெண் மாற்றுக்காணும் - தப்பாது சிவணை தப்பாதுண்மை. பதமாகும் ஆயிரத்தெண் மாற்றுத்தங்கம்-பாகமுடன் செந்தூர மாகவைத்துக், குதராமல் மண்டலமே கொண்டாயாகிற் - கூர்ந்தொருமா விடையெடுத்துக் கொள்ளுமப்பா, சதமான காரமெல்லா மிதற்கீடல்ல-தாரணியிற் ருண்டவனுஞ்சம்புவாமே. (111)

சம்புசிவ சங்கரனும் யோகமானன் - தாரணியிற் சிவயோக மெடுத்துக்கொண்டான், நம்பனடி கண்டாலும் பத்திமுத்தி - நாதனு ரிவருக்கீ டல்லவய்யா, செம்பொன்னின் அம்பலத்தி லாடுவோன்காண் - ஜெகமீரே ழுலகமெல்லா மொன்ருய்நிற்பான், உம்பரிலும் மும்மூர்த்தி யிவனைப்போற்றி-ஓதியே ஓம்நம சிவாயமாமே.

வேறு.

மன்னவன் வீரன் சூதன் வாசப்பிர தானி யோனும்
கனனியர் தனப்பால் நாவிக் கறுத்ததோர் வெள்ளைநஞ்சும்
கன்னிகைச் சாற்ருல் மாளுங் கடியதோர் குகையி லிட்டுக்
சின்னங்கள் தாரை யூதச் சிந்தாமணிக் குளிகன் வந்தான். ()

வந்ததோர் வாயு வேகம் மனவேக மாக வாசி
அந்தர கபால யோகம் அட்டமா சித்தி காண
செந்தமிழ்க் கமல வாணி ஜெகத்துக்கோ ரிராஜ தானி
சுந்தர அழகு பொன்னின் தூயனும் வச்ர காயன். (114)

வெண்பா.

காயம் மிளகுசுக்கு கார்கடுகு வெந்தயத்தா
லாய மெடுக்க அறிவுண்டோ—தூயதொரு
கற்பவகை செய்திமுறை கற்கமனச் சித்தியுற
சிற்பரையாஞ் சத்திசிவ னே. (115)

நூற்றெட்டுக் கற்பத்திற்கு வேண்டியமருந்து.

நீலிநாடகச்சந்தம்.

பொன்னாங்கா ணித்தகரை யாரைக்கற்பம்
புருடர்வய தாயிரமாம்
சொன்ன மதிமயமாம் சிறியாநங்கை
சோதி விருக்ஷமப்பா. (116)

கானப் பிலாத்தயிலம் பேய்ச்சுரை
கடுக்காய்ச்சுக் கிஞ்சியதாம்
தேனது மாங்கனியில் தயிலமும்
தேவதா ரீமரமும். (117)

சாதியின் கெந்தகமும் சூதம்
சரியான நாகமுடன்
ஆதி யரிதாரம் செந்தூரம்
ஆக்கியுண்டால் கோடியுகம். (118)

கோங்குவிஷ்ணு பூபதியும் நாகமல்லி
குமரியம் மான்சிந்தி
வேங்கைரோ மவிருக்ஷம் நல்ல
வியப்பான சோதிப்புல். (119)

சாயா விருக்ஷமதில் தேவரம்மை
தானே யுலவுவர்கள்
மாயாதி வித்தையப்பா கருநெல்லி
வளரும்வெள்ளைச் சாரணையும். (120)

நார்கரந்தை யாவரையும் வெள்ளை
நாவல்சு ணங்குமரம்
பேர்பெருகுந் தில்லையப்பா நல்ல
பிரியமொடு செண்பகப்பூ (121)

எருமைக் கிடாவிருக்ஷம் செங்கொடுப்பை
யிலைதும்பி பேய்ப்பீர்க்கு
ஒருமா மரவிதையாய்ச் சேர்த்து
உயர்ந்ததயி லம்பிரக்கி. (122)

செங்கொடி வேலியுடன் அவுரி
சிறந்த உகாமரமும்
பொங்குஞ் சதுரகிரி தன்னிற்
பொருந்தியே தானிருக்கும். (123)

ஆதிமுதல் சொன்னதிவை சடம்
அழியாத மூலியிது
நீதியுடன் போயறிந்து அதை
நேயமுடன் கொண்டுவந்து. (124)

காந்தமொடு கெந்தகத்தைப் பற்பம்
கணக்காக வேமுடித்து
சாந்த முடனதையுஞ் சேர்த்துச்
சாப்பிடச் சித்தியதாம். (125)

காக்கை கரிச்சானுஞ் செந்தலைக்
கருடன் கழுகதுவில்
நாக்கு தனையெடுத்து வஸ்திரகாயம்
நன்றாகச் செய்தொருமா. (126)

மண்டலந் தேனிற்கொள்ள தேகம்
வச்சிர காயமதாம்
விண்டுநான் சொல்லிவிட்டேன் இதனை
மேதினியிற் சொல்லாதே. (127)

சந்தனம் தான்றிமரம் வெட்பூலா
சாரணை வில்வமரம்
விந்தைபே யன்வாழைப் பழத்தை
மேன்மையாய்க் கொள்வோம்நாம். (128)

கஞ்சாகை யான்மேனி நீர்நெருப்புக்
கண்டங்கத்ரி வள்ளியொடு
தஞ்சமென வேகொட்டிக் கிழங்கு
தப்பாம லேயெடுத்து (129)

எட்டிமர வேர்த்தயிலம் அதை
யீன்பமுட னேயிரக்கி
குட்டித்தக் காளியிலை சிந்தி
கோடக சாலையுடன் (130)

கூத்தன் குதம்பையுடன் மேற்சொல்
குருவான பற்பமுடன்
நேத்தி யுடனழிஞ்சித் தயிலம்
நேர்மை யுடன்சேர்த்து (131)

இன்னமுஞ் சொல்லுகிறேன் கற்பவகை
இயல்பாக வேதானும்
சொன்னதொரு மாமரத்தின் புல்லுருவி
தோற்ற முடனெடுத்து (132)

அத்தி மரம்வாகை புளி
யாரைநில வாகையுடன்
சித்திகற் றாமரையும் நல்ல
செய்யகுளம் புச்செடியும். (133)

மலைமா மரவேரும் பட்டை
வகையாக வேயெடுத்து
அலையாதே கற்பமிது பற்பம்
அருமையுட னேசேர்த்து (134)

சித்திர மூலமுடன் சூடன்
சிவனா ருடவேம்பு
சித்தகத்தி தன்னுடனே பிரமி
செங்கற்றா ழைதானும் (135)

அலரி சாகாமூலி மல்லி
அவுரியுடன் வல்லாரை
மிலாமிச்சை தன்னுடனே கூகைநீர்
வெளிச்சி மரத்தோடும் (136)

முப்பிரண் டைகள்ளி விழி
மூலப் புளியுடனே
செப்ப முடன்துளசி வேம்பு
சேருங்கரு டக்கொடியும் (137)

சிவனாரின் வேம்புடனே வெள்ள றுகு
சின்னிநாக தாளியுந்தான்
தவத்தோர்க் குதவியுள்ள ஊமத்தை
சதுரக்கள் ளியுடனே (138)

எருக்கிலை தன்னுடனே கடுக்காய்ப்பூ
இயல்பான முள்ளிலவு
கருட னுடகிழங்கும் நாயுருவி
கருவூமத் தைதானும் (139)

திருகுகள் ளியுடனே கட்டுக்கொடி
செந்நா யுருவியுடன்
பெருகு திரவேங்கை வெடியுப்பு
பேராம்செங் கோவையுடன் (140)

சூரத்து நிலவாகை மிளகு
சூரத்து ஆவரையும்
பாரமுள்ள சேங்கொட்டை வாள்மிளகு
பங்கம்பா ளையுடனே (141)

சித்தமுள்ள வெள்ளெருக்கு கோவை
செந்நா யுருவியுந்தான்
தத்தமுள்ள காஞ்சிரையும் வெள்மிளகு
தக்காளி தன்னுடனே. (142)

சேம்புட னேவல்ல கொடிக்கள்ளி
சிவகரந்தை தன்னுடனே
வேம்பின்மேற் புல்லுருவி மிக்க
வேலாமேற் புல்லுருவி (143)

வாகைமேற் புல்லுருவி தே
மாஉசில்மேற் புல்லுருவி
தாகமுட னலின்மேல் மிகத்
தான்படர்ந்த புல்லுருவி (144)

நூத்தியெட்டுக் கற்பமதும் அறிந்து
நுணுக்க முடனேதான்
நேர்த்தியுட னேகொண்டால் சடலம்
நிலைத்துவிடுந் தப்பாது (145)

கற்பங்கோள்ளாமல் வகாரம் நிலைபெறுதேனல்.

இந்தநல்ல கற்பமதிற் கொஞ்சம்
இனிமையாய்க் கொள்ளாமல்
சந்ததமும் பெண்வலையிற் சிக்கித்
தானலைந் தறிவுகெட்டே (146)

நன்னயமாய் வாதிகளும் மிக
ரசவாதஞ் செய்வேனென்று
சொன்னமொழி கேளாத மடைத்
துன்மார்க்க லுத்தருந்தான் (147)

இரசவாத மூதூரது இந்த
ரசவாதஞ் செய்வேனென்று
சொன்னமொழி கேளாத மடைந்
துன்மார்க்க லுத்தருந்தான். (148)

இரசவாத மூதூரது இந்த
இராச்சியமுந் தெரியாதோ
பசியாமற் சோறுகறி நித்தம்
பாங்குடனே தின்பதினல் (149)

மலைமட்ட மானகரி ஊதித்
தரைமட்ட மாய்ப்போயும்
உலைதிட்ட மாகியது கிட்டம்
ஓங்குமலை போலாயும். (150)

பெருங்குறடு கால்கட்டையாய்த் தேய்ந்து
பேணியிவன் மட்டையதாய்த்
துருத்திவாய்மட்ட மாய்த் தோய்ந்தும்
சுட்டிட வேநினைப்பான். (151)

உலையுந் துருத்தியும்போய் கண்புகைய
ஊதித் திரிவார்கள்
வலையிலகப் பட்டுழன்று இவனும்
மான்போ லலைவான்காண். (152)

சுழுவாய் வகாரமதைத் தெரியச்
சுருதியுத்தி யின்முறையாய்க்
களிப்போடு கற்பமுண்டோன் எவரோ
காண்பானே வாதமுறை. (153)

வகாரமுடிந்தபின்மகிமை.

ஓர்மாற்றுக் கண்டாலே இவனுக்
குலகிற் கலிகளில்லை
பார்தனிலே மாற்றிரண்டு கண்டால்
பாவங் கிடையாது. (154)

மூனுமாற்றுக் கண்டவர்க்கு மும்
மூர்த்தி தெரிசனமாம்
தானுவாய் நால்மாற்றுக் கண்டால்
தவம்பெற்ற தேகமப்பா. (155)

அஞ்சு மாற்றுக் கண்டாலே அவ
னாதிசிவ னுவான்காண்
சஞ்சலமி லாறுமாற்றுப் பார்க்கத்
தன்னைத்தா னறிந்தோனும். (156)

ஏழுமாற்றுக் கண்டாக்கால் வந்த
எமனும் பயந்துநிற்பான்
வாழுமொரு எட்டுமாற்றுக் கண்டால்
மானில மயக்கிடுவான். (157)

மத்தநவங் கண்டவர்கள் அவர்
மகிமைபெற்ற சித்தனப்பா
பத்துவர்ணங் கண்டவர்க்கு மிகப்
பாதம்ப ணிந்திடுவோம். (158)

இந்தவிதந் தெரிந்தாலே தேவ
ரிந்திர பதவியுண்டாம்
சொந்தமுடன் வந்துசித்தர் அங்கே
தொண்டுகளுஞ் செய்திடுவார். (159)

இரசவாத கற்பமதை விடாமல்
நாட்டமுடன் கொண்டாக்கால்
நிசமாய் மலசலங்கள் பட்டயிடம்
நிதிவேதை காணுமப்பா. (160)

அட்டலோகம் பேதிக்கும் வெகு
ஆச்சரிய மாயிருக்கும்
திட்டமாய்த் தான்பழுக்கும் இது
சிவனாணை தப்பாதே. (161)

கும்மிச்சந்தம்.

கும்மி யடிபெண்ணே கும்மியடி எங்கள்
கோரக்க நாதர் திருமூலர்
செம்ம லுறையுவர்ச் சாரமென்றே மேலுஞ்
சேர்ந்துக் கும்மி யடியுங்கோடி. (162)

பச்சைத் துருசு வெளுப்பாக நில
பாருப்பி னலே புடம்போடு
உச்சித மாகவே சுண்ணும்பாம் இது
உதடு சிவந்திடும் பாருங்கோடி. (163)

நாவிச்சுண்ணும்பு.

குங்குமக் கோதைக் குடல்பிடுங்கி அதைக்
கூறிட் டொருபுறம் வைத்தேதான்
தங்கம தாம்அண்ட வெள்ளைக்கருவினிற்
ருனே சமர்த்தா யிருந்துதடி. (164)

பாகமாம் முப்பான் வயதுள்ள நல்ல
பாவை யவளொரு அங்கியிட்டாள்
வேகமுள்ள சூடன் வெள்ளைச்சுண்ணம் அது
மீது சரியிடை தானரைத்தே. (165)

வெள்ளைக் கருவிட் டரைத்தபின்பு அதை
மேலே கவசமாய்ப் பூசியபின்
உள்ள புதுச்சட்டி தன்னில் அமுரி
உவர்மண் வைத்துப் புடம்போட. (165)

மண்ணைப் பரத்திப் புடம்வைத்து நல
    மாகத் தும்பையின் சாற்றைவிட்டு
மின்னே அரைப்படி மண்ணையிட்டுப் பின்
    மேற்சட்டி மூடிமண் சீலைசெய்ய. (167)

சீலைமண் மூன்று சீலைசெய்து வெகு
    சீரா யிருசாமம் தீயெரிக்க
வால குருவாய் முடிந்துதடி யதை
    வாழ்த்திக் கும்மி யடியுங்கோடி. (168)

இப்படி வெள்ளை வெழுத்தவண்ணன் அவன்
    எப்படி வெள்ளை வெழுத்தானோ
அப்படி வெள்ளை வெழுத்ததோர்வண்ணனை
    ஆற்றிக் கும்மி யடியுங்கோடி. (169)

அழுகண்ணிச்சித்தர்பாடல்—சந்தம்.

துருச்சுண்ணம்.

நாவி னுமிநீரால் ஆத்தாளே
    நன்று யரைத்தபின்பு
மேவு துருசதற்கு ஆத்தாளே
    மேற்பூசி ரவியில்வைக்க. (170)

சுண்ணும்பாங் கெந்தகந்தான் ஆத்தாளே
    சுண்ணமடி தாளகந்தான்
எண்ணிறந்த கோடிகவர் ஆத்தாளே
    இந்தத் துருசுவெள்ளை. (171)

வாதாடி வந்தாண்டி ஆத்தாளே
    மாற்று னிறந்துவிட்டான்
சூதான கோட்டையெல்லாம் ஆத்தாளே
    சுட்டான் துருசாலே. (172)

வெண்கார நாவியுடன் ஆத்தாளே
    வீரனுக்கு மேற்பூசி
பண்பாயோர் நாளிரவி ஆத்தாளே
    பார்த்திருக்க வேயெடுத்து. (173)

கண்ணாலே பார்க்கவிது ஆத்தாளே
    கண்ணைப் பரிக்குமது
ஒண்ணும்சி னன்களஞ்சி ஆத்தாளே
    ஓர்மஞ்சா டிசேர்த்து. (174)

அக்காரம் வெயிலில்வைக்க ஆத்தாளே
அதீதமுள்ள சுண்ணும்பாம்
இக்காரச் சுண்ணமுடன் ஆத்தாளே
இயல்வீரச் சுண்ணமதும். (175)

ரெண்டுமொன் ருய்ச்சேர்த்து ஆத்தாளே
நீள்துருசிற் கவசமிட
விண்டுநிறம் போக்கியது ஆத்தாளே
வெள்ளையாம் சுண்ணும்பாம். (176)

துருசல்லோ சுண்ணும்பாம் ஆத்தாளே
சோதனை பார்க்கவென்ருல்
அரிதாரங் கெந்தகந்தான் ஆத்தாளே
அப்பிரக மனேசிலையும். (177)

எந்தச்சரக் குந்துருசால் ஆத்தாளே
எல்லாஞ்சுண் ணும்பாகும்
இந்தச்சுண்ணத் தோடுப்பின் ஆத்தாளே
இதைவகுத்துச் சொல்லுவனே. (178)

விருத்தம்.

கரியுப்பை நன்ருய்க் கட்டிக் கதித்ததோர் குகையில் வைத்து
முரியுப்பு முகம்விட் டாடும் முதியதோ ருப்பு தன்னை
அரிவுடன் சுண்ணும் பாக்கி ஆயதோர் சாய மேற்றி
உரிவெண்ணெய் யுதவி போல உப்பினின் தொழிலைச் சொல்வேன்.

காரசாரம்.

நொண்டிச்சிந்து.

செயநீர்த் திராவகந்தான் அதிற்
சென்றிருநாழி ஜலம்வாங்கித்
தானொரு சட்டியிலே அந்தச்
சத்தியா முவரின் பூவதனே. (180)

சிறப்பாக வேகரைத்துப் பின்னே
தெளியவைத்துமறு சட்டியிலே
களிப்பாக விட்டதிலே பின்
கடக்கவைத் துக்கரி யுப்பதனே. (181)

தண்ணீர்ச் சலந்தனிலே ரெண்டு
தரங்காய்ச்சிநன்ருய்க் கொண்டபின்பு
வெண்மை துலங்குமப்பா அந்த
வெந்திட்ட உப்பதனைத் தொங்கித்தேதான். (182)

பாக முடன்தானே முன்
பதமாய்த் தெளிவித்த நீரதிலே
சிதராம விருந்தஅப்பு யிது
தீர்க்க முடனேதான் அரைக்காற்படி. (183)

ரெண்டுபடி தண்ணீரை வைத்து
நேராக வேகாய்ச்சிக் குருகவேதான்
ஒருசாதி விறகுபோட்டு அது
உற்பன மாகவே எரித்தபின்பு. (184)

தண்ணியெல்லாம் வற்றினபின் அதிற்
சார்ந்து உப்பெல்லாம் வெழுப்பேறும்
திடமாய்வெண் ணுப்பையெல்லாம் நன்றாய்ச்
சென்றே யெடுத்துப்பின்னும் நன்றாக. (185)

குழியம்மி தன்னில்வைத்து ஆதியிற்
கொங்கணர் சொன்ன முறையாகச்
சீனமுங் காலிடையாய் மெத்தச்
சிவந்தகன்னி யுதிரந் தானெடுத்து. (186)

சீனத்தி லிடைகூட்டி மிகச்
செக்கச் சிவப்பீ தனப்பாலும்
கன்னிச்சா றும்பிழிந்து அந்தக்
கல்லுத்தேயத் தேய வல்லமையாய். (187)

இருசாம மேயுரைத்துப் பின்
னெடுத்து உருட்டியே பதமாக
வில்லையாய்ப் பிடித்துவிண்ணில் அந்த
வெய்யோன் முகங்காண மூன்றேநாள். (188)

தப்பாமல் வைத்தெடுத்து யிவர்
தாமே சதமாகத் தானும்வைத்து
இதுக்கு முதலாகத் தானிதுக்
கேற்றதோர் செயநீ ருண்டாக்க. (189)

காரசா ரத்தின்வகைகேள் கட்டிக்
காரஞ் சீனமொடு நவச்சாரம்
பச்சைத் துருசுடனே அந்தப்
பாரில்வளர் கல்லுப்பு வெடியுப்பு. (190)

சென்றோர் களஞ்சிபின்னும் இன்னம்
சேர்ந்த சரக்கொன்று உண்டுகண்டாய்
சம்பழச் சாறதிலே நல்ல
சாதி அன்னபேதி தானரைத்து. (191)

அச்சாற்றி லேகரைத்து தானே
அதுகுரு கிடவே காய்ச்சியபின்
உப்பா யிருக்குமப்பா யிது
வோர்களஞ்சி நாவி யோர்களஞ்சி. (192)

பூநர்கக்குரு.

செய்யதொரு பூநாகம் கரிசல்
சேத்துக்குள் ளேகிடக்கும்பூநாகம்
அந்தப்பூ நாகமல்ல சிவற்பூமி
அதிரக் கிடக்குகின்ற நாங்குளுதான். (193)

பூநாகந் தானெடுத்துப் பாலிற்
போட்டுவைக்க மண்ணெல்லாங் கக்கியேவிடும்
மறுநா ளதையெடுத்துக் கொண்டு
மறுவொரு சட்டியிட்டுத் தண்ணீர்விட்டு. (194)

கழுவியே தானெடுத்துப் பின்
கடுவெயி லதனில்வைத் துலரவிட்டே
உலர்ந்தபின் தானெடுத்து முன்
னுப்பித்த மண்ணும் பாலையுந்தான். (195)

வெயிலிலே வைத்தெடுத்து முன்சொன்ன
மீறிய பாலது வற்றினபின்
சூடன் சரிகூட்டி அதனைச்
சுகமான பால்விட் டரைத்துருட்டி. (196)

வைத்தபின் பூநாகம் நன்றாய்
வாய்த்திடும் வெள்ளைப் பாஷாணம்
மூன்றுஞ் சரியிடையாய்ப் பின்
முலைப்பால் விட்டு அரைத்தபின்பு. (197)

வில்லைய தாய்ப்பிடித்து அதின்
மேல்முன் னரைத்த மருந்துதனைக்
கவசம தாய்ப்பொதிந்து யிரவி
காண உலரவே வைத்தபின்பு. (198)

உவர்மண்ணுக் குள்ளேவைத்து அதை
உமியும் யெருவும் மேலேயிட்டு
முழப்புட மாய்ப்போட அது
முக்கிய மாகவே நீராகும். (199)

இதுநீர் களஞ்செடுத்து முன்
ஏற்ற சரக்கெல்லா மிப்படியே
பொடிபண்ணிப் பீங்கானில் அதைப்
போட்டுப் பதனமாய் வைத்திருக்க. (200)

மூன்றுநாள் தண்ணீராம் முன்
முடித்த பாஷாணஞ் சவ்வீரம்
காந்தமும் நல்லசூடன் முன்னே
கட்டிடுஞ் செயநீரிற் றிட்டமதாய். (201)

வகைக்கிரு காற்களஞ்சி அதை
வண்மைய தாகவரைத் துப்பின்பு
முந்திய உப்பதனை குகை
முட்ட அமுக்கி உலையில்வைத்து. (202)

ஊதிக் குகைபழுத்தால் அதி
லுற்றதோர் வெள்ளைக் கொடிவேலி
தோலுரித் துலர்த்திச்சற்று அதை
சூடுபறக்கவே வருத்திடித்து. (203)

தூளாக்கிக் கொண்டேதான் கொஞ்சந்
தூளெடுத்துக் குகைதனில் தூவவேதான்
உருகிநின் றுடுமப்பா அதில்
உற்ற பொரிகாரஞ் சற்றிட்டவே. (204)

கண்விட் டாடுமப்பா அதைக்
கரியிட்டுக் கிண்டித் தெளிந்தபின்பு
வட்டக் குழிபிடித்து அதனில்
வாய்ப்புடன் சாய்த்திட வட்டாகும். (205)

வில்லைய தாயிருக்கும் அது
மேலே கவசமுன் னேயரைத்த
கவச மருந்துதனை இந்தக்
கட்டிக்கு அங்கி நிசார்போட்டு. (206)

கவசம் பொதிந்தபின்பு நற்
கதிரவன் காண உலரவைத்து
நாலாநாள் தானெடுத்துப் பின்
நலம்பெற வேயுவர் மண்ணெடுத்து. (207)

படர்ந்த முடாவுடைத்து அதிற்
பண்புடன் நாழிமண் தான்பரத்தி
அதின்மேற் பேரண்டம் ஓ
டமுங்கப் பதித்ததி னுள்ளே தான். (208)

தும்பை யிலைச்சாறும் வெண்மை
தோன்றவே ஆழாக்குச் சாறும்விட்டுப்
பத்துக் களஞ்சியொற்ற அந்தப்
பாரக் கவச மருந்துதனை. (209)

அதனுள்ளே தான்போட்டு மேலும்
அருக்கன்பாற்றோடது மறைவாகச்
சந்துவாய் தெரியாமல் மூடித்
தானொரு சீலை வெருஞ்சீலை. (210)

செய்து மூடியபின் னுவர்மண்
செலுத்தி மேலுழக் குமிதனையும்
போட்டுப் பரத்தியபின் இதனைப்
புதுமை யுடனே மந்தையிலே. (211)

காட்டெரு வைப்பொருக்கி அதிற்
கட்டுக்கட் டாகவே அடுக்கிவைத்து
ரெண்டுமுழப் புடம்போட அது
நேர்மையுட னேவெந்து புடம்நீற. (212)

உப்புஞ்சுண் ணம்பாகும் பிதற்
குற்றவெள்ளை தும்பைப்பூப் போலாகும்
தண்ணீரில் நீறுமப்பா யிது
தானிந்தப் பச்சிலை தன்னிலேதான். (213)

தண்ணீர் பெருகுமப்பா முந்தச்
சாரங்கள் காரங்கள் தானுண்டது
பெலமாங் குருவாச்சு இந்தப்
பேருகள் பெற்றிடும் நீரதனை. (214)

எந்தச் சரக்கினிலும் இந்தச்சத்
தெடுத்துப் பூசிரவி முகத்திருக்கச்
சுண்ணம தாகுமப்பா யிந்தச்
சூட்ச ராஜகுரு வகைதனைக்கேள். (215)

முந்தின செயநீரில் கொஞ்சம்விட்டு
மூவிரண்டு சாமமது காயவரைத்துத்
திரிபலை யதின்சாற்றைப் பிழிந்து
சென்றிதுப்பை வேர்த்தயிலம் நன்றாயிறக்கி. (216)

இதுவெல்லா மொன்றாகச் சேகரித்து
இந்தச் செயநீர்த் தயிலமதில்
நலம்பெறுஞ் சவுக்காரத்தை அம்மியில்
நாட்டி நன்றாக அரைக்கவேதான். (217)

ஊற்று வெள்ளம்போலே நல்லெண்ணெயது
ஊற்றாரும் ஊற்றாரும் ஒக்கச்சிவந்து
ஒளிவிடு மப்போது இந்த
உலகத் தோர்களுக்குச் சொல்லாமல். (218)

எண்ணெய்கள் போனபின்பு சத்
திருந்தாலுஞ் சோதித் திடுவதற்கு
எந்த வகையதென்றால் இதனை
இந்தஉப்புச் சுண்ணமுடன் சீனச்சுண்ணமும். (219)

ஒன்றாக வேகலந்து மூன்
உற்றதோர் செயநீரை விட்டதனை
அரைத்து யெடுத்தேதான் முன்
அரைத்த சவுக்காரத் துக்குப்பூசி. (220)

விளக்கினில் வாட்டவேதான் நயம்
மேவுஞ் சவுக்காரம் வேர்வையைப்போல்
எண்ணெய்யெல் லாம்வடியும் பின்
னிந்தச் சவுக்கார வெள்ளையிலே. (221)

காரசா ரத்தின்வகைகேள் பின்
கரியுப்புச் சுண்ணமும் சீனக்காரத்தை
சுண்ணம்ப தாக்கிவைக்கும் நல்ல
சூடன்கட்டிக் காரந் துருசதுவும். (222)

வெள்ளைய தாகுப்பா கொஞ்ச
மீய்ந்திடப் பஞ்சச் சுண்ணும்பு
முந்தின செயநீர்விட்டுப் பத
முள்ளிட நன்று யரைத்தேதான். (தந்தன) (223)

விருத்தம்.

அரைத்ததோர் மருந்துதன்னை அதில்யெண்ணெய் வாங்கப்போன்
கருத்துரை சவுக்காரத்தைக் கவசமாய்ப் பொதிந்தபின்பு
உரித்தான உவர்மண்ணுள்ளே உற்றதோர் கவசம்வைத்துச்
சிறக்கவே யெருவைப்போட்டுத் திடங்கோழிப் புடமாய்ப்போடே.

வேறுவிருத்தம்.

போட்டபின் னுரி நீறிப் போனபின் புடத்தைப் பேர்த்துச்
சூட்டிடுங் கவசத் தோடு சுண்ணமா யிருக்கு மப்பா
வாட்டங்க ளில்லை யிந்த வருசவுக் காரச் சுண்ணம்
பூட்டிய உப்பி னுலே புகழ்பெற்ற குருவா னுரே. (225)

நோண்டிச்சிந்து.

சவுக்காரச் சுண்ணும்பும் சுண்ணந்
தானுஞ் சரியிடையாய் மஞ்சாடி
வீதமொடு துருசுக்குப் பூசியே
வெயிலிலே ரெண்டுநாள் தானிருக்க. (226)

சுண்ணும்ப தாயிருக்கும் அரிதாரச்
சுண்ணம் சவ்வீரம் பொரிகாரம்
இந்தமுறை வீதமப்பா சுண்ண
மென்கிற பதினொரு சுண்ணும்பும். (227)

ஒவ்வொன் றுயெடுத்து அதை
உற்ற சரியிடையாய்த் துண்டுதுண்டாய்
வகைவீதம் பொடிபண்ணி அதை
வளமாகத் தேங்காய் தன்னிலேதான். (228)

கொள்ளவொன்றுய்ப் போட்டரைக்க இது
குருவாதி குருவாகும் வேதையப்பா
மஞ்சாடிச் சுண்ண மெடுத்து வீரம்
வங்கமுங் கார முடன்ரசமும். (229)

நிமிளை மனேசிலையும் நாகம்
நிகரிலா லோகந்தங்கம் சுண்ணும்பாம்
ஒன்பது சுண்ணும்புக்குஞ் சரிவீதம்
ஒன்பது களஞ்சி சுண்ணும்புமொன்றுய். (230)

கூட்டிக் குருவொருமா சேர்த்துக்
கூட்டி நவச்சாரங் களஞ்சுகூட்டிப்
பீங்கானில் வைத்திருக்க அது
பேதமில் லாமலே மூன்றுநாள். (231)

தண்ணீ ரதாம்காந்தம் நாகம்
தண்ணீராம் லோகமுந் தண்ணீராம்
தாளகச் சுண்ணமதைக் கொஞ்சந்
தனிவெள்ளி யிற்கொடுக்க ஒன்பதரை. (232)

மாத்தது தப்பாது சுண்ண
மனேசிலையில் பற்பம் ஒருமாவிடை
செம்பு தனிற்சேர்க்க வய
தெட்டரை தீர்க்கமப்பா லோகச்சுண்ணம். (233)

தன்னைக்கா ரீயமுருக்கும் முகத்தில்
தானீயப் பத்தரை தப்பாது
சவ்வீரச் சுண்ணும்பு வெள்ளீயந்
தனிலீய வெள்ளிக்கு வயததுகேள். (234)

சொல்லுகி றேன்வேதை வெகு
சுகமா யிருபத்தைந்து மாற்றுகும்
இந்தவெள்ளி தன்னிலேதான் காந்தநீரை
இனிமையாய் வேதை முகங்கொடுக்க. (235)

சத்தியண்ட பேதியப்பா இதுவெல்லாந்
தானே யெனதுமன தாரக்கண்டேன்
பொய்யல்ல மெய்காணும் ஒருவன்
பொய்யென் றிதனைச்சொல் வானுனல். (236)

சண்டைக்குத் துசங்கட்டுவேன் வாயினிற்
சரியான மண்ணடித்து மண்டையுடைப்பேன்
என்வேதை யணுவளவு பொய்
யில்லையென் றேதுசங் கட்டிவிட்டேன். (237)

சித்தர் முனிவர்களும் ரிஷிகள்
செய்வேதை யெதுவேணும் பொய்த்தாலும்
இரவிமதி தெற்கு வடக்கு ஆனாலும்
என்வேதை யொருக்காலுந் தப்பாது. (238)

பொய்யல்ல உமையறியச் சிவனறியப்
புவியோர் மெச்சுங்குரு தானறியச்
செகத்தோர்க்குச் சொல்லிவிட்டேன் வகையுடன்
செய்து முடித்துக்கொண்டு தெரிந்திடுவாய். (239)

தமரிகற்பம்.

அற்புதம தாகவொரு மருந்து
அரைகிறேன் இன்னதென்று தெரிந்துகொள்ளும்
கற்பமொன்று விள்ளுகிறேன் நல்ல
கற்றூழஞ் சோறெடுத்து விஸ்தாரமாய். (240)

திரிகடுகு பொடிபண்ணி வெருகடி
தீர்க்கமுடன் கற்றூழஞ் சோற்றுடனே
பிரட்டியே தின்றுவரக் காயம்
பிலக்குமப்பா நரை திரைமாறும். (241)

சித்தருக்குச் சித்தனப்பா பர
தேசியர்க்குப் பர தேசிகனும்
ஞானிக்கு ஞானியப்பா அஞ்
ஞானிக்கஞ் ஞானியாய்த் தோணுமப்பா. (242)

இல்லத்துக் கில்லனுமாய்க் கோடிவய
திருப்பான் பதினறு வயததுபோல்
இதுவொரு வருடங்கொண்டால் இவனுக்
கிப்பிறவி போகப்பிற் பிறவியில்லை. (243)

தேவலோகம் நாகலோகம் முழுதும்
தேவ னிவனென்றே செப்பலாகும்
நோாக வேதோன்றும் மலம்
நீர்விட்ட இடங்களில் வர்ணம்பேதிக்கும். (244)

சுழிமுனைதிறக்க.

அமிர்தம் ரசத்தைக்கட்டும் அவன்
அவனியிற் பேர்பெற்ற சித்தனப்பா
தலைமே லிருக்குகற்பம் அதற்குத்
தானே சிறகுமுண்டு வாலுமுண்டு. (245)

பிறக்கும்போ தடைத்ததப்பா இனிப்
பின்னிறந்து போகும்போது திறப்பதில்லை
அரைக்கத வுள்வாசல் ஐந்தும்
அடைத்ததைத் திறந்தா லிருப்பார்கள். (246)

5

சித்த ரிஷிகளெல்லாம் யோகத்திற்
திடங்கொண் டிருப்பார்கள் சடம்போட்டுத்
தலைகீழாய் நின்றுபார்ப்பார் கழுத்துச்
சரத்திற்குங் காலுக்கும் ஒன்றாய்மூடி. (247)

கண்ணிரண் டையுமூடிக் கிடந்து
கலையமு தம்முதிக்கு தில்லையென்று
பூதத்தைப் பின்னுங்காலும் பெருவிரலைப்
பொருந்தவே கட்டியதை மாறிப்பிடித்து. (248)

திட்டியி னாற்பார்ப்பார் யோகத்
திருந்துமே நோக்குவா ரிரவுபகல்
உற்பன கபாலவாசல் திறக்க
ஒற்றைக்கால் தவசிருந் தொருகாலை. (249)

மேற்றாக்கிக் கழுத்துக்குள்ளே அமுக்கிக்கை
விரைவாகப் பெருவிரலில் பூமியிலூன்றித்
தவமது செய்திருப்பார் யோகந்
தான்செய் திருந்திடினும் அமுதம்வரா. (250)

மண்டலம் ஆகாரம் அருந்தாமல்
வத்தி வரண்டுமேனி யுலர்ந்திருப்பார்
சிரத்தில் வருமமுதம் பின்னுஞ்
சீராய்க் கபாலவழி வீழாது. (251)

அமுதமிறங்கக்கற்பம்.

இப்படிக் கொற்றஅமுதம் உதிரத்தி
லிறங்கிடும் வகையொன்று சொல்லுகிறேன்
ஆவின்நெய் சுத்தநெய்யாய் ஆழாக்கு
அன்பாகப் பீங்கானில் வாங்கிவைத்து. (252)

கையாந் தகரைதனைப் பிடுங்கிக்
கற்பமது கொள்ளுதற்கு நன்றாயரைத்துச்
சம்பழத் தளவுருட்டி நெய்யுடன்
சரியாய்க் குளப்பியே கொதிக்கவைத்து. (253)

சிவந்த பதத்திறக்கி அதனைச்
சிறப்பாகப் பீங்கானில் விட்டுநன்றாய்
வண்டுகட்டி வைத்துக்கொண்டு சிவனை
மனதில் தியானித்துப் பத்தியதாய்ப். (254)

உதையந் தனிலெழுந்து பருதி
உதிக்கமுன் காலைக் கடன்முடித்து
யோக மதுபுரிந்து யெங்க
ளுமையாளோ பிரதட் சணம்புரிந்து. (255)

கற்ப மதையெடுத்துக் கிழக்குமுகங்
கட்டாக வேயிருந்து திட்டமுடனே
பரமனை மந்திரத்தால் தியானித்துப்
பண்பாகச் சிவசிவா வென்றுசொல்லி. (256)

வலதுகைப் பெருவிரலால் அம்மையை
மந்திரத்தாற் செபித்து விந்தையுடனே
இடமது மேல்வாசல் கண்டு
இனிமையாய்த் தொட்டுவைநீ வாசலினில். (257)

வலங்கொண்டு சுற்றிவர நாலுதரம்
வண்மையுடன் தொட்டுத்தொட்டு வாசலிலே
நலமுடன் தான்தடவிப் பின்பு
நன்மையுடன் குகைவாசல் தன்னிலேதான். (258)

தடவின பின்புதானே ஒரு
சாமமட்டும் பட்டினி யாயிருந்து
திடமுடன் அப்பாலே பசிதீரத்
திறமுடன் சாப்பிடலாம் உறமுடனே. (259)

பத்தியம் புகைபுளியைத் தள்ளிப்
பசுவின் மோர்விட்டுச் சாப்பிடலாம்
மத்தது ஆகாது ஒரு
மண்டலங் கழித்பின் பத்தியமில்லை. (260)

கற்பமதைக் காலமேதான் மண்டலங்
கணக்காக வலமாகத் தடவிவர
மேற்வாசல் திறக்குமப்பா இன்னம்
வேண்டிய விதிகளுஞ் சொல்லுகிறேன். (261)

கால்மண் டலங்கழித்தால் தனியே
கதவுந் திறக்குமப்பா பூட்டுகள்விட்டுத்
திறந்து ஒருவாசல் அமுதம்
சிந்தியே வரும்பின்பு நாலுவாசலும். (262)

ஒருமண் டலந்தடவ நாலுவாசு
ஹுடனே திறந்திடுந் திடமுடனே
பொய்யல்ல மெய்யிதுவும் செய்தறிந்து
புகழுடன் யாருக்குஞ் சொல்லாதே. (263)

மண்டல மொன்றுகொள்ள இடையிலே
மறந்து விடாதேசொன்னேன் திறந்தகதவு
உறைந்தங்கே யடையுமப்பா தேவ
ரும்பர்க ளாலுமிதை விள்ளப்போமோ. (264)

பானங்க ளறிய வென்றால் கேளுங்கள்
பட்சமுடன் சொல்லுகிறேன் நிச்சயமதாய்
இறவாம லேயிருக்கக் கற்பவகை
இயம்பினேன் திருமூல ரருளாலே. (265)

கொங்கணவர் கொண்டதோர்கற்பம் இதனைக்
குவலயத் தோர்களும் அறியார்கள்
காசினியி லுள்ளசித்தரும் தெரிந்துக்
கற்பமது தடவியே விற்பனர்களாய். (266)

இறவாம லிருந்துவிட்டார் கற்பத்தால்
இருந்தாரே கோடி ரிஷிகளுந்தான்
பேருபெற் றூரிவர்கள் வெகு
பிரபல மாயிருந்தார் கிரிதனிலே. (267)

கற்ப மதைமறந்தோர் இந்தக்
காசினி தன்னிலே யோகியென்று
பெண்ணாசை தனில்விழுந்து புவியிற்
பெரியோ னெனவே பேரும்வைத்து. (268)

சடைமுடி தான்வளர்த்துக் காவிகள்
தானணிந்து யோகத் தண்டும்பிடித்துக்
காதிற் குழைபூண்டு விபூதியைக்
கணக்காக யுத்தள மாகப்பூசி. (269)

உலகில் வயிற்வளர்த்து இறந்து
உடனே பிணமாகிச் சடத்தைவிட்டுப்
போனார் வெகுபேர்கள் நல்ல
புத்திகெட்ட மடையரின் பேச்சைவிட்டு. (270)

மாதர் மயக்கம்விட்டு ஏறுவது
வல்லவர்கள் தன்மயமாய்ப் பரமனிடம்
நின்று பிறந்தாக்கால் வெகு
நிச்சய மாகவே கற்பங்கொள்ளுவார். (271)

புத்திதான் மடையருக்குச் சொன்னாற்
புத்திவரு மோவொரு நாளும்வராது
ஆயிரத்துக் கொருவனுமாய்ப் பிறந்து
அஞ்ஞானங் கடந்துமெய்ஞ் ஞானத்தடைவான். (272)

சித்தராய்த் தானிருப்பான் ராச்சியத்திற்
செகஜால னாயிருந்து உலகோர்க்கு
மருந்துகள் கொடுத்திடுவான் உலகில்
வல்லசித்த னாமென்று பேரும்பெறுவான். (273)

இப்படியா யெல்லோரும் சித்தனா
யிருந்தால் கைலையி லிடமேது
என்றுதா னீஸ்வரனார் கற்பத்தை
இகத்தோர்க ளறியாமல் மறைத்துவைத்தார். (274)

கற்பத்தை யறியாமல் வெகுபேர்
காலத்தைப் போக்கியே செத்தார்கள்
உரிவெண்ணெய் யறிவாரோ நல்ல
உற்பன கபாலமது கற்பமாமென்றே. (275)

சரியாய்த் தெரியாமல் பேரின்பவீட்டைத்
தானறி யாமல்வன வாசங்களுற்று
மாறிவரும் வாசியைக்கொண்ட யோகம்
வருந்தியே முடித்தார் பொருந்தியேதான். (276)

விருத்தம்-சிவவாக்கியர்பாடல் சந்தம்

மூலமாங் குளத்திலே முளைத்தெழுந்த கோரையைக்
காலமே யெழுந் திருந்து நாலுகட் டருப்பீரேல்
பாலனாகி வாழலாம் பரப்பிரம மாகலாம்
ஆல முண்ட கண்ட னாணை அம்மை யாணை யுண்மையே. (277)

திருமூலர்-பாடல் சந்தம்.

கண்ணுக்கு மூக்குச் செவிஞானக் கூட்டத்திற்
பண்ணாக்கி வைத்தபழம் பொரு ளொன்று உண்டு
அண்ணாக்கி னூடே யகண்டவெளி காட்டிப்
புண்ணாக் கீசன் பிழைப்பித்த வாறே. (278)

காட்சிவிருத்தம்.

எண்ணு மிரவருட மிருந்தார் சிவயோகம்
பெண்ணு ருடனே பிரிவி லிரட்டிப்பாய்
உண்ணு மலேச்சிவனர் யோகமது வாய்க்கும்
விண்ணோர்மங் கையரை மேவினர் யுகமே. (279)

யுகந்தப்பிப் போன ருற்றஉப மன்னியர்
செகம்பொன் வரையிற் றிடங்கொண் டிருக்கிறர்
சுகங்கள் பொருந்திய சூழ்போக நாதர்
மகன்கொங்க ணேடு வரையி லிருக்கிறேம். (280)

இருக்கிறேம் சட்டை நாதர்கோ ரக்கர்
பெருக்கிய வாசானைப் பேசி யிருந்தோம்
உருக்கிடு போக ருற்றிடு யுகத்தில்
கருக்குள மாதர்கள் கலியில்மா றுவரே. (281)

கலியுகதர்மம்.

கலியன் வந்தானென்று ககன ரிஷிகளும்
கலியனைக் கண்ணிலுங் காணுதிருக்க
கலியனை விட்டுக் கயிலைக்குச் சென்றே
கலியுக மட்டுங் கடுந்தூக்கங் கொண்டார். (282)

தூக்கங்கொள் ளென்று துணிந்தார்கள் யோகம்
ஆக்கங்க ளோடே அரைநா ழிகைதான்
காக்கவே அங்கு கலியுக மட்டும்
ஊக்கம தாகத் துறங்கினேம் நாமே. (283)

நாமே கலியுகம் சென்றபின் தூக்கம்
தாமே தெளிந்து தரையில் வருவோம்
ஓமே திரேதா யுகந்தனில் வந்து
பாமேவு நாத ரடிபணி வோமே. (284)

பணியெனக் காலங் கலியுகம் பாரில்
பணிபவர் சிந்தனை பாரி லடங்கா
பணியெனச் சொல்வர் பாரினிற் பெண்கள்
பணியநற் கற்புடைப் பாவையர்தாமே. (285)

பாவையர் தாமும் பகர்மண வாளரும்
ஆவ லுடனே அவர்க ளிருப்பது
சாவலுங் கோழியுந் தானது போலப்
பாவங்கள் பெற்றது பார்க்கவொண் ணுதே. (286)

பார்க்கவொன் றாத பிரமச் சத் திரியரும்
தூர்க்கப் படாத சூத்திரர் வணிகரும்
பார்க்கப் பதினெண் சாதியு மொன்றே
ஏர்க்கையா யவர்க ளிருந்துய் வாரே. (287)

உய்வார் பதினெண் சாதியு மொன்றாய்
செய்வார் விவாகந் திறமைய தாகத்
தொய்வா ரவரவர் தொல்புவி யெல்லாம்
கொய்வா ரமுதக்கள் குடித்திடு வாரே. (288)

கள்ளைக் குடித்துக் கணக்குக்கு மேலாய்
மெள்ளத் திரிந்து வேடிக்கை யாக
மள்ளர்களோடு மகிழ்ந்து யிருப்பர்
உள்ள படியா யுரைத்தேன் கலியை (289)

நேர்ண்டிச்சிந்து.

அடுத்துக் கலியுகத்தில் கொடிய
அநியாயம் மெத்த நடக்குமென்று
விடுத்துநான் சொல்லி விட்டேன் இந்த
மேதினி யிருக்கநீதி யில்லையென்று. (290)

நீதியில்லாக் கலியுகந்தான் தீரும்வரை
நிஷ்டையி லிருந்துவிட வேணுமென்று
பாதிமதி யணியீசன் திருவடி-
பதமல ரடியினி லிருந்திடவே. (291)

என்குரு போகநாதர் காலாங்கி
இன்ப முறும்நந்தி திருமூலர்
தன்மையுள சட்டைமுனிவர் சுந்தரர்
தன்வந்திரி இராமதேவர் மச்சமுனிவர். (292)

கொங்கணர் தன்னுடனே அனேகரிஷி
கூடியே கயிலாச கிரியில்வந்து
அங்கங்கு புடவுசெய்து இருந்து
அருந்தவத் தோடுநிஷ்டை புரிந்துகொண்டு. (293)

இருந்தார் குகைதனிலே கலியுகம்
எப்படியும் போகட்டு மென்றேதான்
திருந்துங்கிரே தாயுகத்தில் வெளிபட்டுத்
தீர்க்கமுடன் வந்திடுவர் ஏர்க்கையுடனே. (294)

ஓயிலாய்ச் சதுரகிரி மத்தியிலே
உற்பனம தாயமைந்த மேருகிரி
கயிலாச கிரியோரம் சந்திரகிரி
கப்புறம் பரமகிரி சூரியகிரி. (295)

கும்ப கிரியெனவும் மயேந்திரகிரி
கூடுஞ்சஞ் சீவிகிரி வெள்ளிகிரியும்
நம்புகின்ற பிர்மகிரியும் சந்திரகிரி
நாட்டும்வை குண்டகிரி குபேரகிரியும். (296)

சித்த கிரியதற்குப் பக்கமதிற்
சிறப்பா யமைந்தகை லாசகிரியின்
மத்தியி லேதானும் சித்தர்கள்
மகாதவத் தோடு வாசமுற்றூர். (297)

கும்ப கிரிதனிலே சிறந்த
குருமுனி வர்தனியே புடவுசெய்து
அம்புவி யோர்மெச்சும் பொதிகையி
னதிலிருந் தேயொரு வழிசெய்து. (298)

புலஸ்தியர் தன்னுடனே நிஷ்டை
பூண்டிருந் தாரெங்க ளாண்டவனும்
தலத்தி லுயர்ந்ததென்று சதுரகிரி
தன்னிலிருந் தார்சித்தர் நன்னயமுடன். (தனனம்)(299

விருத்தம்.

கலியன்வந் துற்றால் காசினி தனிலே
வலியாரு மில்லை மக்களு மில்லை
சலியாமற் பாவந் தான்செய்கு வார்கள்
மலிவா யுனக்கு வகுத்துச்சொன் னேமே. (300)

சொன்னமுன் வாசல் சூஸ்திரத் திறப்பை
நன்று யெடுத்து நான்சொல் லுகையில்
அன்றே கலியன் யாபகம் வந்து
சென்றே யெடுத்துச் செப்பினேன் நானே. (301)

செப்பின போது சித்தர்கள் நிலையும்
இப்புவி யோர்க்கு யெடுத்துக் காட்டி
எப்பொரு ளுக்கும் இதுமேல் வாசல்
முப்பொரு ளிதுவாய் முடித்துநீ கொள்ளே. (302)

கொள்வார் கற்பங் கூறும் வகையாய்க்
கொள்வா ராகிற் கோடி யுகமாய்த்
தள்ளுவார் யுகத்தைச் சாவுகள் போச்சு
மெள்ளவே கபால மேல்வாசற் செய்தியே. (303)

இஞ்செய்தி யப்பா வியம்பக் கேள்நீ
வஞ்சிய ராசை வையாதே மண்டலம்
பஞ்ச வாசல் படீரெனத் திறந்தபின்
மிஞ்சிய வனிதையை மேவலாம் பாரே. (304)

மேவுவ தல்லால் வினைநினை யாதே
சாவில்லை சொன்னேன் தரணியுள் ளோர்க்குப்
பூவினில் நாரும் பொருந்தி யதுபோல்
நாவியில் லாது நரைதிரை மாறுமே. (305)

மாறுவ தோடு வரும்பசி யற்று
தேறுஞ் சரீரம் செக்கச் சிவக்கும்
ஊறிய அமுதம் உபரசங் கட்டும்
நீரிலும் நடக்க நிசம்வல் லோரே, (306)

வல்லவ ரர்வர் வயது கணக்கில்லை
வல்லா ருடைய பலமூத்தி ராதிகள்
பல்லா யிரலோகம் பட்டிடம் பழுக்கும்
கல்லாத வித்தையுங் கற்றுணர் வாரே. (307)

தேவதாளிக்கற்பம் (வேறு விருத்தம்.)

தேவதா ளியின்றன் கற்பம் சேர்பூர்வத் தட்டமீயும்
தாவுள்ள சுக்கில ட்சஞ் சதுர்த்தசி யிரண்டு மாகும்
பாதாள மூலி தானும் படர்ந்திருப் பதிலே சென்று
சீதள மூன்று முப்பிர தெட்சணம் பண்ணிக் கொண்டே. (308)

பண்ணியே நமஸ்க ரித்துப் பரிவுடன் மந்தி ரந்தான்
எண்ணியே ஓம்நமோ பகவதே-ஈசா செயம்பூ நாய
வெண்ணுமே தேவ தாளி நமாய சுவாகா வென்று
நுண்ணிமை யாகத் தானே நூற்றெட்டு உருச்சேவிப்பாய். (309)

சேவித்தே நெய்வேத் தியங்கள் சிறப்புடன் தீப தூபம்
பாவித்தே வடக்கு நோக்கிப் பண்புடன் கிரிகித் தேதான்
சீவிப்பாய் சூர்ணஞ் செய்து சேர்புதுக் கலசத் திட்டு
ஆவிக ளகலா தற்கு அதுவெரு கடியாய்த் தானே. (310)

வெருகடி தன்னை நெய்யில் விசையுடன் குளப்பிக் கொண்டு
ஒருதரம் மண்ட லங்கொள் உற்றதோர் தேக சித்தி
வருடமோ மூன்று றப்பா வச்சிர தேகங் கண்டாய்
புருடரிற் காம னொப்பாம் புதுமையாம் புவியு ளோர்க்கே. (311)

புவியுள்ளோர்க் குண்மை யப்பா புகலுவே னின்னங் கேளாய்
சுவியொரு வருடங் கொள்ளச் சுத்தியாஞ் சித்தி யாவான்
கவிசுரம் பாடு வான்காண் கெவுனமுங் கதியாய்ப் பாய்வான்
தவியாம லாயிரங் கோடி தான்வய திருப்பான் பாரே. (312)

ஆயிரம் வயதல் லாமல் அஷ்டமா சித்தி யுண்டாம்
ஓயிலிச் சிலைய தன்னை யுதரியே கழுவிப் போட்டுத்
தூயதோர் சாற்றை வாங்கிச் சுகமுடன் சுண்டக் காய்ச்சி
நேயமா யுழக்குச் சாறு நித்தியங் கொண்டு பாரே. (313)

கொண்டிடத் திங்க ளப்பா குறைவில்லை காந்தி யுண்டாம்
பண்டுபா தாள லோகம் பரிவுடன் தெரியு மப்பா
அண்டமே லவனுக் காயிரம் யானையின் பலமுண் டாகும்
உண்டிடு யிந்த வீதம் ஓரஞ்சு மாதங் கொள்ளே. (314)

கொள்ளப்பா பிர்மா விஷ்ணு கோமளை மேவு ருத்திரன்
ஒள்ளியே தேவர் தம்மை உசிதமாய்க் காண லாகும்
வள்ளலே பத்து நூறு மார்க்கத்தில் வருவோர் தோற்றும்
மெள்ளவே யுனக்காய்ச் சொன்னேன் வியப்புடன் நன்றாய்க்கேளே.

கேளப்பா வேதை தானும் கிடைத்ததோர் கற்பத் தாலே
நாளப்பா இவனுக் குந்தான் நமனுமே பயந்து போவான்
வேளப்பா தேகந் தானும் மிகவேதை தங்கந் தங்கம்
ஆளப்பா வச்சிர காய மாகுமே அவனுக் கேதான். (316)

அவனுடல் மூத்தி ராதி அட்டலோ கங்கள் வேதை
சிவனுட மருக னென சித்தச னிவனென் பார்கள்
தவவுடம் பதனை லிந்தத் தாரணி யுள்ள பெண்கள்
இவனுட னழகி னாலே யவர்களும் மயங்கு வாரே. (317)

மயங்குவார் தேவ லோக ஸ்திரீகளும் மதனை மென்று
மயங்குவார் வித்தி யாத ஸ்திரீகளும் மகிழ்ச்சி கொள்வார்
மயங்குவார் அப்சர ஸ்ரீகளும் வந்து பார்த்து
மயங்குவார் ரதியிந்திராணி மாதரும் பணிவார் பாரே. (318)

பாரப்பா சூதங் கட்டப் பட்சமா யொன்று கேளு
விரப்பா தாளிச் சாறு விட்டுணு கரந்திச் சாறு
சோரப்பா ஒன்றாய்க் கூட்டிச் சுருக்கிடச் சூதங் கட்டும்
ஆரப்பா சொல்லப் போரா ரடையலாம் சித்தி பாரே. (319)

அழுகண்ணிக்கற்பம்.

பாரப்பா தந்தி மூலி பச்சிலை நாலு வர்ணம்
ஆரப்பா அதுக்கே பேர்தான் அழுகண்ணி யென்றுஞ் சொல்வார்
சேரப்பா யிலைக் கிலைதான் செலம்விழுந் திருக்கு மப்பா
சாரப்பா யிலையைப் பார்த்தால் சணப்பிலை போலே தோன்றும். ()

தோன்றிய மூலி வாங்கச் சொல்கிற வழியைக் கேளு
ஈன்றிய பூருவ பட்சம் இந்துபூ ரணநா ளேகி
நீன்றிய சமூலம் வாங்கி நேர்மைசூ ரணமுஞ் செய்து
ஊன்றியோர் வெருக டிதான் உத்தம நாளிற் கொள்ளே. (321)

கொள்ளப்பா பாலுந் தேனும் நெய்யுமே கூட்டிக் கொண்டு
உள்ளதோர் வருடங் கொண்டால் உற்றதோர் சித்த னாவான்
வள்ளலே புளியுப் பைத்தான் மறந்திடு வெயிலா காது
கள்ளமாங் காற்று காது கடுங்குகை தன்னைக் காரே. (322)

காற்றுகாப் பத்தி யந்தான் கருத்துடன் பசுநெய் பாலும்
வேற்றொன் றுங் கூட்ட லாகா விரிநரை திரைகள் மாறும்
மாற்றிடுந் தேகந் தானும் வச்சிர காய மாகும்
நூற்றுக்குப் பத்தா குந்தான் நுண்ணிமைக் கற்பந் தானே. (323)

கற்பந்தான் கொண்டார் பூத-கணநாதர் கணங்கள் தேவர்
சற்போசற் போவென் றேதான் சகலருந் தொண்டு செய்வர்
வெற்படை ஏம னோடு மிருகஜா திகளாற் கொல்கா
மற்புள யிரவி கண்ட பனியென வாங்கிப் போவார். (324)

போவதார் சித்தர்க் கெல்லாம் புகழ்பெறச் சித்த னாவான்
ஆவதோ ரிரதஞ் சாற்றால் மத்திக்கத் திரளு மப்பா
ஓவதோர் குகைக்குள் வைத்து ஒருசீலை மண்ணுஞ்செய்து
பாவுடன் புடமே போடப் பழிப்பில்லாக் கட்டி யாமே. (325)

கட்டின சூதந் தன்னைக் கதிப்புள தகடாய்த் தட்டி
விட்டதிற் சென்ன நாரி வேர்தனை யரைத்துப் பூசித்
திட்டமாய்ப் பூசிப் பூசித் திரிபுடம் போட்டுச் சென்றே
சுட்டதோர் முருக்கம் பூப்போற் சூதச்செந் தூரமாமே. (326)

செந்தூர மொன்று வெள்ளி யிருபதிற் சேர்க்க வேதான்
மைந்தனே கேளு மப்பா வகையுள பத்து மாற்று
விந்தையாய் ரசத்தைப் பின்னும் விளங்குமிச் சாற்றி னாலே
தொந்தமாய் மத்தித் தேதான் சொல்லுவேன் வேதை கேளே. (327)

கேளப்பா செம்பிற் றாக்கிக் கிரிகையோர் புடமே போட
வாளப்பா சுத்தத் தங்கம் பத்தரை மாற்றுக் காணும்
மீளப்பா கெந்தி தன்னை விருப்பமிச் சாற்றி னாலே
சூளப்பா சுருக்குத் தாக்கச் சுடர்மணி யாடும்பாரே. (328)

ஆடிய கெந்தி யொன்று ஐம்பது வெள்ளி தன்னில்
நீடியே போடத் தங்கம் நேர்மையாய்ப் பத்துக் காணும்
நாடிய யிலைய ரைத்து நாகத்திற் பொதிந்து பின்பு
தேடிய நாகங் கட்டும் செம்புட னுருகும் பாரே. (329)

உருகிய போது நாகம் ஒன்றிடில் மாத்து எட்டாம்
பெருகிய வீரங் கட்டும் பெலமான வெள்ளீ யத்தில்
உருகிய போது வீரம் ஒன்றிட வயது தானும்
அருளுட னிருபத் தஞ்சு மாற்றென அறிய லாமே. (330)

அறியலாந் தளவாய் சுத்தம் அரிதாரஞ் சிலையுங் கெந்தி
வெருவிய கெவுரி சிங்கி முடிதாரங் கிரிகை வேண்டி
செருவியே ஓரிடையாய்ச் சேர்த்தரை மூலிச் சாற்றால்
சுருதியா யரைத்து அந்தத் தகட்டினிற் றடவச் சொல்லே. (331)

சொல்லென்றார் புடமே போடச் சோதியாந் தங்கச் செம்பாம்
நில்லென்று நிறுத்துஞ் செம்பு நிசத்தங்கச் செம்பின் வேதை
நல்லதோர் வெள்ளி நூறு நலமதா யுருகும் போது
செல்லவே தங்கச் செம்பு ஒன்றிடச் சதமாம் வேதை. (332)

சதமென்றா லாயி ரத்தெண் மாற்றுமே தப்பா துண்மை
சதமுள்ள கால மெல்லாம் மூலிகை தப்பா தப்பா
சதமுள யிந்த வேதை தப்பாமல் மூலர் போகர்
சதமுள்ள சட்டை நாதர் கொங்கணர் சதாவுங் கண்டார். (333)

நாகதாளிக் கற்பம்.

கண்டதோர் நாக தாளிக் கடையாளங் குங்கு மப்பூ
விண்டதோர் வெற்றி லைபோல் மிகயிலை யிருக்கு மப்பா
எண்டிசை யிரண்டு பேராம் இயல்நாகம் பீஸ்வ ரியாள்
உண்டிடச் சூர ணத்தை உசிதமாய்ப் பொடித்துக் கொள்ளே. ()

கொள்ளப்பா பொருந்தும் நாளிற் குணமதாய் வெருக டிதான்
தெள்ளப்பா தேனும் நெய்யும் தினங் கூட்டிக் கொள்ளு மப்பா
எள்ளப்பா நோய்கள் நாலா யிரத்துநா னூறுந் தீரும்
வள்ளலே மண்ட லந்தான் மகிழ்வுடன் தின்று பாரே. (335)

தின்றிட நரைகள் மாறுந் திரையது விழுகா தப்பா
துன்றிடா வாயி ரந்தான் வயதெனச் சொல்ல லாகும்
நன்றுடன் மூன்று மாதம் நலம்பெறக் கொள்வா னாகில்
சென்றிடு சத்த லோகந் தெரியும்பா தாளம் பாரே. (336)

பாரப்பா தேகந் தேவர் பரமுள்ள தேக மாகும்
காரப்பா சாஸ்தி ரத்திற் கருத்துள னிவனே யாகும்
வாரப்பா அவனைக் கண்டால் வாசுகி யனந்த னோடு
சாரப்பா தட்சன் சங்கு பாலகன் குளிக னோடே. (337)

குளிகன்கார்க் கோடன் பற்பன் குலமகா பற்பன் திக்கும்
பளிகனு மட்ட நாகம் பயந்தது இடத்திற் சேரும்
வெளியதோர் வருடங் கொண்டால் மிகுமஹா சித்த னாகி
ஒளியிடுஞ் சுவாசத் தாலே உலகிற்சஞ் சாரஞ் செய்வான். (338)

சஞ்சார தியானத் தாலே தரையெங்குந் திவ்ஷ்டி பார்ப்பான்
மிஞ்சிய தேவர் சித்தர் வித்தியா தரர்க ளோடு
கொஞ்சு கெந் தருவர் மாரன் கூர்கணை யாலே கூராய்ச்
சஞ்சீவி சூழ்வாள் சத்தி சதிருள வயதே தென்றால். (339)

வயததது ஆயி ரந்தான் மயமுடன் தரிக்க வேதான்
நயமுள முனிவர் சித்தர் நானிலந் தனிலுள் ளோர்கள்
சுயமதாய் அஷ்ட பாலர் சொல்லுமிந் திராதி தேவர்
செயமதா மரச ரோடு ஸ்திரீகளும் வணங்கு வாரே. (340)

வணங்குவார் விக்கி னங்கள் ஒன்றுமே வாரா தப்பா
சணம்பெரு வழியிற் றங்கத் தனிப்பய மில்லை யப்பா
குணங் கெடு சோரர் பின்னுங் கொடியதோர் சிங்கம் பூதம்
கணங்கள்வே தாள மெல்லாங் கானகம் புக்கும் பாரே. (341)

புக்கிடுஞ் சங்கு சக்ரம் புகழ்நாக பாசஞ் சூலம்
தக்கிடு செய்பா ணங்கள் தன்னினுற் கொல்லப் போகா
கக்கிஷ மூலிச் சாற்றால் ரசமது புடத்திற் கட்டும்
மிக்கதோர் நாகங் கட்டும் மீசோர யரைத்துப் பூசே. (342)

பூசியோர் புடத்தில் நாகம் பொன்போலக் கட்டுமப்பா
பாஷாணங் கெந்தி வீரன் பரிவுடன் சுருக்குத் தாக்கக்
கூசாமற் கட்டு மப்பா குடகரி தன்னி லாடும்
நேசமாய்க் குளிகை யொன்று நிசமதாய்ச் சொல்லக் கேளே. (343)

சொல்லக்கேள் ரசமுங் கெந்தி தூயவப் பிரகத் தோடு
நல்லதோர் மூன்று மொன்ருய் நாகதே மணியின் சாற்ருல்
வல்லதோர் மருந்து தன்னை மகிழ்வுட னேயப் போது
கல்வத்தி லரைத்து ருட்டிக் கட்டியே கொள்ளு வீரே. (344)

கொள்வதே மூன்று சாமம் கூறுட் னரைத்தே தானும்
கொள்வதோர் குகையில் வைத்துக் குறித்தொரு புடமே போட
ஒள்ளிய முடனே அட்ட லோகமும் பேதிக் குங்காண்
வள்ளலே வாயு வேகம் மனவேகம் கெவுன வாழ்வே. (345)

வாழ்வது மல்லா லட்ட சித்தியு மடைய லாகும்
தாழ்வில்லை நாட்டில் மாதர் கூட்டத்தே யில்லத் தோடு
வாழ்வதாய் மலைக்க வேண்டாம் மலமூத்தி ராதி வேதை
தேள்காலி பாம்பி னேடு சீர்விஷ மண்டி டாதே. (345)

அண்டிடா விஷஜெந் துக்க ளநேகமா மதிலொன் றேனும்
முண்டியே தீண்டி டாது மொழிந்தகல் வாக்குப் பொய்யா
வண்டர்கள் பொய்யென் பார்கள் மகிமையா ரறியப் போரூர்
தொண்டுசெய் தாசான் மூலந் தொட்டுக்காட் டிடவே தோன்றும்.

மலமூத்திர வேதை யுண்டாம் வளர்கோங்கின் பூவின் கற்பம்
புலமையாய்ப் பூசை செய்து பொடியாக்கி வடியுங் கொண்டு
நலமதாய்க் கவசந் தன்னில் நயமதாய் வண்டு கட்டிக்
குலசித்தி யாக வேதான் கொள்ளப்பா பொருத்தம் பார்த்தே. ()

பொருந்திய நல்ல நாளிற் புகழ்வெரு கடியாய்க் கொண்டு
மருந்திடு மாநெய் தன்னில் வளரிரு பதுநாள் மட்டும்
வருந்திடாப் பாலுஞ் சோறும் வளமையாய்ப் பின்னுந் தேனும்
திருந்தவே யிருபத் தேழ்நாள் தின்றிடச் செப்பக்கேளே. (349)

செப்பக்கே ளப்பா உண்மை தேவர்கள் வயதுண் டாகும்
ஒப்பக்கேள் பூமி தன்னி னுள்ளது வெல்லாந் தோன்றும்.
அப்பவே பெலமுண் டாகும் யானையின் மஸ்த துண்டாம்
ஒப்பமாய்ப் பின்னு மந்த உபர்பொடி யுகமை கேளே. (350)

உகமைசக் கரைதேன் நெய்யை யொன்றாக ரேகித்தேதான்
மகவனே யொருமா தந்தான் வளமதாய்க் கொண்ட பின்பு
சகலமுங் கற்ப மப்பா சாதமும் பாலுங் கொள்ள
மிகவரு ளிதுதான் கொண்டால் விஷ்ணுவின் வயதுண் டாமே. ()

வயதுண்டாம் பின்னுங் கேளு மருந்துடன் பாலுங்கூட்டி
மயமிரு பதுநாட் கொள்ள வச்சிர காயந் தேகம்
வயதுண்டாம் கணங்கள் தேவர் மைந்தனே தெரியும் பாரு
மயமதாய் நீயு மந்த மரத்துட பிசினை வாங்கே. (352)

வாங்கிமை பத்த வைத்து வளமான கண்ணிற் போடு
பாங்குள்ள தேவ ரோடு பரமுனி ரிஷிக ளோடு
பாங்குட னிதானஞ் சொன்னேன் பணிவிடை செய்வா ரப்பா
தேங்கம ழழகு மேவுஞ் சிவனுணை தப்பா தென்றே. (353)

என்றதோர் கற்பங் கொண்டா லிருக்கலாஞ் சாகா மற்றுன்
நன்றென்ற வாத வித்தை நடக்கவே சரக்கை வாங்கிக்
கன்றிடச் சுட்டுச் சுட்டுக் கரிகொண்ட காசுங் காணுர்
மன்றினிற் கற்பங் கொண்டால் மலசலம் வேதை யாமே. (354)

வேதைதான் காண வென்றால் விமலனைப் பூசை செய்வாய்
பாதத்திற் சிலம்பு கொஞ்சம் பரைபூசை பண்ணிக் கொள்வாய்
வேதியர் முனிவர் சித்தர் மெல்லடி பணிந்து கொண்டு
நீதமாஞ் சிதம்ப ரத்தை நித்தமும் பூசிப்பாயே. (355)

பூசித்தால் வாதங் காணும் பொன்னவ னடியே தோன்றும்
ஆசையே மிகக்கொ டுக்கும் அன்னையும் பிதாமற் றோரைத்
தூசியாய் நினைக்க வைக்கும் சுத்தசை தன்ய மாக்கு
மாசையை மலமா யெண்ணி மலையேறிச் செல்வார் மக்காள். (356)

மக்களே போக நாதர் மறை சட்டை முனிவ ரென்றுந்
தக்கதோர் கொங்க ணையர் தகுமூன்று பேரோ டுந்தான்
இக்கணஞ் சொல்லு கின்ற என்னோடு நால்வர் தம்மைச்
சிக்கென இவர்கள் தம்மைத் திடமுடன் பிடிப்பா யப்பா. (357)

பிடியப்பா வாதஞ் சித்தி பிறருக்குச் சொல்ல வேண்டாம்
படியப்பா சட்டை நாதர் பாட்டுகள் பால தாகும்
குடியப்பா அமுத மென்று கொங்கணர் சொன்ன நூலைப்
படியப்பா முதற்காண் டத்தைப் பாலுடன் பழம தாமே. (358)

பளபளப் பான நூலைப் பண்புடன் மனதிற் கொண்டு
நளபாக மிதுதா னென்று நன்மையாய் வாதம் பாரு
களவிலாக் கருக்க ளெல்லாங் கனவிலு மொளிக்க வில்லை
அளவதாய்க் கெந்த கத்தி னுண்மையை யுரைப்போன் பாரே. (359)

கெந்தகமெழுகு.

பாரப்பா கெந்த கந்தான் பரிவுடன் மெழுக தாகத்
தீரப்பா புதுச்சட் டிக்குள் தேங்காய்நெய் வடித்து விட்டு
வாரப்பா கக்க ரிக்கா யொன்றது வாங்கிக் கொண்டு
பேரப்பா யிரண்ட தாகப் பேர்பாதி பிளந்து கொண்டே. (360)

பிளந்துள்ளே வைப்பாய் கெந்தி பேதிக்கும் பூமா னாலே
இளகிய மெழுக தாக யீரஞ்சு பலமே வைத்துப்
பிளந்திட்ட காயை யொன்றாய்ப் பின்பதை மூடிப் பின்னும்
வளமாய்முப் புரியாம் நூலை வாய்பிளக் காமற் சுத்தே. (361)

சுத்திநெய்ச் சட்டி தன்னில் தொளாந்திர மாகத் தூக்கிச்
சித்தியா யொன்றே சாமம் தீயெரித் திடவே வெந்து
உத்ததோர் கெந்த கந்தான் உசிதமாய் மெழுக தாகும்
பத்தியாய் வெள்ளிக் கீயப் பத்தரை தப்பா தென்றே. (362)

துத்தம்.

என்றெனக் குமரிச் சாற்று விசைக்கின்ற உப்பு தன்னை
துன்றிட அரைத்து நல்ல துத்தத்துக் கங்கி பூட்டி
நன்றென உமித்தீ தன்னில் நாழிகை யிரண்டு வைத்துச்
சென்றபின் கவசம் பேர்த்துத் திடமதா யெடுத்துக் கொள்ளே. ()

கொள்ளப்பா கவசம் பேர்த்து மடல்தனைக் கொண்டு நல்ல
தெள்ளப்பா திரிகோ ணத்தின் சீர்தயி லத்தை யூட்டி
மெள்ளவே வெள்ளி தன்னை மேலும்நீ யெடுத்துக் கொண்டு
வள்ளவே களஞ்சிக் கப்பா மஞ்சாடி கொடுத்துச் செல்லே. (364)

லிங்கக்கட்டு.

செல்லவே மாத்தி ராறு தீர்க்கமாம் கடைக்குச் செல்லும்
அல்லவே சாதி லிங்கம் அன்ப தாய்க் கட்டு தற்கு
நல்லதோர் நாவி தன்னை நன்றாய்ச்சம் பழச்சாற் றாலே
வல்லப மாய ரைத்து மகிழ்பொரிக் காரங் கூரே. (365)

கூருடன் கவசங் கட்டிக் கொள்கையாஞ் சிப்பி தன்னில்
மீரிய கவசம் செய்து வெயில்வைக்க வெண்ணெய் யாகும்
பாருள்ள கார வெண்ணெய் பகர்கெந்தி தனக்குப் பூசில்
வீருள்ள கெந்தி வெண்ணெய் விடையின்னஞ் சொல்லக் கேளே.

கேளப்பா கெந்தி வெண்ணெய் கிருதியாம் லிங்கத் திற்கு
ஏளப்பா பூசி வெய்யி லிருக்கவே விசையாய்க் கட்டும்
நாளப்பா தாள கந்தான் கயமுடன் கட்டு தற்கு
நீலத்தா லம்ப முந்தை நிதிபெறக் கொண்டு வந்தே. (367)

பள்ளுச் சந்தம்.

வந்தியோ அகப்பட்டு வந்தியோ
இந்தநே ரந்தனில் விந்தைய தாகவே
பந்த பாசம்நீக்கச் சிந்தை மகிழ்வொடு. (வந்தி) (368)

வந்தி டும்பழம் படியரை யாகவும் ஆறு
மாத்தைக் காடிதா னொருபடி யாகவும்
நொந்தம தாக்கவே பழத்துடன் காடியைச்
சுகமாக விட்டதை யிடித்துச் சாறெடுத்து. (வந்தி) (369)

சுருக்கிட அரிதாரந் துடிக ளடங்கவே
தோய்த்துத் தோய்த்து அதைப் பின்னுஞ் சுருக்கிடப்
பெருக்கமா யிருந்தசாறு சுருக்கம தாகவே
பேணியே சுருக்கிட அரிதாரங் கட்டிடும். (வந்தி) (370)

தண்ணியி லுப்புதன்னை தண்ணீரி லேகரைத்துச்
சரியாக வேஅதனைத் தானே தெளியவைத்து
தண்ணீர்க்குச் சரியான கரியுப் பதையரைத்துத்
தடையின்றிக் காடையோர் புடமிடக் கட்டிடும்.(வந்தி)(371)

கட்டின உப்பதனை யரைத்துக் குகைபிடித்துக்
கதிப்பான கெந்தியை யரைக்கஞ் சியெடுத்துத்
திட்ட முடன்மடல்த் துருசும் அரைக்களஞ்சு
சேரவொன் றாக அரைத்துப் பொடிசெய்து. (வந்தி) (372)

பொடியைக் குகையில்வைத்துப் புகழும் நாகம்நடுவே
போட்டுக் குகைவாயில் சீலைமண் ணுஞ்செய்து
சடிதியா யுமியோட்டில் தானதை வைத்தூதச்
சரியா யுருகிக்கட்டும் சரியாகக் கட்டாட்டால் (வந்தி) (373)

வருங்காரங் கூட்டியே மலைக்கரி கலைப்போட்டால்
வகையா யுருகிக் கட்டும் வையகத் தோருக்கும்
ஒருவர்க்குஞ் சொல்லாதே உண்மை யிதுவப்பா
உலகத்தி லிதைச்சொன்னால் கொடிய பாவம்வரும்.(வந்தி) ()

வெண்பா.

தார மொருகளஞ்சி கெந்தகமோ தான்களஞ்சி
சேரப் பொடிசெய்து செப்பக்கேள்—பார
புதியதொரு வோட்டிற் பொடியதனை வைத்தூத
அதிகமுள தாந்தயில மாம். (375)

தயிலமதி லேதான் சாதிலிங்க மோர்களஞ்சி
ஒயிலாய்ப் பிரட்டி யுணர்ந்தால்—நயமாகக்
காந்தமோ ரோர்களஞ்சி கன்னிகைச்சாற் றாலரைத்துத்
தீந்த கவசமிட்டுச் செல். (376)

கவசம் பொதிந்தபின்பு காரணச் சீலைமண்
அவசம் வாராமலதைக் கட்டிக்—கெவன
உமிப்புடமே காடை யொருபுடமே போட்டுக்
கமழாமல் லிங்கமது கட்டும். (377)

கட்டுமெப் பாமடையன் கட்டக்கே ளுத்தமனே
மட்டிலடங் காதமுரி வாங்கியே—திட்டமுள்ள
மஞ்சளரைத் துக்கலக்கி நாலுநா ளூறமடல்
துஞ்சவே போட்டுவிடச் சொல். (378)

போட்ட மடலெடுத்துப் போதமுள்ள சூடனைத்தான்
ஆட்டியே மேற்கவச மாக்கிப்பின்—காட்டிலுள
உள்ளிக் கிழங்குள்ளே உற்ற கவசமிட்டுத்
தெள்ளியதோர் சீலைமண் ணுஞ் செய். (379)

சீலைமண் செய்தே திறமாய் முழப்புடந்தான்
சீலமுடன் மூன்றுபுடஞ் சென்றிடவே—இயல்புடனே
கந்த மடையனுட கட்டெவர்க்கும் வாராது
விந்தையுள்ள செம்பினிலே வேதை. (380)

வேதாந்த நாடகச் சந்தம்.

வேதையாம் இதுநல்ல
வேதையாம் செய்த (வே)
வேதை யிதுவென்று விண்ணோர் களுமயங்க
ஆதியில் நான்செய்த அருமை யாகியதொரு (வே) (381)

வேதைய தாமண்ட மெழுகா கிடுமப்பா
ஓதும் பதினிதனை யொருபடி போல்வாங்கிப்
போத முள்ளதொரு புதுச்சட்டி தனில்விட்டு
நீதம தாகவே நேர்மை யுடனேவைத்து. (382)

புதிய தொருஅண்டம் வைத்துப் பின்னுங்கேளு
போத வெடியுப்புக் களஞ்சி நாலும்வாங்கிப்
பதிவான நமச்சாரம் பதமா யிந்தயிடை
பாரில் வளர்பூரம் யிந்த யிடையெடுத்து. (வே) (383)

ஈராறு களஞ்சியு மாட்டிப் பொடிசெய்து
இசைவாய்ப் பதினியிலே யிட்டு யிதைக்கிண்டி
வார முடன்சீலை செய்து கட்டிநன்றாய்
வளமாய்க் கதிர்முகத்தில் வத்தவே வைத்திட. (வே) (384)

வைத்த பதினியெல்லாம் வத்திப்பின் னுழக்காகும்
வளமாய் மெழுகாகும் மாகுரு வைக்கூட்ட
மெத்த வெடியுப்பு வீரனும் மெழுகாகும்
மீதில் நாகவேதை யொன்ப தரைகாணும். (வேதை) (385)

விருத்தம்

துருசது வெந்து நீறும் துடியுள்ள வீரன் றானும்
வருசையாய்ச் சூதமூன் றும் வகைசரி யிடையாய்க் கொண்டு
துருசது மெழுகை மாட்டித் தோன்றிடச் சீலை மண்செய்
பருசமாங் காடை யப்பா புடம்ரச மணியதாமே. (386)

பள்ளுநாடகம் வெண்ணிலாவே யென்ற சந்தம்.

துருசு மூன்றுகளஞ்சு ஒருகட்டி யாய்வாங்கி உப்பினாலே-நல்ல
துவர்ப்பிஞ்சு பாக்குவெற் றிலைசுண்ணமாகும்பாரு வுப்பினாலே
அரைத்துப்பணவிடை கற்பூர மதுகூட்டிவிடு உப்பினாலே-நீ
ஆதித்தன் முன்பாக மூன்றுநாள் வைத்துநில வுப்பினாலே. (387)

நாலாநாள் கவசத்தை வாங்கிடு சொன்னேன்நில உப்பினாலே-நல்ல
நாகங் களஞ்சியுந்தான் உருகும் போதுநில உப்பினாலே
பாலானவெள்ளைப்பா ஷாண மவ்விடையதாம் உப்பினாலே-அதைப்
பண்பாய்ப் பொடித்துத்துவப் பாகமுடன் நாகம்நீறும் உப்பினாலே

நாகம் நீற்றுக்குப்பாதி ரசம்விட் டரைத்திடுவாய் உப்பினாலே-வாங்
நாவி னமுதம்விட்டு நன்றா யரைத்தேதான் உப்பினாலே
பாகமாய்த் துருசுக்குப் பூசி யுலரவைப்பாய் உப்பினாலே-அதைப்
பகலவன் பார்க்கவது விரிவு பிறக்குமப்பா உப்பினாலே. (389)

விரிந்த விடைகளுக்கு மிகுத்த மருந்தைகப்பூசி உப்பினாலே நல்ல
விதமாகச் சீலைமண்தா னிதமாய்ப் பொதியும்நில உப்பினாலே
தெரிந்துமே பாங்கான சிட்டிவைத்து மேல்மூடி உப்பினாலே-வாய்
தெரியாமற் சீலைசெய்து அஞ்செருவிற் புடம்போடு உப்பினாலே. ()

சுண்ணந் துருசாலே சூதமும் பற்பமப்பா உப்பினலே நல்ல
சொன்ன அரிதாரங் கெந்தகம் சுண்ணமப்பா உப்பினலே
என்ன மூடன்தொட்ட சரக்கெல்லாஞ் சுண்ணமாகும் உப்பினலே
(இந்தச்) சுண்ணந்தா னெக்காலமும்பொய்யா துநன்னிலஉப்பினலே

விருத்தம்

மலவுப்பி னலே யப்பா நிதியுள்ள குருத்தான் பாராய்
நிலைதங்குங் குருவுஞ் சீனம் நிகழ்சுண்ணஞ் சரியாய்ச் சேர்த்து
நிலையாமல் வகைக்கு நாலு களஞ்சிதா னெடுத்துக் கொண்டு
பலிதமா யுப்பிலாத கஞ்சியிற் பொடித்துத் தூவே. (392)

தூவியே கிண்டித் தானே சுடரொளி தன்னி லேதான்
ஆவலாய் வைத்திரண்டு நாழிகை யான பின்பு
காவலுபத்து நாலு சரக்குமே நனைத்து வாட்ட
மேவியே குழைந்து நல்ல மெழுகதாம் வேதை யாமே. (393)

கெந்தக மெழுகின்வேலை.

கெந்தக மெழுகின்வேதை சொல்லுகிறேன்
கெந்தக மெழுகின் வேதை
கெந்தக மெழுகின்வேதைக் கிட்டித்திருக்கிதுகாண்
கெம்பீர முடனிந்த அம்புவி யோர்களுக்கு (கெ) (394)

விந்தை யுடனேயிந்த வேதையைச் சொல்லுகிறேன்
நந்தனவெள் ளாட்டினிலே அந்தக்கொ ளுப்பெடுத்து
நெய்யாக வேயுருக்கி நேர்மை யுடனெடுத்துப்
பய்யவே கண்டங்கத்திரி பாங்குள சாறுதன்னில் (கெ) (395)

பக்கமே சாய்த்திடு பாங்குள்ள நெய்யதனைக்
கக்கிஷ மென்றுநீ கலங்காதே மயங்காதே.
குட்டித்தக் காளிச் சாற்றில் கூறொரு பங்குதானும்
கெட்டியாய்க் கூட்டிடு கிலேசமில் லாமலே. (கெ) (396)

கணக்காக நெய்யதனிற் கற்பூரம் பாலதனை
இணக்கமா யொன்றாக யிட்டிடில் மெழுகாகும்
வெள்ளிதா னைன்பதுக்கு மெழுகு வொன்றுசேர்க்கக்
கள்ளமில் லாதவேதை கைமேலே யாச்சுது. (கெ) (397)

கலித்துறை.

அடிகொண்ட பச்சைத் துருசொரு கட்டியைத் தோய்ந்தெடுத்து
முடிகொண்டு நன்றாய் வெண்ணெய்யைக் கொண்டுநல் முக்கியதாய்
மூடியைப் பொதிந்து குகையில்வைத் தூத முழுதும்பின்பு
புடியபத்த தாம்பிர மாம்வைத்த செம்பின் பாகமிதே. (398)

இதுவென்ன செம்பொன் றுருக்கவொண் ணதிது வேதையப்பா
ழிதுவெட்டு நாகங் களஞ்சிரண் டாமிது சுத்தி செய்து
பதமிட் டுருக்க வயதேழு தாய்சரி பாகமுடன்
மதமான சூதத்தை யிட்டே யுருக்கவெட் டாம்வயதே. (399)

தங்கபற்பம்.

சென்றிடுந் தங்கத்தைப் பற்பமா தாகத் திறந்துசொல்வேன்
மன்றிடு அப்பிரக மாசாதி பத்திரி வண்மையுள்ள
மன்றிடு சித்தா மணக்குநல் முத்து வகைவகையாய்
ஒன்றரைக் களஞ்சி யெடுத்துவொன்றாக உணர்வுசெய்யே. (400)

உணர்வென்ன தேன்விட் டரைத்தேமுன் றோதிய தங்கத்திலே
தணித்தக டாகத தட்டிக்கொண் டேஅந்தத் தகட்டிலுறப்
பணிப்போலப் பூசிப் புடமூன் று போடவே பற்பம்தங்கம்
துணிவான சுண்ணத்தின் வேதைகள் தானிது சொற்படிக்கே. ()

கோவிலன் பாட்டுச்சந்தம்.

நாக மெடுக்கும் வகை சொல்வேனன் ஐய
நாக மெடுக்கும்வகை சொல்வேனன்
தாகம் வராமலே பாகம தாகவே
ஏகம தாகவி வேகமாய்க் கண்டதோர். (நா) (402)

வெள்ளறுரு வெட்டி வேகவைத்துச் சாம்பல்
உள்ள படியெடுத்து ஒரெட்டுப் படிகொண்டு
தண்ணீரி லேகரைத்துத் தானே தெளிவிருத்து.
நண்ணீரை வத்தவைத்து நன்றாக உப்பெடுத்து (நா) (403)

இரும்பி னரபொடியை யிதம்உப் பளவுபோட்டு
விரும்பிக் காரங்கூட்டி உருக்கிட யியமதாம்
வேசரி நீரிலேதான் குமரியின் சோற்றைப்போட்டு
வாச முடன்பிழிந்து வகையுடன் சாறெடுத்து. (நா) (404)

நல்லதோர் லோகத்தில் நன்றாய் யிதைக்கொடுக்க
வல்லதோர் லோகமும் மாத்துபத் தாகுமப்பா
கற்றாழை விழுசிம்புங் காரமு மேசேர்த்து
வற்றா தரபொடியும் வைத்துருக் கிடுயியம் (நா) (405)

ஓடுவடக் கிச்சாற்றில் உற்ற அரபொடியை
வடுவிலா மூன்றுநாள் வகையுட னறப்போட்டு
அந்த யிலேதன்னை அரைத்தா பொடியுடன்
இந்தக் குகையில்வைத்து இருந்தங்கே ஊதிட (நா) (406)

ஊதிக் குகைபழுக்க உண்மை யரபொடியும்
சோதிபெற் றிருந்திடுந் துய்யயிரும் பியமாம்
இந்த நல்லநாக மெடுக்கும்வகை யைச்சொன்னேன்
விந்தை யொருவருக்கும் விள்ளாதே பாகமதை. (நா) (407)

விருத்தம்.

அப்பனே நீற்றின் போக்கு அறியதோர் செயநீ ராலே
செப்பமாய்ச் சூரிய காந்தத் தீவிழச் சுண்ண மாகும்
ஒப்பமா யண்ட மப்பா உச்சித மெழுக் தாகும்
விப்புடன் கவர்கள் கோடி வேதையுங் கோடி யாமே. (408)

பள்ளுநாடகச் சந்தம்.

சதுரகிரி மேருகிரி யெங்களது நாடு
சட்டைமுனி தானிருந்த கயிலாச நாடு
மதுவொழுகும் யீஸ்வரனுர் வாழுமெங்கள் நாடு
மலைநாடு களிற்சிறந்த பொன்னம்பல நாடு
பதியுள்ள பரமகிரி யெங்களது நாடு
பத்தியுள்ள போகரிஷி வாழுமெங்கள் நாடு
கதிகொடுக்கும் பிர்மகிரி யெங்களது நாடு
காலாங்கி நாதருட பொன்னம்பல நாடே. (409)

கட்டளைக் கலிப்பா.

கார சாரந் துருசுடன் சீனமும்
கதித்திடும் அன்ன பேதியுங் கூட்டியே
வார மாக வகைக்கோர் களஞ்சியாய்
வண்மை யாகவே பீங்கானில் வைத்தேதான்
ஈரமீறிய சாணகந் தன்னிலே
இரும்புக் கிண்ணியை வைத்துப் பதித்துமே
ஆர மூன்றுநாள் தண்ணீருத் தாகவே
ஆதி யாகும்பொன் னம்பல நாடிதே. (410)

வெள்ளை நஞ்சுசவ் வீரமுங் காந்தமும்
மீறுஞ் சூட னெடுரெங்கும் வாங்கியே
வள்ள லேயிந்த அஞ்சு மருந்தையும்
வகைவகை வீதங் களஞ்சாக வாங்கிநீ
அள்ளி யேயிந்த அஞ்சு மருந்திலும்
அஞ்சு மஞ்சாடி தானே யெடுத்ததை
மெள்ள வேசெனீர் விட்டே யரைத்தப்பின்
மீறுங் காரங் களஞ்சிக்குப் பூசியே. (411)

பூசி யேபொரிக் காரத்தை யும்நல்ல
புத்தோட்டில் வைத்துச் சித்திய தாகவே
நேசச் சூரிய காந்தக்கண் ணாடியோர்
நெல்லுச் சாத்தள வுக்குமே கம்பினில்
ஊசல் கட்டிடத் திப்பட் டுலர்ந்திடும்
ஒரொரு சாமம் மூன்றுநாள் வைத்திட
வீசமாகிலு மேபிச காதிது
வேகங் கொண்டு கடுங்காரச் சுண்ணமே. (412)

இந்தச் சுண்ணமஞ் சாடியெ டுத்துநீ
இருந்த அஞ்சு மருந்து அவ் வீதமும்
முந்தின செய நீரைவிட் டாட்டியே
முழுதும் யீரங் களஞ்சிக்குப் பூசிடு
தொந்த மாய்முன் னிருந்த படியேதான்
சூரிய காந்தத்திப் பட்டிட வேசுண்ணம்
வந்த சவ்வீரச் சுண்ணமஞ் சாடியே
வளரு மாமெங்கள் பொன்னம் பலநாடே. (413)

மஞ்சா டிவீதம் அஞ்சு மருந்துமுன்
வைத்த சேனீரால் மாட்டி யரைத்திடு
கஞ்ச மீறிய தாளகத் திற்குமே
கவச மாகப் பொதிந்துமுன் போலவே
இஞ்சொல் வெய்யலில் மேற்கண்ட வீதமாய்
இருக்கச் சுண்ணம் அரிதாரம் பாரப்பா
அஞ்சு கின்ற துருசுக்குப் பூசவே
சொல்லும் பொன்னம் பலமெங்கள் நாடிதே. (414)

தாரச் சுண்ணமுன் னஞ்சு மருந்திற்கும்
சரியா யஞ்சுமஞ் சாடியுங் கூட்டியே
சேரப் பாஅந்தச் செயநீரை விட்டரை
தீர்க்கம் பச்சைத் துருசுக்குப் பூசிடப்
பாரப் பாநற் றிரவிகண் ணாடித்தீ
பட்ட போதினிற் பச்சை வெழுத்திடும்
ஆரப் பாயிதுக் கிடுள்ள சுண்ணந்தான்
ஆதி யாகும்பொன் னம்பல நாடிதே. (415)

தங்க மப்பா களஞ்சி யிதற்குமுன்
    தானே வாங்கி யுருக்கியே கொண்டுநீ
பங்கமில்லா ரசமோர் களஞ்சிக்குப்
    பரிவாய் கல்லி சிறட்டையி லிட்டுமே
தங்கத்தைத் தேய்க்கச் சூதத்தை யுமுண்ணும்
    சத்தி ருந்தாற்கு தப்புரம பாகவை
அங்கற் பூரச லாசத்து வோர்களஞ்
    சாகு மேற்பொன் னம்பல நாடிதே. (416)

பச்சை மீறுங் துருசு களஞ்சியும்
    பண்ப தாகப் பொரிகார மவ்விடை
இச்சை யோடு செயநீரா லாட்டியே
    இனிமை யாகிய தங்கத்திற் பூசிட
நிச்செய மாகப் புதுக்கல சத்திலே
    நிறைய வேநெல்லை முட்டவே போட்டுப்பின்
வச்சிடு தங்கக் கவசத்தை நீயுமே
    வாழ லாம்பொன்னி னம்பல நாடிதே. (417)

கவசம் வைத்த கலசத்தின் வாய்தனைக்
    கங்க ணம் போலச் சில்லொன்று போட்டு
திவச மன்றியோர் சீலைமண் ணுஞ்செய்து
    திறமாய்ப் பூமியிற் சென்று புதைத்திடு
அவசம் வாராமற் காத்தே யிருந்துபின்
    னைத் துவாதசம் நாளது சென்றிடத்
துவச மாக யெடுத்துநீ பார்த்திடு
    சொல்லு மம்பல நாடெங்கள் நாடிதே. (418)

கலசந் தன்னி லிருக்கின்ற தங்கத்தைக்
    கவசந் தன்னை யெடுத்துநீ பார்த்திடு
விலையி டுந்தங்கம் மேற்பூச்சு தீராது
    மீண்டி ருந்திடுஞ் சூதத்தை யேயுண்ண
மலியு முன்னுப்பைத் தான்கொண்டு வந்துநீ
    மாட்டி டத் துருசது வெள்ளை யாக்கிடும்
அலைய வேண்டா மிதுசெய்து பார்த்திடு
    ஆடு மம்பல நாடெங்கள் நாடிதே. (419)

துருசுச் சுண்ணமு மஞ்சாடி யாகுமுன்
தொந்த மான மருந்தஞ்சும் வாங்கியே
வரிசையா யஞ்சு மஞ்சாடி கூட்டிநீ
வளம தாயந்தச் செயனீர்விட் டாட்டியே
கரிச லகன்றிடுந் தங்கம துக்கப்பா
கவச மாகப் பொதிந்திடு சொல்லினேன்
இரவி காணவே மூன்றுநாள் வைத்திடு
எங்கள் நாடுபொன் னம்பல நாடிதே. (420)

இரவி காண்பது சூரிய காந்தத்தீ
இன்ப மாய்முன் னிருந்த படியேவை
தாமுள்ள தங்கஞ் சுண்ணம தாகுமித்
தங்கச் சுண்ணமும் முன்நாலு சுண்ணமும்
குருவ தாய்க்களஞ்சி வீத மெடுத்துமே
கொள்ளுங் காண்பொடி செய்து குழாயினில்
அருமை யான குருவிது கண்டறி
ஆதி யாகும்பொன் னம்பல நாடிதே. (421)

குருவி லோர்மஞ் சாடி யெடுத்துமே
குழையுங் காணு மமுதத்தை விட்டுநீ
அருவ தாகும் சிறுகல சத்தினில்
அருமை யாகவோ ரண்டத்தை வைத்துநீ
குருவ தாகக் குழைத்த மருந்தையும்
கூர்மை யாய்மேலுங் கீழும தாகவே
ஒருகா சகலத் துள் ளேதான் போட்டிட
உண்டிடு மெங்க ளம்பல நாடிதே. (422)

போட்டிட்டு வெயில் வைத்திடத் தானும்பின்
புதிய வெள்ளைக் கருதானும் வந்துமே
வட்டி லினிது வழிந்தே யுறைந்திடும்
வடியும் மஞ்சட் கருமெழு காகிடும்
வெட்டி நீர்துள்ள வெள்ளைக் கருவுதான்
மீறு மெந்தச் சரக்கையுங் கட்டிடும்
அட்ட லோகமும் மஞ்சள் மெழுகினில்
ஆகிடுமெங்க ளம்பல நாடிதே. (423)

மெழுகு தானுங் களஞ்சொன் றெடுத்துமே
வீரனுக்குக் கவசம் பொதிந்துமே
தழலில் வாட்டச்சவ் வீர மெழுகதாம்
சவ்வீர மெழுகு களஞ்சி யெடுத்துநீ
மெழுகுக்கு நீரதை விட்டு அரைத்துமே
வெடியுப்புக் களஞ் சிக்கு மேலே பொதிந்திடு
விளக்கினில் வாட்ட மெழுகாகு மேபின்பு
வேதைபா ரம்பல நாடெங்கள் நாடிதே. (424)

வெடியுப்பு மெழு காமோர் களஞ்சிநீ
மீறியகாரீய மைம்பது தன்னிலே
கடவித் தால்மாத்து வொன்ப தரைகாணும்
காசினி தன்னிலே கண்கண்ட வேதையாம்
திடமப்பா குரு சென்றிட வேதைதான்
சீருடன் குரு வானசுண் ணும்பினல்
மடிவா ரேசரக் கெல்லாம் சுண்ணமாம்
வளரும் நாடுபொன் னம்பல நாடிதே. (425)

விருத்தம்.

மலைநாடு யெங்கள் நாடு வகுத்திடு மருந்துக் கெல்லாம்
துலைதூரம் போக மாட்டோம் சுத்தியே குகையோ ரத்தில்
இலைகளு மரங்க ளெல்லாம் யெதிராக வளர்த்து வைப்போம்
புலையர்க்குத் தோன்று மோபொன் னம்பல நாட்டின் போக்கே. ( )

பொன்னம் பலத்தி னூடே புகழ்பெறப் பாடிப் பின்னும்
இன்னமோர் செயனீ ருக்கும் இசைந்திடுஞ் சுண்ணத்திற்கும்
பொன்னதோர் மெழுகுக் குந்தான் புகழுறுங் கட்டுக் கெல்லாம்
மின்னலங் கருக்க ளெல்லாம் விட்டுநான் சொல்லு வேனே. (427)

சொல்லுவே னங்கங் கேதான் துணிந்துநீ சூதாய்ப் பாரு
வெல்லலாம் பின்பு வேதை மென்மேலுந் தப்பா திண்மை
நல்லதோர் விடையின் தண்ணீர் நலமிடக் கமுத மப்பா
மெல்லிய வெள்ளை யாகும் வேதையாஞ் சோதி யாமே. (428)

சோதனை பார்த்தே னப்பா சுகமுடன் நீயும் பாரு
ஆதிமா குருவுக் கப்பா அழகுள்ள மரக தந்தான்
நீதியின் நீரே கூட்டு நிலைகெட்டுச் செயனீ ராகும்
வாதிகாள் சின நீறு வளர்கின்ற மெழுகுக் கெல்லாம். (429)

ஆமப்பா சிப்பி நீறு அறுஞ்சுண்ணந் தெளிய வைப்பாய்
ஓமப்பா கட்டுஞ் செயனீர் உத்திரம் நீர தாகும்
சாமப்பா செந்தூ ரங்கள் சவ்வீரச் சுண்ண மாகும்
வேமப்பா வேதை யாகும் வியன் பச்சைத் துருசைக்கேளே. (430)

ஆனந்தக்களிப்பு.

துருசில்லாக் குதிரைதனை நீயும் வெகு
துடுக்காய் சவுக்குக்கொண் டடித்தாலும் போமோ
பருசுகெட்ட வாதியா னவனை இந்தப்
பாரி லொருசத்தி பண்பாய் வளர்வாள். (431)

ஊரெங்கும் நாடெங்குங் கூடி ஒரு
உற்பன வீடெங்கு முறைய வுலாவும்
ஆருக்கு மில்லாத வண்ணம் சற்று
மாக அருந்தாது சோதனை யப்பா. (432)

வஸ்தது வானகுரு வப்பா இந்த
மாகுரு விட்டவர் மதிகெட்ட வாதி
உத்ததோர் பூரண மப்பா எவர்க்கு
மூடுருவி யதுதானும் பூமியில் வீழும். (433)

சற்குரு விந்தத்தண் ணீர்தான் இது
சகலத்துக்கு முறை தப்பாமற் சொன்னேன்
கற்பனை யாகவே தானும் எந்தச்சரக்
கானாலும் நன்றாகக் கட்டியே கொள்வாய். (434)

திரிகோணத் தயிலத் துடனே நயம்
சேர்த்தரை நாலுக்கு ஒன்றாக வேதான்
அரிவிடும் பூரம்சவ் வீரம் முதலா
யறுவர்தா னுபதிகோ ரோசனை புழுகு. (435)

அப்பா வுரைத்திடுசெந் தூரம் வேதைக்
காதிகுரு வென்றுமுன் னேநாமும் சொன்னோம்
செப்பமாய்க் கண்டறி யப்பா பார்த்தால்
சிரஞ்சீவி யாகவெப் போதும்நீ வாழ்வாய். (436)

தெரிவுடன் பார்த்தறி யப்பா இதைச்
சென்றுபார்ப் பவனே பெரியவ னப்பா
அறிவுடன் ஒருநூறு வயது சென்றும்
அவனே பதினாறு வயதா யிருப்பான். (437)

வாதுகொண்ட யிளமைவல்லோர்கள் இந்த
மாய மூன்றுவகை நூலுங்கற்றோர்கள்
சாதுஇள மையாளு லென்ன பெரியோன்
தனக்கிடு சொல்லியெவர் தான்பெரி யோர்கள். (438)

வறுமை தவிர்த்த ரிஷியோர்கள் தவிர
மாநிலத்தி லுள்ள புருடருமில்லை
எருமைக் கடாக்கொம்பு நன்று யது
இணையாய் வளைந்து யிருப்ப தெடுத்து. (439)

உரிய வெடியுப்பு நாலு கூறில்
ஒருகூ றிதனிலொன் பதுசிப்பி வைத்து
அரியரெண் டாங்கூறு தன்னில் மிக
அன்பாக வேபத்துச் சிப்பியும் வைத்து. (440)

பட்டைய தாய்மூன்றுங் கூறில் அந்தப்
பத்துச்சிப்பி யின்புவடி சீலைமண் செய்து
நட்டக் குழியது வெட்டி அதில்
நாட்டியே ரண்டு முழப்புட மிட்டு. (441)

எரிந்தது ஆறியே பின்பு இதை
யெடுக்க வுருகியே யீயமா யிருக்கும்
அரிந்துத் தக்கட்டி தனிலே களஞ்சியரை
யாகவும் வீரமதி லிக்காரச் சுடரை. (442)

கால்களஞ்சி புழுகிடைக்கொன்று சேர்த்துக்
கண்டு அமுத மத்தலே யாட்டி
நால்மேற் கவசமுஞ் செய்து பின்பு
நற்சிர வோட்டிற் புடமிட யீயம். (443)

தாளகஞ் சவளே யிரக்கக் கேளு
சற்குரு மாகுரு விரண்டையுங் கூட்டி
பாழித் தகட்டிற்குப் பூசி அது
பதமாகக் கரியினி லுருக்கிட யீயம். (444)

காந்தஞ் சவளே யிறக்கி யிது
களஞ்சிமூன் றுக்குக்காரங் களஞ்சிய தொன்று
சாந்த குன்றியிலேச் சாற்றில் அதைத்
தான்மாட்டி யரைத்துப் புதுச்சட்டி தன்னில். (445)

வில்லையை உள்ளேதான் வைத்து அதில்
மேற்சட்டி மூடியீர் சீலைமண் செய்து
வல்லமை ரெண்டு முழந்தான் அது
வாட்டப் புடமிட்டு மறுநாளெடுத்து. (446)

எடுத்துமே பார்க்கநல் லீயம் இதி
லேற்றபஞ்ச யியமுங் கெந்தியின் செம்பு
மடுத்ததங் கஞ்சரிய தாக்கிக் கிண்ண
மாக்கியே சரக்கிடச் சரக்கெல்லாங் கட்டும். (447)

செந்தூர பற்ப மிதிலே கூடுஞ்
சேர்மானஞ் சேர்த்துவிட் டாலெதுங்கட்டும்
வந்திடுஞ் சூதமுங் கட்டும் தீயில்
வைத்திடச் சூதமும் நீறியே போகும். (448)

செந்தூர மிதுதானே யப்பா நல்ல
செயநீரென் றபோக்குத் தானிதி லுண்டாம்
வந்ததோர் சரக்குக ளெல்லாம் மெழுகாய்
மாட்டிவிக் கச்செய்யும் வேதையு மாமே. (449)

விருத்தம்.

ஆமப்பா பாகற் காயி லானதோர் விரைய ரைக்க
ஆமப்பா தண்ணீ ரல்லால் வேறொன்று மாகா தப்பா
போமப்பா முன்பு சொன்ன புகழுட காரங் கொண்டு
ஆமப்பா சரக்கை யெல்லாம் அரைபதினொன் றுங் கூட்டே. (450)

கூட்டிடு ஆட்டி வில்லை கொண்டிடு பரங்கிக் காய்தான்
நாட்டிடு சீலை மண்தான் நயமுடன் செய்த பின்பு
ஓட்டினில் வைத்து மூடி ஒருசீலை மண்ணுஞ் செய்து
கூட்டியே குக்கு டந்தான் புடமிடக் குருவா ரூரே. (451)

குருவான நாய்ப்பா கல்தான் குறிப்புட னுருமாக் கூட்டி
துருசுக்குப் பூசி வெய்யில் தோன்றிடச் சுண்ண மாகும்
குருவதைக் கூட்டா னுகிற் குறிப்புள்ள வேதை காணுன்
மருவிடும் பொன்னால் வாலை வயதுட னிருப்பா ராமே. (552)

வாறுகேள் துருசே ராஜன் வாதத்துக் கெல்லாஞ் சூதம்
மீறிய வால ராஜன் வீரனுந் தளவாய் லிங்கம்
கூறிய வேதைக் கெல்லாம் கோசமும் பீச முந்தான்
மாறிலா வண்ணங் கோரோ சனையொடு மறக்க லாகா. (453)

மறக்கவொண் ணது வாதம் வருந்தினல் வாதங் கிட்டும்
உறக்கங்க ளாகா தப்பா உத்தமர்க் காகச் சொன்னேன்
பிறக்கவே அரிது கண்டாய் பிறந்திடிற் கற்பங் கொள்வாய்
இறக்கவு மாகா தப்பா இருந்திடு யில்லத் தோடே. (454)

இல்லமே குணமாஞ் சொன்னே னில்லவ ளிணக்க மானல்
அல்லது யில்லா விட்டால் அடவுட னில்லம் வேண்டாம்
வல்லவர் கற்பங் கொண்டு மலையேறிப் போனர் பின்பு
கொல்வதார் வெல்வ தார்காண் குன்றெரு மசக மாமே. (455)

குன்றுதா னிவனுக் கீடோ கூத்துவ னிவனுக் கீடோ
நன்றுகொள் தேவ ரீடோ நாட்டினில் மனித ரீடோ
மன்றினி லாடு மீசன் வாதாடும் பார்வ திப்பெண்
என்றவ ரிரண்டு பேரும் யீடல்லால் வேறு முண்டோ. (456)

உண்டென வாத வித்தை உசிதமாய்ப் பார்ப்ப தென்ன
விண்டுபோ லிருக்க லாகும் மேனியும் வச்சிர காயம்
கொண்டிட்டேன் கற்ப மப்பா கூசாம லமுரி யாலே
பண்டுள்ள அட்ட லோகம் பழுக்குங்காண் கற்பங் கொள்ளே. ()

சிப்பிநீறுகற்பவிதி.

கற்பத்தின் செய்தி பின்பு கட்டுட னுரைப்பேன் கேளு
சிற்பம தான செய்தி செப்புவேன் சிப்பி நீறு
உற்பனம் பூர ணத்தி லொருபடி வாங்கிக் கொண்டு
நற்பத சத்தி யப்பா நிலவுப்பு நாலுக் கொன்றே. (458)

ஒன்றிட்டுக் கரைத்து நீரை யொருசட்டி தனிலே வாங்கித்
துன்றிடுஞ் சிப்பி பத்து தோன்றிடப் போட்டு மேலே
கன்றிடுங் குருக்க ளஞ்சி கட்டுடன் போட்டோர் சட்டி
பொன்றிட மேலே மூடிச் சீலைமண் செய்து போடே. (459)

போட்டிட்டுப் புடத்தி லப்பா பொடியாகுஞ் சிப்பி நீறு
காட்டெருப் பொருக்கி வைத்துக் கசபுட மாகப் போட்டு
மாட்டியே மறுநாள் பார்க்க மயங்காமற் சிப்பி நீறும்
ஆட்டங்கள் போக்குப் பார்த்து அறிவுடன் தொழிற்செய் வாயே.

அண்டநீறு.

செய்யப்பா அண்டத் தோடுஞ் சீனமுஞ் சரியாய்க் கூட்டி
மெய்யப்பா முன்னே சொன்ன சரக்குங்கால் வீதஞ்சேர்த்துப்
பய்யவே அறிந்து பார்த்துப் பண்புட னட்டித் தேனில்
பொய்யல்ல புத்தோட் டில்தான் புடங்கோழிப் புடமாய்ப் போடே.

புடம்போட்டு நீரை வாங்கிப் புகழுப்புச் சுண்ணத் துக்குத்
திடமுடன் களஞ்சி கூட்டித் திறங்கோழிப் புடமே போட்டு
எடுநல்ல கார மேறி யிருக்குமே குருவாஞ் சுண்ணம்
வடிவுள்ள மாணி டர்கள் மகிழுவார் குருவைக் கண்டே. (462)

கண்டிடு மிந்தக் காரங் கடுங்கார மேரு வப்பா
அண்டத்தின் கிண்ணந் தன்னை அழகுள்ள துருசுக் கெல்லாம்
கொண்டிடும் ஒருமாக் கூட்டில் கூருள்ள கார மேறும்
விண்டிட்டேன் கருக்க ளெல்லாம் விதமண்ட நீறே வேதை. (463)

வேதையா மிந்த நீறை விட்டிடில் வேதை யில்லை
வாதத்தின் கருவை யெல்லாம் மனதினி லொளிக்க வில்லை
நீதியாம் நினைவாய்ப் பாரு நெறியுடன் நாதர்க் கெல்லாம்
வேதைதான் கண்ட பின்பு மிகத்தர்மங் கொடுத்திப் வாயே. (464)

ஈயப்பா சாது கட்கும் இயல்பர தேசி கட்கும்
காயத்தோர் தங்க ளுக்கும் கடும்பசி தீர்ப்பா யப்பா
நீயப்பா வேதை கண்டால் நீமகிழ்ந் துண்ண வேண்டாம்
தாயப்பா கர்வங் கொண்டால் தமனியம் பொய்யாய்ப் போமே. ()

பொய்யல்ல மெய்யாய் வாழப் புகலுவே னின்னங் கேளு
தையலா ருறவு தள்ளு தாய்தந்தை யுறவு தள்ளு
மையிடுங் கண்ணு ளாசை வலையினி லகப்ப டாமல்
மெய்யுடன் மலையே றிப்போய் வேதைபார் வேதை காணும். (466)

வேதைகள் பொய்யா தப்பா விலையிட்ட யில்லத் தாலும்
பாதமே பணிந்து சொன்ன பணிவிடை செய்துகொண்டு
நீதியாய்ப் பாத பூசை நித்தமுஞ் செய்வா ளாகில்
வாதியா யிருக்க லாகும் மானிலந் தன்னி லன்றே. (467)

மானில மங்கை யாசை வைத்திடில் மலையி லென்ன
வானில மில்லத் தாளை மருவினு லங்கென் னுகும்
தானதர் மங்கள் செய்து சம்புசிற் பரையை நன்றாய்
ஏனமாய்த் தியானஞ் செய்தா லிருக்கலா மெங்குந் தானே. (468)

எங்குமே யிருக்க லாங்காண் யில்லத்தின் வாழ்க்கை யாகச்
சங்கையாய்ப் பத்தி முத்தி வயிராக்கியந் தப்பா னுகில்
கொங்கணர் போக நாதர் போலவே கூடி வாழ்ந்து
மங்கைய ரோடு மேரு வரையினிச் செல்ல லாமே. (469)

சித்தர்கள் சாதி விபரம்.

ஆமப்பா சித்தர் ஜாதி யறைந்தன ரகஸ்தி யர்தான்
ஓமப்பா முற்பி றப்பை யொன்றுஞ் சொல் லாது விட்டார்
வாமப்பா அவர்தம் சாதி வளமையைத்தானே சொன்னார்
நாமப்பா ஆதி தொட்டு நலமுடன் சொல்வே னப்பா. (470)

அப்படி யான சித்த ரன்புட னிந்திர ஜாலம்
செப்படி மயேந்திர ஜாலம் திருவொடு கெவுனம்பாய்தல்
தப்பித மில்லா மற்றான் தன்கூடு விட்டுப்பாய்ந்து
இப்படி மறுகூ டேகி யிருந்துமே வாசஞ் செய்வார். (471)

செய்குவ ரகஸ்தி யர்தான் சிறந்தவிப் பிரரே யாகும்
வெய்தல்வால் மீகர் தானும் வேடுவ ஜாதி காணும்
மெய்ராம தேவ ராதிவேதப்பிரா மணராம் பின்பு
உய்யவே மறவர் தேவர் உயர்குலச் சாதி யப்பா. (472)

அப்பனே கோரக் கர்தான் ஆதிவிப் பிரராய்ப் பின்பு
ஒப்பவே சேண்ய னாகி உயர்குகை தனிலி ருந்து
எப்பவு மழியாத் தேகத் தியல்புடன் வாழு நாளில்
செப்பமா யிடையன் மாடு திறளாக மேய்க்கக் கண்டார் (473)

கண்டதோ ரிடையன் றன்னைக் கதித்ததோர் நாகந் தீண்டிக்
கொண்டதோ ரிடையன் சாகக் குறித்திடுந் தோழர் கண்டு
விண்டவன் மனையா ளுக்கு வேகமாய்ச் சென்று சொல்லப்
பண்டுள்ள விதியோ நான்தான் பாவியோ தென்று வந்தாள். (474)

வந்தவள் தன்னைக் கண்டு மறுகூடு பாய்வ தற்கு
அந்தமா கிரிக்குட் சென்று ஆக்கையைப் பதனஞ் செய்து
நந்தனு மிடையன் கூட்டில் நயமுடன் பாய்ந்து பின்பு
முந்தியுள் ளிடையன் போல மோகமங் கையர்முன் வந்தார். (475)

மங்கையர் முன்பு கோனும் வந்திட மனையா ளுந்தான்
செங்கையாற் றழுவி யென்ன செய்கைகள் நடந்த தென்று
அங்கவள் கேட்க விந்த ஆனதோர் காட்ட கத்தில்
இங்கனம் நாகந் தீண்டி யியல்புடன் போன பின்பே. (476)

போனபின் மயக்க மாகிப் புலனது மயங்கி வீழ்ந்து
கோனவ னருளா லிப்போ கொடுமயக் கங்கள் தீர்ந்து
தானவ னாக நானுந் தனியதா யெழுந்தி ருந்து
தோணவே யுன்முன் னாகத் துணிவுடன் வந்தே னென்றார். (477)

மயக்கத்தைத் தீர்க்க வென்று மந்திர வாதி தன்னை
நயமுடன் கூட்டி வந்து நலமதாய்ப் பார்க்கச் சொல்லச்
செயமுள்ள மந்திர வாதி தீர்க்கமாய்க் கிட்டப் போகப்
பயமிலா தவனைக் கண்டே பண்புடன் விடம்போச் சென்றார். ()

போச்சென்று சொன்ன பின்பு பொழுதுமே விடிந்து தப்பா
எச்சது வாரா மற்று மிடையனு மெழுந்தி ருந்து
வாச்சது இதுதா னென்று மனைவியின் பக்கம் வந்து
மேச்சமாட் டின்பின் னேகி மேய்ப்பது யில்லை யென்றார். (479)

மேயாம லிருந்தே நாவில் மெய்ப்புட னமுதம் வாங்கி
ஓயாமல் வேதை செய்வார் உசிதமா யாயர் மாதைத்
தோயவே செல்வார் பின்பு தொடருவார் மாதி டத்தில்
நேயமாய் நல்ல மாதை நெறியுடன் மணங்கள் செய்வார். (480)

மணத்துட னிருந்தார் நூறு வயதுமட் டும்பெண் ணோடு
இணக்கமா யிருந்து வாழ்ந்தே இனிமையா யிருக்கும் போது
மணத்துடன் வேட்டை யாட வனத்தினி லரசன் வந்தான்
க்ஷணத்தினில் வேட்டை யாடி வருகையில் சடத்தைக் கண்டான்.

அரசனுஞ் சடத்தைக் கண்டு யாரிதோ வென்று சொல்லி
பெரியதோர் விரக டுக்கிப் பிணமென்று சுட்டுப் போட்டு
உரியதோர் சேனை யோடு ஊர்தனில் வந்த பின்பு
பிரியமா யிடைய னுந்தான் கிரிதனி லேறி வந்தே. (482)

வந்திடுங் கிரியி னுள்ளே மகிழ்வதாய் முன்பு வைத்த
அந்தநற் சடலந் தன்னை அன்புடன் பார்க்கக் காணார்
இந்தநற் சடலந் தானும் எங்கையோ காணோ மென்று
விந்தையீ தென்று பார்த்து வெந்தது சடல மென்றே. (483)

என்றுகோ ரக்கர்சிட னியல்நா கார்ச் சுனர்தன் னோடு
அன்றுசா ணக்கி யாரும் அன்புடன் மூன்று பேரும்
சென்றுமே வனங்கள் தோறும் சித்தர்க ளிடத்தி லேகி
அன்றெவ்வோர் வருட மாக அருமையா யிருந்து வந்தார். (484)

அருமையாய் வனங்கள் தன்னி லடவுட னிருந்து கொண்டு
பெருமையாய் வனசஞ் சாரம் பேணியே செய்தா ரப்பா
உருமையாய் முனிவ ரோடு ஒவ்வொரு வருடந் தங்கிச்
சிறுமையில் லாதுகற்பம் செய்துமே கொண்டார் பாரே. (485)

கொண்டபின் னற்றி னேரம் குகையது செய்து பின்னும்
அண்டரும் மயங்க வேதை யனேகமாய் முடித்து வைத்துச்
சண்டனும் வாரா மற்றான் சதுரமா கிரியி ருந்து
தொண்டர்க ளோடு வேதை சுகமதாய்க் குளிகை தீர்த்தார். (486)

தீர்த்திடுங் குளிகை செய்து இடைத்திரு மேனி தன்னை
ஆர்த்திடச் சித்தி செய்து அழியாத சடல மாக்கிப்
பார்த்தபின் மூவ ருந்தான் பகர்சது ராச லத்தில்
மூர்த்தியாய் மத்தி தன்னில் முயன்றனர் குகையி னுள்ளே. (487)

உள்ள கொங் கணரு மாதி யிடையனு யுலகந் தன்னில்
மெள்ளவே கற்ப முண்டு வியப்பதாய் மலையில் வந்து
வள்ளலா யிருந்து பேரை வாங்கியே பளிங்க ரோடு
கள்ளமில் லாமல் வாழ்ந்து காட்டினி லிருந்து வந்தார். (488)

வந்திடும் போதங் கேதான் மலைப்பளிங் கனுமே செத்து
விந்தையாய் போகப் பார்த்து மிகவேதா னிரக்கங் கொண்டு
சந்தோஷ மாகத் தம்தன் சரீரத்தை வைத்து விட்டு
இந்தநற் சரீரந் தன்னி லியல்புடன் பாய்ந்து விட்டார். (489)

விட்டதைப் பளிங்கர் கண்டு மிகவேகொங் கணர்தே கத்தைக்
கட்டையில் வேக வைத்துக் களிப்புட னிருந்து விட்டார்
திட்டமாய்ப் பளிங்க ரோடு சேர்ந்திலை செடிகள் கண்டு
சட்டமாய்த் தெரிந்து கற்பந் தானுண்டு மலையில் வாழ்ந்தார்.

மலையிலே வாசஞ் செய்து வந்தன ரங்கங் கேதான்
தொலைதனி லிருக்கும் பூடு துறவுடன் தெரிந்து கொண்டு
வலையினி லகப்ப டாமல் மலையெலாஞ் சுத்திச் சுத்தி
இலைசெடி மரங்கள் தானும் இயல்புட னறிந்தி ருந்தார். (491)

இருந்தவர் பேரும் பெற்று இயல்புடன் குகையில் வாழ்ந்தார்
அருந்தவஞ் செய்யுஞ் சுந்த ரானந்தர் ரெட்டிச் சாதி
பெருந்தவஞ் செய்து கற்பம் பிரபல மாகக் கொண்டு
திருந்தவே சித்த னாகிச் சிறப்புடன் பேர்பெற் றாரே. (492)

பெற்றுடன் வாழ்ந்தா ரிந்தப் பேர்பெறும் மச்சர் தாமும்
உற்றசெம் படவர் ஜாதி உலகத்தில் நல்ல சித்தர்
கொற்றவ னருளா லந்தக் குலம்விட்டு மவரு மேகி
மற்றநற் கலைகள் கற்று வகாரத்திற் றிரமா னாரே. (493)

திரமதா யிருந்து வாழ்ந்து செடமது பெலக்கச் செய்தார்
வரமதா யுறுங் கமல மாமுனி கண்ணூர் ஜாதி
பரமதா யிருந்து யிந்தப் பாரினில் வேதை செய்து
தரமதாய்க் கற்பங் கொண்டு சடமதை வலுக்கச் செய்தார். (494)

செய்தன ரவரும் நல்ல திருநந்தியீசர் தாமும்
வையக மெய்க்க வேத மறையவர் குலத்துதித்தோர்
மெய்யுட னீசன் பக்கம் மேவியே கற்பங் கொண்டு
பையவே கிரியிற் சென்று பரனிடம் வரம் பெற்றாரே. (495)

பெற்றுடன் வாழ்ந்தா ரந்த பேர்பெற்ற சட்டை நாதர்
உற்றசே ணியம் குலத்தி லுதித்துநெய் தொழிற்ப டித்து
நற்றமிழ் தேர்ந்து இந்த நானிலம் மெய்க்க ஞானங்
கற்றுமே கற்பங் கொண்டு காசினி தனைவிட் டேகி. (496)

விட்டுடன் மலையி லேறி வேதைக ளநேகஞ் செய்து
சட்டம தாக வேதான் சதுரமா கிரியில் வந்து
மட்டுடன் பிராமண தேக மதனிலே நுழைந்து கந்து
திட்டமாய்க் கற்பங் கொண்டு சிறப்புட னிருந்தார் பாரே. (497)

பாரப்பா போக நாதர் பண்புள மட்குலாளர்
நேரப்பா செனித்து யிந்த நீணில மதனி லேதான்
காரப்பா கற்பங் கொண்டு காசினி தனையும் விட்டுச்
சீரப்பா சீனந் தன்னிற் செகமெய்க்கச் செய்தா ரன்றே. (498)

அன்றுமே ரோம ராதி க்ஷத்ரிய ராயு தித்து
நன்றுள சேடன் கூட்டில் நலமுடன் பாய்ந்து வேதை
சென்றுமே கண்டு நூல்கள் சிறப்பதாய் முடித்துக் கொண்டு
என்றுமே அழியாத் தேக மெடுத்துமே குகையில் வாழ்ந்தார். ( )

குகையிலே வாழ்ந்தார் பிண்ணாக் கீசரும் பிராம ணன்றான்
திகையிலா வேத நூல்கள் தீர்க்கமாய்ச் செய்து வைத்து
நகையிலாக் கிரந்த சாஸ்திரம் நாடெங்குந் தெரியச் செய்து
வகையொடு கற்பங் கொண்டு வாழ்ந்தனர் கிரியி லேதான். (500)

கிரியிலே யிருந்தார் பிர்ம முனிவருங் கிருபை யோடு
தெரியவே கார்காட் டாரின் சாதியிற் பிறந்தே அங்கு
அருளுட னிருந்து பின்பு அநுவாத சித்தி செய்து
பொறுமையாய்க் கற்பங் கொண்டு புகுந்தனர் வெளியி லேதான்.

வெளியினி லொளியாய் வந்த மிக்கதோ ரழுகண் ணர்தான்
அழுதபா வனையி னோடு கண்ணில்நீ ராருய்த் தோன்றப்
பழுதிலாக் கார்காட் டான்றன் பாலனுப் பிறந்து வந்து
அழுகண்ணிச் சித்த ரென்று அருளுடன் பேரிட் டாரே. (502)

பேரிட்டு வந்த சங்க முனிவருஞ் சேட னுகும்
நீரிட்டு போக முற்று நிஷ்கள மாயி ருந்து
ஆரிட்ட வேதை செய்து அடங்காத கற்ப முண்டு
தாரிட்ட சித்த ரோடு தான்கலந் திருந்தா ரன்றே. (503)

அன்றுதான் சடல சித்தி யாக்கியே யிருந்தா ரப்பா
நன்றுட னிடைக்கா டன்ருன் நலமுட னிடைய னுதம்
குன்ருத அருளைப் பெற்றுக் கோகுலம் விட்டுப் பின்பு
சென்றேதான் கற்பத் தாலே சித்தரா யிருந்தார் பாரே. (504)

பாரப்பா வள்ளு வர்தான் பண்புள்ள சூத்திர ஜாதி
நேரப்பா நெசவு நெய்து இல்லத்தி லிருந்து கொண்டு
சீரப்பா கற்பங் கொண்டு சடமது வலுக்கச் செய்து
நேரப்பா வேதை பார்த்து நெடுநாளு மிருந்தே வாழ்ந்தார். (505)

இருந்துதான் யோக முற்ருர் இவரைப்போல் யார்தான் வாழ்ந்தார்
திசந்திடுந் திருமூ லர்தான் கைக்கோளச் சாதி யாகும்
பெருத்திடுங் கற்பங் கொண்டு பேர்பெறக் குகையில் வாழ்ந்து
வரத்துட னிருக்கும் போது வந்ததோர் வகையைக் கேளே. (506)

கேளப்பா சடத்தைத் தானுங் கிரியிலே வைத்து விட்டு
வாளப்பா கெவுனம் பாய்ந்து மார்க்கமாய் வருகும் போது
நீளப்பா சத்திரிய ராஜன் நேர்மையாய் மகளுக் குத்தான்
ஆளப்பா விவாகஞ் செய்து அன்றுதான் முடித்த பின்பே. (507)

முடித்ததோர் மறுநாள் தன்னில் முழுமோச மாக அன்று
மடித்ததோர் மாப்பிளை தானும் வகையுட னிறந்து போக
துடித்தன ருலகி லுள்ளோர் சொல்லியே அழுத சத்தம்
விடுத்துமே திருமூல லர்தன் செவியினில் மிகவுங் கேட்டு. (508)

தும்மிச்சந்தம்.

காதினிற் கேட்டுத் திருமூலரன்று
கவலை மாற்றிட வேணுமென்று
நீதிசெலுத்து மகராஜன் கூட்டினில்
நேர்மை யுடனவர் தான்பாய (509)

மயக்கம தாக யிருந்தவர்போலவே
மக ராஜன் ருனுமெழுந்திட்டவே
தியக்கம தாக யிருந்தஜனங்களும்
சிறப்பாய்ச் சந்தோஷ முற்றிருந்தார். (510)

மற்றேருற் றேரும் மகிழ்ந்திருக்க இந்த
மாப்பிள்ளை பெண்ணும் பஞ்சணையில்
சற்றேபடுத்துச்சந் தோஷ முற்றுப்பின்பு
தானிருந் தார்வெகு காலமட்டும். (511)

தாகம தாக யிருபேருமொன்ருகச்
சந்தோஷ மாக யிருக்கையிலே
மோகத்தி னலேமுன் வந்தசரிதையை
முற்றிலு மங்கே மொழிந்துவிட்டார். (512)

என்றைக்கி ருந்தாலும் மோசம்வருமென்று
எண்ணியே மாது இவரிடத்தில்
நன்ருன வார்த்தை பலதுகள்பேசியே
நன்மையுள்ள சட மெங்கேயென. (513)

கேட்ட வுடனே குகையிலிருப்பதாய்க்
கெம்பீர மாகவுஞ் சொல்லிவிட்டுத்
தேட்ட முடனதை யாருஞ்சுடாரென்றும்
தீயிடுஞ் சேதியுஞ் சொல்லிவிட்டார். (514)

இந்த வகையெல்லாங் கண்டுகொண்டு அந்த
ஏந்திழையாளும் புலையர்களை
விந்தை யுடனங்கு தானனுப்பிச் சட
விபரங் கூறியே வாக்களித்தாள். (515)

மலையினிற் சென்று குகையினிற் பார்க்கையில்
மாதுசொன்ன சடந் தானிருக்கப்
புலையர் கூடிச் சடத்தைமருந்துகள்
பூட்டியே மாட்டினர் தியதனை. (616)

வெந்துநீ ருகியே போனபின்பு அதில்
மிக்க அஸ்திகளைத் தானெடுத்துச்
சந்தோஷ மாகவே ராஜாத்தி தன்னிடம்
தான்காட்டிப் போயின ரேபுலையர். (517)

இப்படி யாக இதுமுடிந்ததென
யாருக்குந் தோணுமை லேயிருக்கச்
செப்பமுள்ள திருமூலராஜனும்
சிறப்பாய் வேட்டைக்குத் தானெழுந்து. (518)

வேட்டைக ளாடி முடிந்தபின்பு மலை
மீதி லிருக்குங் குகையினிற்போய்
தாட்டிக மான சடத்தைக்காணுமல்
தவித்து மயங்கியங் கேயிருந்து. (519)

வச்சிர தேகமுஞ் சுட்டுக்கிடப்பதை
மனதாரக் கண்ணாலே தான்பார்த்து
உச்சித மாகத் தெரிந்துகொண்டு பின்பு
ஊரினி லேவந்து சேர்ந்திருந்தார். (520)

இந்தப் படியிவர் தானிருக்க இவர்க்
கினிமையாகிய சீஷனுந்தான்
விந்தை யுடனெங்குந் தான்தேடி இங்கு
விருப்ப மாகவே தேடிவர. (521)

சீஷன் வருவதைக் கண்டுதிருமூலர்
செய்திகள் யாவு மவரிடத்தில்
நேச முடன்சொல்லச் சீஷனுங்கண்டு
நெடுஞ்சாண் கடையாக வேதானும். (522)

பாதத்தில் வீழ்ந்து குருவென்றறிந்துபின்
பத்தி யொடுசில வார்த்தைசொல்லி
நீத முடனே தான் தேடிணசங்கதி
நேர்த்தியாய்ச் சொல்லி முடித்துவிட்டு. (523)

அன்றங்கு ராத்திரி தானிருந்துபின்
அருமையுள்ள மனையாள் தனக்கும்
சென்றங்கு ஓர்சேதி சொல்லாமலிவர்
சேர்ந் தங்கிருவருந் தானேகி. (524)

காடு மலைகள் கடந்துகுகைதனைக்
கண்டு யிருவரு மங்கிருந்து
தேடியே கற்பங்கள் சாப்பிட்டுப் பின்பவர்
தேகசித்தி செய்துக் கொண்டிருந்தார். (525)

விருத்தம்

கொண்டுட னிருக்கும் போது குகையினில் வைத்த சாஸ்திரம்
விண்டுமே தேடிப் பார்த்து வியப்புடன் காணேமென்று
எண்டிசை சித்த ரோடு என்னையும் வினவிக்கேட்டார்
கண்டுதான் கேட்டா ரென்று கருத்துட னிருக்கு தென்றேன். ()

இருக்குதென் றிசைத்தே னிந்த இயல் புள்ள சாஸ்திரத்தை
பெருக்கமாய்ப் பின்னுங் கேட்டார் பேணியே கொடுகாமற் றூன்
சுருக்கமாய்ச் சொல்லிவிட்டுச் சுகமுடன் வரையிற் சென்றேன்
உருக்கமா யுனக்குப் பின்னே உண்மையை விரித்துச் சொல்வேன்.

அன்றுகா லாங்கி நாத ரவரும்வே ளாள ராகும்
சென்றங்கு காய சித்தி செய்திடக் கற்ப முண்டு
என்றுமே அழியாத் தேக மெய்தியே மலையில் வந்து
நன்றுள குகை யிருந்தே நாட்டமாய் வாழ்ந்தார் பாரே. (528)

பாரப்பா தன்வந் திரியும் பண்புள விஷ்ணு அம்சம்
நேரப்பா பிர்ம ஜாதி நெறியுள கற்பங் கொண்டு
சீருட னநேக சாஸ்திரம் செய்தன ரிவருந் தானும்
தேறுத லாக வென்றால் சிறந்த சாஸ் திரத்தைப் பாரே. (529)

திரமுள முனிவர் யூகி செய்தகா வியங்கள் ரத்தினம்
உரமுள கம்ப ளத்தி லுற்றவ ரிவருந் தானும்
வரமுடன் தவசு செய்து வகாரத்தில் பேரும் பெற்றுத்
தரமதாய்ச் சித்த ரோடு சார்ந்துமே வந்தார் நேரே. (530)

வந்ததோர் தேரை யர்தான் மகாசித்தர் நூலில் வல்லோர்
அந்தநல் லகஸ் தியர்க்கு அருமையாய் வந்த பிள்ளை
குந்தக்க மில்லாப் பிரம குலத்தினில் வந்து தித்தோர்
விந்தையாய்க் காய சித்தி மிகச்செய்து முடித்தார் பாரே. (531)

முடித்திடுங் காரி யங்க ளொருவரும் முடிக்க வில்லை
படித்திடுஞ் சாஸ்தி ரங்கள் பற்பல விதங்க ளுண்டு
எடுத்திடுங் கற்பங் கள்தா னியாவருங் கொள்ள வில்லை
தடுத்தவ ரிடத்தில் வந்து தான்கேட்பா ரோதான் சித்தர் (532)

சித்தர்கள் முனிவ ரிந்தச் செயலதை யடைந்த சங்கை
உத்தம மாகத் தானும் உந்தனுக் குரைத்த செய்தி
வித்தகா அறிந்து கொள்வாய் மேதினி யோர்களுக்குச்
சித்திக ளறிந்தா லிந்த விதம்வரு வார்தெ ரிந்தே. (533)

தெரிந்துதான் கூடு விட்டுச் சிறப்புடன் மறுகூ டேகித்
தெரிந்துதான் வருவார் பின்னுந் தெரியாம லேகை மாட்டார்
தெரிந்திதைச் செய்யா விட்டால் தேகமுஞ் சித்தி யேது
தெரிந்துதான் மறுகூ டேகித் திரிந்துமே வருகு வாரே. (534)

வேறு விருத்தம்

வருவதுவும் போவதுவு மாயிருந்தால்
        வகுத்துரைக்கச் சாதிவகை முடியு மோதான்
அறிவுவர உலகோர்க்காய் ஜாதி சொன்னேன்
        அல்லாரு மொருஜாதி யல்லால்வேறே
பிரியமுடன் பரகாயப் பிரவே சந்தான்
        பெரியோருஞ் சித்தர்களுஞ் செய்துகொள்வார்
உரியபடி கூடுவிட்டுக் கூடுபாய்தல்
        உலகத்தில் சித்தருக்கு வழக்கமாமே. (535)

வழக்கத்தைச் சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
        வகையுள்ள முனிவர்சித்தர் மாறிமாறிப்
பழக்கமுள்ள கூடுவிட்டுக் கூடுபாய்வார்
        பாய்ந்தவருங் காலமட்டு மிருந்துவாழ்வார்
முழக்கமுடன் பின்புவந்து தன்சரீரம்
        மூழைந்துகொள்வார் தன்சரீரந் தப்பிப்போனால்
இழக்கமுள கற்பமது சாப்பிட் டேதான்
        இனிமையுடன் சடலமதைப் பெலஞ்செய்வாரே. (536)

பெலஞ்செய்வா ரதைவிட்டு மறுகூடேகிப்
        பின்புமொரு கூடதனிற் பாய்ந்துவாழ்வார்
நலமுடனே அவர்கள் செய்யுந் தொழிலையேதான்
        நாவெடுத்துச் சொல்லவென்றால் நாவோயில்லை
பலமுடனே பரகாயஞ் செய்யும்போது
        பார்த்தாக்கால் வெகுசுருக்கு அதீதம்மெத்த
தலமுடனே தன்சரீர மொளித்து வைக்கத்
        தான்செய்து வைத்துவைக்குங் குகையைப்பாரே. ()

பாரப்பா கிரேதாயில் ரெம்பஆட்டம்
        பண்பாக ஆடினர் சித்தரெல்லாம்
வேரப்பா திரேதாயில் அட்டசித்தும்
        வேடிக்கை வினோதங்கள் செய்துவந்தார்
சீரப்பா துவாபரையி லனேகசித்தி
        செய்தவர்கள் நல்லதொரு பேரும்பெற்றார்
சாரப்பா கலியுகந்தான் போகுமட்டுங்
        கண்மூடிச் சிவயோகங் கண்டார்பாரே. (538)

வெண்பா.

மாடப் புறவின் மலத்தை யெடுத்துவந்து
சாடிடுமைங் கோலத் தயிலமே—கூடவே
ரேகித் தரைத்தேதான் நெற்றியினிற் பொட்டிடவே
ஆகத்தைக் காணார்க ளாம். (539)

ஆரென்ற தேவர்களும் ஆகத்தைக் காண்பதில்லை
கார்நீண்ட வாற்குருவி கண்டாக்கால்—சீருடனே
இந்தக் குருவிதனை எட்டிவிற காற்சுட்டுப்
பந்தமுள்ள பாரையிலே பற்பம். (540)

பற்பஞ்ச மூலம் பொடிபண்ணிப் பண்பாகப்
பற்பஞ் சிமிழிற் பதனம்பண்—பற்பமது
சற்றெடுத்து நீர்விட்டுத் தானரைத்துப் பொட்டிடவே
கற்றரும்பர் கண்ணிற்கா ணார். (541)

காணார்கள் தேவர்முதற் காணார்கள் மானிடர்கள்
காணார்க ளாருமிதைக் கைகண்டோம்—பேணவே
இந்தத் திலத மிருக்கவே வேணுமப்பா
எந்தநல்ல சித்தர்க் கிது. (542)

இதுநல்ல மையென் றிசைத்தே னுனக்குச்
சதுரா யொருவருக்குந் தான்காட்டா—மெதுவாய்
நல்லபிள்ளை யென்று நானுரைத்தேன் இத்தைச்
சொல்லா தெவர்க்குந் துணிந்து. (543)

துணிந்துகொள்வ தென்னவெனிற் சூதகற்பந் தின்று
பணிந்துவா போகரைநீ பண்பாய்த்—தணிந்தே
வார்த்தை மொழிபேசும் மனோமணியின் பாதமதிற்
காத்திருந்து பேருபெருங் கற்பம். (544)

வல்லாரைக்கற்பம்கோச்சகம்:

கற்பம்வல் லாரைதனைக் கொள்ளுதற்குக் காரணங்கேள்
அற்ப நரைதிரையும் யாவுமே தான்மாறும்
எப்போதும் நன்று யிருப்பா னிதுதவறு
தப்பாம லோர்வருடந் தான்விரும்பிக் கொள்வாயே. (545)

கொள்ளுவா னேயாகிற் கூறும்வய தைக்கேளாய்
வள்ளலென்ற பேராய் வயதுபதி னறதுபோல்
தெள்ளுதமிழ் வல்லவனுத் தேறியே சித்தனைப்போல்
வள்ளலென நூறு வயதுவரை தானிருப்பான். (546)

இருப்பான் வெகுநா ளியல்புடனே தானும்
வருத்தும்வல் லாரைச்ச மூலத்தைத் தான்கழுவி
விரித்து நிழலுலர்த்தி மேவிப்பின் சூரணஞ்செய்
கருத்தை யிருத்திநன்றாய்க் கற்பத்தைக் கொள்வாயே. (547)

குமரிகற்பம்.

கொள்ளப்பா கற்பத் திற்குக் குமரியின் சோறெ டுத்து
மெள்ளவே கழுவி நன்றாய் வியப்புடன் வைத்துக் கொண்டு
தெள்ளறத் திரிகடுகு சிறந்ததோர் பொடியாய்ச் செய்து
வள்ளலா யிருப்ப தற்கு வாய்ந்ததோர் பசுநெய் தொட்டே. (548)

வாய்ந்திடுங் கற்ப மப்பா வருடம்நீ கொண்டா யானல்
காய்ந்திடுந் தேகங் கூடக் கடுஞ்சிவப் பேறி நன்றாய்
ஆய்ந்திடும் அழக னாகி அத்தனைப் போல வாழ்வான்
தோய்ந்திடுஞ் சாஸ்தி ரங்கள் துரிதத்தில் கற்பான் பாரே. (549)

நோண்டிச்சிந்து.

பாகுசில கற்பமெனும் கார்கோலரிசி
பாங்காக வாங்கிவந்து சூரணஞ்செய்து
வாகுபெறத் தேனிலப்பா வெருகடி
வகையுட னருந்திடக் குட்டந்தீரும். (550)

ஆவின்நெய்யில் ஏழுநாட்கொள்ளப் பவுந்திர
மாகிய குட்டமுந் தீருமப்பா
இந்தச்சூ ரணத்துடனே வாய்விளங்க
மிடித்துச் சூரணம்பண்ணித் திரத்துடனே. (551)

இரண்டுவகைச் சூரணமும் வகையுட
னிரண்டு வெருகடியாய்த் தானெடுத்துக்
கோமூத் திரந்தனிலே போட்டுக்
கொள்ளவே பதினெட்டுக் குட்டமுந்தீரும். (552)

திட்டமாய்ச் சூரணத்தை வெண்ணியிற்
சிறப்புட னொருமண் டலங்கொளவே
புத்தி விசாலமதாய் வயது நூறு
பூலோகந் தன்னிலே வாழ்ந்திடுவான். (553)

திப்பிலிச் சூரணஞ்செய்து வாய்விளங்கம்
செய்தசூ ரணத்துடன் தான்சேர்த்து
இரண்டும் வெருகடியா யெடுத்து
இன்ப முடனேதேனிற் கொண்டுவா. (554)

சகல வியாதியும்போம் முன்னம்
தான்சொன்ன கற்பத்தை வருடங்கொண்டால்
பதினாறு வயதுடைய குமாரன்போற்
பாலிய னாகவே தானிருப்பான். (555)

இருநூறு வயதிருப்பான் வல்லாரையி
னிந்தகற்ப முண்டவர்க்குப் பத்தியங்கேள்
ஆவின்நெய் பாலாகும் குருவை
அரிசிச் சோறுந்தேனு மாகுமப்பா. (556)

மற்றொன்று மாகாது தேகத்தில்
வரும்பச்சைத் தண்ணீர் படலாகாது
பேசவு மாகாது வெகுவாகப்
பெண்ணாசை ஸ்ரீசங்கை யுதவாது. (557)

கடும்பத் தியமாக யிருந்து
காத்தவர்க்கு மிக்கதொரு சித்திகளுண்டாம்
பத்தியத்தை விட்டவர்க்கு தேகம்
பாழாகப் போகுமென்று குருவுரைத்தார். (558)

உடனே மறுகற்பங் கொள்ள
உதவாது தேகத்துக் கழிவுவரும்
மண்டலஞ் சென்றுகொண்டால் நல்ல
மகத்துவ மும்பெறலாம் இகத்தினிலே. (559)

எந்தநல்ல கற்பத்துக்கும் தலையி
லெண்ணெய்வைக்கத் தேவையில்லைமுன்னமேசொன்னேன்
பால்மிளகுதனைத் தேய்த்துக் கொண்டு
பக்குவ மாகவே முழுகிடலாம். (560)

வல்லாரைக் கற்பத்திற்கு எதுவு
மாகாது தண்ணீர்விட லாகாது
கற்பம் முடிந்தபின்பு வாரங்
கழித்தபின் பால்மிளகு தேய்த்திடலாம். (561)

பிலாக்கொட்டைத்தயிலகற்பம்.

உச்சிதப் பிலாவின் கொட்டை உசிதமாய்த் தயிலம் வாங்கி
வச்சிடாய் பழமை கொண்ட கலசத்தில் வைத்துநன்றாய்
நிச்சயத் தயிலம் மூன்று களஞ்சிதான் நெய்யிற் கொள்ள
இச்சையாய் மூர்ச்சை போகும் பசுவின்பால் குடிக்கநிற்கும். (562)

அய்யமென் கருங் குருவை அரிசிவெந் திட்ட சோறு
நெய்யொடு பாலு மாகும் மற்றென்று மாகா தப்பா
மெய்யதா யெழுகாள் கொள்ள விரியும்பா தாள லோகம்
செய்யவே தெரியும் தேகம் சித்தியு மாகு மீதே. (563)

ஏதப்பா வென்றால் மாத மிப்படிக் கொண்டா யானல்
நாதன்நீ பகலி லேதான் நட்சேத்திரந் தெரியு மப்பா
நீதம்பார்த் திருந்து பூவை நிழலிலே யுலர்த்திக் கொண்டு
போதப்பா சூரண மாகப் போதவே தேனிற் கொள்ளே. (564)

கொள்ளப்பா வெருக டிதான் கொண்டுவா வொருமாதந்தான்
வெள்ளைபோல் கரைத்தி ருந்தால் மிகவுமே மாறிப் போகும்
வள்ளலே இருநூ றப்பா வயதுதா னிருக்க லாம்பார்
கள்ளங்க ளில்லை யப்பா கற்பத்தைக் கொண்டு பாரே. (565)

வேறு விருத்தம்.

பாரப்பா கருநாவி உமிநீராலே
பண்பாக உரைத்தேதான் குருவிற்பூசிப்
பாரப்பா வெயிலில்வைக்கச் சுண்ணமாகும்
பாங்காக யிருமருந்து சரியாய்த்தூக்கிப்
பாரப்பா மாகுருவுக் கப்பிப்போடு
பதிவான குருவதுவும் காரமாகும்
பாரப்பா மண்ணுப்பிற் குக்குடத்திற்
பரிவுடனே புடம்போடக் குருவானுரே. (566)

குருவான நாய்ப்பாகற் றயிலத்தோடு
குருவொருமாக் கூட்டிவிடு முன்னேசொன்னேன்
குருவான திதனுடனே துருசுசேர்த்துக்
குதராமற் றுருசதற்குப் பூசியேதான்
குருவாக ரவிமுகத்தில் ஒருநாளிற்றன்
கொண்டுமே வைத்தெடுக்கச் சுண்ணமாகும்
குருவாக விதுதானுஞ் சேராவிட்டாற்
குவலயத்திற் சுண்ணமது தான்காணுரே. (567)

கும்மி.

கும்மி யடிபெண்ணே கும்மியடி ஆதி
குருவை நினைந்து கும்மியடி
நம்மிலுங் கோடி அதிதுருசுக்குரு
நாட்ட மூடன்கண்டு கும்மியடி. (568)

சங்குரு வான துருசின்குருகண்டோர்
நாலாயி ரம்ரெட்டிப் பாகுமிது
அங்குரு வாகிய மாகுருத்தானது
அருமைய தாய்க்கார மேறுதடி. (569)

எங்குரு வாகிய நாவியடி அது
இனிமை நாடக மாடுதடி
தங்குங் குருவு மிதுதாண்டி பார்த்துத்
தானுவர்ப் பூவால் தேறுதடி. (570)

கடலி லிருக்கின்ற தண்ணீரை யவர்
கட்டுடன் மேட்டினிற் றுனிரைத்து
அடவி ரவிமுகங் கண்டாலல்லோ இது
ஆகத் தருந்தஉப் பாச்சுதடி. (571)

ஆகத் தருந்திட அங்கங்க ளிப்பாக
அப்பா சிறுநீரி லுப்பாச்சு
தேக மருந்திடும் ரெண்டுமெப்பா சிவ
சித்தா யிருந்த சிவமாமே. (572)

சிவனைக் கண்டு பராசத்தி சேர்த்திடச்
சென்றிடுஞ் சத்திக்குப் பேருவர்ப்பூ
தவசு பொருந்துங் குருவாகும் இந்தச்
சத்தி பனியில் விளைந்ததடி. (573)

பகலவ னாலே வெளுப்பாச்சு பரி
பூரண மாகிய நீராச்சு
பகலவன் கண்டகல் லுப்பாச்சு கண்டு
பாருந் தொழிலிதைப் பாருங்கடி. (574)

பச்சைத் துருசு வெளுப்பாகப் பாரிற்
பார்க்கப்போ னாலிது உப்பாகும்
வச்ச துருசுவெளுப்பாச்சு கண்டு
வாழ்த்திக் கும்மி யடியுங்கடி. (575)

பாக்கு வெற்றிலைச் சுண்ணாம்பு அந்தப்
பள்ளனுக் கெத்தனை வீராப்பு
போக்கறி யாதவன் கையினிற்பெண்டு
புதுசாய்க் கொடுத்தாலே தாகும்படி. (576)

சவ்வீரந் தோழமைச் சூடனடி-யிதால்
தரணியி லெந்தச்சரக்கும் சுண்ணம்
சவ்வாசு வெகுகெட்டி யென்றேசொல்லிநீங்கள்
தானே கும்மி யடியுங்கடி. (577)

கீழ்காய் நெல்லிக்கற்பம்.

விருத்தம்.

பூசமுடன் குருவாரங் கூடும்நாளில்
புகழ்பெறவே கற்பமது கொள்வாயப்பா
வாசங்கீழ் காய் நெல்லிச் சமூலந்தன்னை
வளம்பெறவே நிழல்தனிலே யுலர்த்திக்கொண்டு
நேசமுடன் சூரணமே செய்துபின்பு
நெய்தேனுஞ் சீனியுமொன் றாகக்கூட்டி
ஆசையுடன் தானிக்காய்ப் பிரமாணந்தான்
அனுதினமுங் கொண்டுவர நிசமாய்ச்சொன்னேன். ()

சொன்னேன்நான் பத்தியங்கள் நெய்யும்பாலும்
சோறுமல்லால் மற்றொன் றுமாகாதப்பா
மன்னனே அரைவருடங் கொண்டாயாகில்
மகாகுட்டம் பதினெட்டுந் தீர்ந்தேபோகும்
நன்னயமா யொருவருடங் கொண்டாயானால்
நல்லமதி புத்தியது மயங்காதப்பா
என்றுபதி னாறான வயதுபோல
இருநூறு வயதுவரை வலுமைதானே. (579)

தூதுவளைக்கற்பம்.

வலுமையென்ன ஏழானைப் பலமுண்டாகும்
வந்ததொரு தூதுவளைச் சூரணஞ்செய்து
மலையாதே யிருவகைச்சூ ரணமுங்கூட்டி
மனதுபோல் வெருகடிநீ கொள்வாயப்பா
உலையாமல் மூன்றுமண் டலந்தான்கொள்ளு
உகமுடிந்து மறுபிறவி யில்லையப்பா
அலையாமற் பிறக்கிறதுஞ் சாவதுந்தான்
அவனிதனில் வழக்கமென்று சொல்லலாமே. (580)

கையாந்தகரைக் கற்பம்.

சொல்லுவே னின்னங்கேள் கற்பமப்பா
சுகமாங்கை யாந்தகரைச் சமூலம்வாங்கிச்
சொல்லுவேன் ஞாயிறுடன் பூசங்கூடில்
சுகமான நாள்தனிலே யுலர்த்திக்கொண்டு
சொல்லுவேன் சூரணஞ்செய் வெருகடிதான்
தோன்றிடவே காடியிலே குழைத்துத்தின்பாய்
சொல்லுவேன் பத்தியங்கேள் கத்தரிக்காய்
சூழ்பாகற் காய்கடுகு ஆகாதென்னே. (581)

ஆகாது மற்றதெல்லா மாகுமப்பா
　　அப்படியே ஒருமாதங் கற்பங்கொண்டால்
வேகமுடன் சகலவியா திகளுந்தீரும்
　　விருப்பமுடன் மாசம்ரெண்டு சாப்பிட்டாக்கால்
தாகமுடன் பதினெட்டுக் குட்டந்தீரும்
　　சரிமூன்று மறுமூன்றுந் தான்கொண்டாக்கால்
பாகமுடன் வியாதிக ளெல்லாந்தீர்ந்து
　　பண்ணோடே சங்கீதம் பாடுவானே. (582)

பாடுவான் பதினெண்பா சையிலும்நன்றாய்ப்
　　பண்பான சுரக்கியானம் பாடுவான்காண்
தேடுகின்ற மலைசெடிகள் தங்கிவாழ்வான்
　　சிறப்பாகத் தான்பத்து மாதங்கொண்டால்
கோடுபெற்ற முந்நூறு வயதிருப்பான்
　　குமரனாய்ப் பதினாறு வயதுபோல
நீடுபெற ஒருவருடங் கொண்டாரானால்
　　நிசமாமா யிரவருடம் நிற்பான்நேரே. (583)

நாறுகரந்தைக் கற்பம்.

நெறியோடே வாழ்வதற்குக் கற்பங்கேளு
　　நிசநாறு கரந்தையுட கற்பந்தன்னைப்
பெரிபூர்வ பட்சபிர தமையிலப்பா
　　பேதமிலாப் பவர்ணைசஷ்டி பஞ்சமிதான்
திரிதிகையா மிதுகளிலே பூசமோனம்
　　சேருதற்கு ரோகணிநா ளதுவந்தாக்கால்
உருதியுட னபிஷேகஞ் செய்துகொண்டு
　　உற்பனமாய்ப் பழந்தேங்காய் தூபங்காட்டே. (584)

காட்டியபின் செடியதனை யப்பாநீயும்
　　கரந்தைசமூ லம்வாங்கி நிழலுலர்த்தி
வாட்டமிலாச் சூரணமாய்ச் செய்துகொண்டு
　　வகையாக வெருகடிதான் நெய்யிற்கொள்ளத்
தாட்டிகமா யொருமாதந் தின்பானாகில்
　　சத்தியமாய்ப் புத்தியுண்டால் ஞானமுண்டாம்
கோட்டியில்லாக் கற்பமிது பத்தியங்கேள்
　　குருவையரி சிச்சாதம் நெய்யும்பாலாம். (585)

ஆமென்றும் மற்ருென்று மாகாதப்பா
　　ஆனகற்ப மிரண்டுமா தந்தான்கொண்டால்
பூமிதனில் நடக்குமொரு வதிசயங்கள்
　　புகழ்பெறவே தெரியுமப்பா கெதியுந்தங்கும்
வாம்முட னரைவருடங் கொண்டாயாகில்
　　வகையாக மகாசித்தி யடையலாகும்
காமவலைக் குட்படவு மாகாதப்பா
　　கருத்தான கற்பமிந்தக் கற்பங்கேளே. (586)

கேளப்பா நாழிகையோ சனியின் தூரம்
　　கெடியாகப் போய்வரலாம் கெவுனமார்க்கம்
கேளப்பா ஆகாச கெவுனம்பாய்வான்
　　கெவுனசித்தி யட்டசித்தி வச்சிரகாயன்
கேளப்பா ஒருவருடங் கொண்டானுல்
　　கிலேசமில்லே வயதுபதி ஞறுதோன்றும்
கேளப்பா வருடமா யிரமிருப்பான்
　　கிருபையுள்ள கற்பமிது கொண்டுபோரே. (587)

பேச்சுரையின் கற்பம்.

பாரப்பா பேச்சுரையின் விதையைத்தானே
　　பழகினயெண் ணெய்க்கலசந் தன்னில்வைத்துப்
பாரப்பா தயிலமது களஞ்சிமூன்று
　　பண்பாக யிந்தயிடை பாலுங்கூட்டிப்
பாரப்பா பாலிடைக்கு நெய்யுங்கூட்டிப்
　　புரிவாக நெய்யிடைக்குத் தேனுங்கூட்டிப்
பாரப்பா கற்பமதைக் குடிக்கமூர்ச்சை
　　பண்புடனே யாமிதற்கு வகைசொல்வேனே. (588)

சொல்லுவேன் தயிலமதைப் பிடரிகைகால்
　　தோன்றஉள்ளங் காலுமே தடவச்சொல்லு
வல்லென்ற புயமீறித் தெளியுமப்பா
　　வண்மையிந்தப் படிக்கியிரு பதுநாளுண்ணச்
சில்லென்றே சரீரமது பேதிக்குங்காண்
　　தேவனைப்போற் காணுமடா தேகசித்தி
வல்லமையாய் மாதமே மூன்றுகொண்டால்
　　வயததுவும் மூன்நூறுக் கிருப்பான் பாரே. (589)

இருப்பவலின் கற்பம்

இருப்பான்காண் சாகாம லிருக்கக் கற்பம்
இன்னங்கே ளிருப்பவலின் கற்பங்கொள்வாய்
விருப்பமுட னடையாளஞ் சொல்லக்கேளு
மீறுகின்ற பாம்புபோற் கொடிபடர்ந்து
இருக்குங்கா ணதின்கிழங்கு பெரிதாகத்தான்
இருந்ததொரு கிழங்குதனை யெடுத்துக்கொண்டு
திருவாக நிழலுலர்த்திச் சூரணித்து
திரளாக வெருகடியாய்த் தேனிற்கொள்ளே. (590)

கொள்ளப்பா மண்டலந்தான் முடிந்தபின்பு
கூறக்கேள் நரைதிரையு மில்லைகண்டாய்
வள்ளலாய் முந்நூறு வயதிருப்பான்
வாய்த்ததொரு கிழங்கினுட சாற்றிற்சூதம்
மெள்ளவே மத்திச்சுக் குகையில்வைத்து
விருப்பமா யுருக்கிடவே குளிகையாகும்
கள்ளமில்லாக் குளிகைகையி லிருக்கச்சித்தி
கனத்தமூ லிகையைச்செந் தூரிப்பாயே. (591)

செந்தூரம்.

செந்தூர வகைசொல்வேன் கேளுகேளு
செவ்வரளிக் கிழங்கரைத்துப் பொதிந்துதானே
செந்தூரம் முழப்புடமாம் முருக்கம்பூப்போற்
தேறுமே யொருமாத்து வெள்ளிநூறு
செந்தூரங் கொடுத்திடவே வேதையாகும்
தீர்க்கவர்ணஞ் சதபேதி திட்டமப்பா
செந்தூரம் பணவிடைதான் மண்டலந்தான்
தின்றுக்கால் மலமூத்திர வேதையாமே. (592)

ஆமப்பா வச்சிரமிட்ட காயமாகும்
அட்டசித்தி கெவுனமுண்டா மூமிழ்நீராலே
ஆமப்பா சூதத்தைக் கட்டிவைக்கும்
அறுபத்து நாற்சரக்கும் கட்டிவைக்கும்
ஓமப்பா அவர்களுட அமுதத்தாலே
உச்சிதமாம் வேதைகளும் பொய்யாதப்பா
நாமப்பா கற்பத்தின் விபரஞ்சொன்னோம்
நாதாந்தக் கியானமுற்று நல்குவானே. (593)

நீலிகற்பம்

நல்குவோம் நீலிகற்பங் கொள்வாயப்பா
நலமாக அவுரியது சமூலம்வாங்கிச்
செல்குவாய் நிழலுலர்த்திச் சூரணஞ்செய்
திரமாஞ்செந் தூரமுடன் சீனிகூட்டி
வல்லதொரு கெந்தகந்தான் சுத்திசெய்து
வந்தகுருச் சக்கரையுங் கூட்டிக்கொண்டு
அல்லதொரு கற்பமிது வெல்லாமொன்றாய்
அப்பனே சரிசமன தாகச்சேர்த்தே. (594)

சேர்த்தகற்பம் வெருகடிய தாயெடுத்துச்
செப்பமுட னரைவருடங் கொண்டாயாகில்
வார்த்தைபிச கில்லைகூன் கிழவன்றானும்
வாலையாய்ப் பதினாறு வயதேயாவான்
காத்தவனு மொருவருடங் கொள்வானாகிற்
கருணைபெருஞ் சகலசித்தி யுண்டாமப்பா
பார்த்ததொரு கற்பமிது கொள்ளவாண்டு
பாரில் முந்நூறென்றுதான் பகர்வார்தானே. (595)

வேம்பின் கற்பம்

தானவனும் வேம்பினுட கற்பந்தன்னைத்
தாரணியில் மானிடரே சாற்றக்கேளு
மானதொரு கார்த்திகையாம் மாதந்தன்னில்
வாழ்மிருக சீரிடமும் பூசந்தன்னில்
ஏனமுதற் சலமிக்க கொழுந்தைக்கிள்ளி
இன்பமுடன் தின்றுவா யிருபத்தேழ்நாள்
ஆனதொரு சற்பங்கள் தீண்டினாலும்
அதுபட்டுப் போகுமப்பா அறிந்துகொள்ளே. (596)

கொள்ளப்பா மாதமொன்று கொண்டாயாகில்
குட்டமென்ற பதினெட்டு வகையுந்தீரும்
துள்ளுகின்ற பூதமொடு பசாசுதானும்
துடிதுடித்துக் கண்டவுட னோடிப்போகும்
விள்ளுகிறேன் பொடிசெய்து கொழுந்துதன்னை
வெருகடியாய்த் தேனிலரை வருடங்கொண்டால்
வள்ளலே நரையோடு திரையும் மாறும்
வாலிபமுந் நூறுவய திருப்பான்றானே. (597)

இருப்பதொரு வருடமதில் துளைத்துத்தானே.
இன்பமுடன் மேல்நோக்கிச் சிலாகைதாக்கி
திருப்பாணி யாகுமப்பா மற்றொன்றுகா
திதன்கீழோ பழகினதோர் பாண்டம்வைத்துத்
மருப்பிலா துபாயமா யதனைமூடி
மண்டலந்தான் சென்றபின்பு தயிலந்தானும்
விருப்பமுடன் தயிலமங்கே யிரங்கிநிற்கும்
மீண்டுநீ தயிலமதை யெடுத்துக்கொள்ளே. (598)

எடுத்துவந்த தயிலமப்பா களஞ்சிமூன்று
இந்தயிடை தேன்கூட்டிக் குழப்பிக்கொண்டு
திடமாக மண்டலமே கொண்டாயானால்
திரையுமில்லை நரையுமில்லை செப்பக்கேளு
அடவாக அதிசயங்க ளனேகங்காணும்
ஆரூதா ரங்களெல்லாம் வெளியாய்க்காணும்
இடமாகக் காரியங்கள் செயங்கொள்வாய்நீ
இன்பமனோ கரனாக யிருப்பாயென்னே. (599)

என்னேகே ளவ்வண்ணந் தானேயாவாய்
இயல்பாக அரைவருடங் கொண்டாயானால்
உன்னியே பதினாறு வயதுபோலே
உறுதியாய் வயிரசடம் உமிழ்நீர்வேதை
மன்னனே யாகாச கெவுனசித்தி
வல்லமையாய்ப் பூவுலகில் வசிக்கலாகும்
சொன்னபடி யொருவருடங் கொண்டாயாகில்
தொலையாத காயசித்தி வேம்பின்கற்பம். (600)

சோதிப்புல்க்கற்பம்.

கற்பந்தான் சொல்லுகிறேன் சோதிப்புல்லுக்
கடையாள நாலுவிரற் கடையுயர்ந்து
சிற்பமா யிருக்குமப்பா யிலைபுற்போலே
தீபம்போ லொளிகாணு மிதுக்குப்பேர்கேள்
அற்புதம தானதிப் புல்லொன்றும்பேர்
அனல்கொண்டு பொங்குமது சோதியாகும்
நற்பதமா யிம்மூலி பாலிற்போட
நல்லதொரு சோதிப்புல் லாகுந்தானே. (601)

தானென்ற மூலிகைதான் சமூலம்வாங்கித்
தானிடித்துச் சூரணந்தான் செய்வாயப்பா
கோனென்ற பேச்சுரையின் காய்க்குடுக்கைக்
குள்ளடைத்துப் பதனமதாய் வைத்துக்கொண்டு
கானென்ற களஞ்சிபொடி பாலிற்போட்டுக்
கரைத்துநீ குடித்துவர கற்பமப்பா
தேனென்றே அதையருந்த மூர்ச்சையாகும்
தெளிந்துவிடும் தானேதான் பின்புகேளே. (602)

துவாலையிடல்.

கேளப்பா களஞ்சிபொடி சோத்திலிட்டுக்
கிரிகையுடன் முழுங்கிவிடு பின்புசொல்வேன்
நாளப்பா களஞ்சிபொடி செலத்திலேதான்
நயமாகக் குடித்துவிடு மூர்ச்சைபோகும்
வேளப்பா ஆவரைவேர் கொழுந்துங்கூட்டி
விருப்பமுடன் தேகமெல்லாந் துவாலைபோடு
கேளப்பா கரந்தையுஞ்சீ தாரியுந்தான்
கிருபையுடன் புகைக்கவே மூர்ச்சைமாறும். (603)

மாறியபின் பாலுஞ்சோ றுன்றுமப்பா
மயமான நெய்சோறு வேறொன்றுகா
தேறியே யவ்விதமேழுநாள்தான்
திடமாகக் கொள்ளுமப்பா தேகந்தன்னில்
ஊறியே உடற்சட்டை களட்டுமப்பா
உற்றயிலை யரைத்துத்தங் கத்துக்கப்பி
ஆறியே புடம்போடத் தங்கஞ்செம்பாம்
அறிகுவாய் வேதையினி விள்ளுவேனே. (604)

விள்ளுவேன் வேதையப்பா சொல்லக்கேளு
வெள்ளியிரு பதுக்கொன்று சேர்க்கவேதான்
ஒள்ளியதோர் பதினாறு மாற்றுமாகும்
உத்தமனே யின்னும்வகை யுரைக்கக்கேளு
அள்ளியதோர் ஸ்திரீகளுக்கு வசியமாகும்
ஆகாகா மிருகவசீ கரமுமாகும்
தள்ளியே நில்லென்று சொல்வாருண்டோ
சகலவசி கரமாகுந் தாரணிக்கே. (605)

வேறு விருத்தம்.

தாரணி வேரொடு தாளிப் பனைவேர்
நாரணன் வேரொடு நலமிம் மூன்றும்
கோரமில் லாமற் கூட்டிச் சமனாய்
ஆர்தல நீரா லரைத்துக் குளிகைசெய். (606)

குளிகை தலைகொள் குத்தே ருது
பழிபடும்போரிற் படாது குண்டுகள்
ஒளிவிட் டெரிந்த உயர்பாண மேருது
அழிவுறு திந்த அதிசயக் குளிகையே. (607)

அதிசயம் பச்சை யோந்தி யிடக்கை
அதினுட காலும் அன்பாகச் சேர்த்து
நிதிவெள்ளி யான நிறைசிமி ழடைத்துக்
கெதிபெற வாயிற் கிடைத்திநீ கேளே. (608)

கிழே நீறிற் கிடந்து மிதக்கினும்
கிழே விரித்துக் கிடக்கினும் பயமில்லை
நாளே தனலில் நடந்தாற் சுடாது
ஆளே கைக்கொள் அம்புவி தனிலே. (609)

சாயாவிருக்ஷம் சுணங்கவிருக்ஷம்.

நொண்டிச்சிந்து.

சாயாத விருக்ஷமப்பா கற்பமிது
தனக்கடை யாளமது சொல்லக்கேளு
மாயா மரம்வெளுப்பாம் எட்டி
மரத்திலை போலிருக்கும் வகையறிவாய். (610)

காய்தனக் கடையாளம் சொல்லிற்
கண்திறவா நாய்க்குட்டி போலிருக்கும்
வாய்மையஸ்த மானம்வரைக்கும் அந்த
மரநிழ லொருபோதுஞ் சாயாது. (611)

பட்டையினில் வெட்டிவிட்டால் வெட்டுவாய்
பளிச்சென்று தெரியாது யிந்தமரத்தில்
திட்டமா யுச்சிநேரம் பார்த்தால்
தெய்வகன்னி மார்கள்வந்து விளையாடுவார். (612)

சிறுபெண்கள் போலத்தோன்றும் கண்ணுக்குத்
தெரியுமந்த மரத்தின் பேர்கேளு
கருணையாய்த் தன்நிழலைக் காத்தானென்று
காரணப் பேர்களு மதற்குமுண்டு. (613)

அந்தமரப் பாலுழக்கு எடுத்து
அன்பாக வேயதனைத் தென்பாகக்கொள்
விந்தை யுடன்மயக்கம் போல
மேல்மூர்ச்சை யாகு மிதினாலே. (614)

குடித்தபின் மூன்றேமுக்கால் நாழிகை
கொடிய மூர்ச்சைகொண்டு தான்கிடப்பான்
படிமீது தெளிந்தபின்பு என்றும்
பதினாறு வயதது போலாவான். (615)

காமதே வனைப்போலே அழகுண்டு
கட்டாக வேபெருகி யிருப்பான்காண்
சேம முடனாயிரமாம் வயது
சிறப்பாக வேயிருப்பா னுறப்பாகவே. (616)

அம்மரத்தி லேயிருக்கும் மிக
அருமையாம் தேவகன்னி யிரண்டுபேரும்
செம்மையாய்த் தொண்டு முதல் பணிவிடை
செய்யவரு வாரவர்க்கு இணங்காதே. (617)

நீதான் நினைத்தாக்கால் தினமும்
நெறியொடு சோறுகறி பழமும்வரும்
நாதாக்கள் தான்வருவார் அவரை
நன்மை யுடனேகண்டு தெண்டனிடு. (618)

கூட்டியே தான்போயி அந்தக்
குகைக்குள் ளிருக்கிறதோர் சித்தருடன்
தாட்டிக மாகவேதான் உனக்குத்
தானுப சாரங்களுஞ் செய்திடுவார். (619)

மத்தது சொல்லமுடியா கண்டதை
வளமாக விண்டுநீ சொல்லாதே
மெத்த மகிழ்ச்சியது பெற்று
விருதாவாய்ப் பூமியில் வருகாதே. (620)

அந்த மரத்தின்பாலே ரசம்விட்டு
அங்கையில் மத்திக்கக் குளிகையதாம்
வந்த குளிகைதனை வாயிலிட
வாய்வேக மனோவேகம் உண்டாகும் (621)

உதிரரோமவேங்கை மரக்கற்பம்.

வேங்கையின் கற்பமப்பா மரமெல்லாம்
 பேம்பற்றிச் சல்லியாய்த் தூங்குமப்பா
பாங்குடன்பட்டை வெட்டிஞல் உதிரம்
 பாய்ந்துமே தாரைதாரை யாய்வருங்காண். (622)

உத்தமனேயிதற்குப் பேர்தான்
 உம்பரோம வேங்கையென்றும் பின்னுமிந்தச்
சித்த ரோமசனென்னும் பேராகும்
 சிறப்பா யிம்மரத்தின்வேர் வெட்டிவந்து. (623)

அரைத்துச்சந் தனக்கல்லிலே சம்பழத்
 தளவாய்ப் பாலிற்கலக்கி மண்டலங்கொள்ள
நரைமாறி வயதாயிரம் இருப்பான்
 ரத்தவேங்கை யின்மரத்தின் பாலதனல். (624)

நெறிலிங்கம் மத்திச்சுக்கை யிட்டு
 நேருமிக் காந்தலில் மெழுகாகும்
உருகின மெழுகுவெள்ளி இருபதுக்
 கொன்று கொடுத்திட மாத்தாறு. (625)

அந்தரோமன் பொன்னெடுத்துச் சிரசில்
 அன்பான நகைபோல வேபொதிய
இந்தப்பொன் தலையிலிருக்க வெட்டுக்குத்து
 ஏறுது அம்புங்குண்டும் பாயாதப்பா. (626)

சோரரும் கிடையாது எவ்விதச்
 சுருக்கான விக்கினங்கள் வாராது
சாரமுடன் பூதகணங்கள் அவனிடந்
 தலையு மெடுக்காது ஒடுங்கிவிடும். (627)

கருநெல்லிக் கற்பம்

தடையிலாக் கருநெல்லி மரக்கற்பம்
 தான்சொல்கி றேனதைத் தெரிந்துகொள்வாய்
அடையாளம் நெல்லிமரம்போ லிருக்கும்
 அதின்மரம் பூவுங்காயுங் கருத்திருக்கும். (628)

இதுதான் கருநெல்லி தானிது
 எங்குங்கிடை யாமலோ ரிடத்திற்கண்டேன்
சதுர கிரிதனிலே மகாலிங்கந்
 தானிருக்கு மிடத்தோரம் உண்டுமெப்பா. (629)

அந்த மரத்தினிற்போய் மூலமந்தரம்
ஆயிரத் தெட்டுருப் போட்டுநீதான்
விந்தை தேன்காய்ப் பழத்துடனே தூபதீபம்
மேன்மை பெறக் கொடுத்து ஆண்மையுடனே. (630)

பட்டையை வெட்டி நீயும் யெடுத்துப்
பாரிலுள்ளோர்களுக்குத் தெரியாமல்
திட்ட முடனெடுத்துக் கற்பமாய்த்
தின்றுவர மண்டலந்தான் தேகசித்தியாம். (631)

கோதையும் மென்று விழுங்கு இமை
கொட்டி விழிக்குமுன்னே காயசித்தியாம்
வேதையும் முடியுமப்பா வயது
மிகப்பதி னாறுய்த் தெரியுமப்பா. (632)

அவன்தேகம் மாந்தளிர்போற் சிவந்து
அதிக மானகாந்தி யுண்டாகும்
தவஉடம் பிதுதானே அவனுக்குத்
தானுயிரம் யானைப் பெலமுமுண்டாம். (633)

வேண்டியே கிம்புருடர் கின்னரர்வந்து
வியப்பாகத் தேடியே வருவார்கள்
ஆண்டவ னிவன்போலே சித்தி
யடைந்திருப் பானிந்தப் பூதலத்தில். (634)

அந்த யிலைச்சாற்றில் இரும்பை
அடவுடன் காச்சி தோய்த்திடவே
விந்தையாம் பொன்னுகும் இன்னமதின்
வேடிக்கை சொல்ல யென்னுல் முடியாது. (635)

கருநெல்லிக் கற்பமிது சொல்லக்
கானு மதிசயங்கள் மெத்தவுண்டு
பெருமை யதின்விபரம் பேசப்
பெரியோ ரறிவார்மற் றோரறியார். (636)

விருத்தம்.

கூகைக்கண் ணேடு கூகையின் பித்து
பாகமாய்ப் புத்துத் தேனி லுரைத்து
சேகித்துக் கண்ணி லிடப்பா தாளம்
ஏகமாய்த் தெரியு மிந்தஞ் சனமே. (637)

அஞ்சன மாகுஞ் சிறுகீரை வேரும்
மஞ்சும் உடும்பின் நெய்விட் டரைத்துக்
கஞ்சக் கலசத் தப்பிக் கதிரில்வை
மிஞ்சவே பார்க்க விழுமித் தயிலமே. (638)

தயிலங்கண் புருவம் நெற்றியிற் போட
ஒயிலாய்ப் பாதாளந் தோன்றுந் தயிலம்
மயமான கற்பம் வகையின்ன தென்று
நயமாஞ் செங்கொடு வேலி மகிமையே. (639)

செங்கோடிவேலிகற்பம்.

மகிமை கொடிவேலி வாங்கும் பொழுது
அகம்வலுப் படவே அங்கனி யாசமாய்ச்
சுகதேக மாகச் சரீரத்தைச் சுத்திசெய்
செகஜூஸ் திரமாய்ச் சிவப்புச் சீலையே. (640)

சேலை திடமாய் ஓங்காளி யென்று
வாலைக்குப் பூசை வள்மாய்ச் செய்து
வேலைதான் வாங்கும் பொழுதினில் மந்திரம்
காலையிற் சத்தியின் மந்திரஞ் செபித்தே. (641)

ஓம்மந்திர சத்தி இரியும் இந்திரசத்தி
ஆம் ஆதித்தசத்தி ஆலவாய்ச்சத்தி
ஓம்-மந் திரமாய் ஓங்கிடச் சுவாஹா
ஆம்-மந் திரமிது அறிவாய்திரமே. (642)

திரமா மூலிகை மந்திரஞ் செபித்துப்
பரமாய்ப் பிடுங்கிப் பொடித்துப் பசுநெய்யில்
வரமாகத் தேனும் வழியாய்ச் சேர்த்துத்
திரமா யுனக்குப் பொருந்தும் நாளிலே. (643)

நாளினிற் றூனே கற்பம்நன் றூக
வாளிதென் றெண்ணி வடமுகம் நோக்கி
ஊழி யிருக்க ஓம்-நமா வென்று
பாழித சக்கரை தன்னிற் கலந்துகொள். (644)

கொள்ளவே துட்டக் குட்டமுந் தீரும்
தெள்ளிடும் அஞ்சு நாட்கொள்ளச் சித்தியே
வள்ள ஆறுநாட் கொள்ள வகாரம்
மெள்ளவே யொன்பது நாட்கொள மேன்மையே. (645)

மேன்மைய தான கற்ப மிதுதான்
பாண்மை யுடனே பத்தியிற் சிறப்பான்
கோன்மை யான குணப்பெருங் கொண்டல்
மேன்மை யான வியன்சத் தியனே. (646)

வேறு-விருத்தம்.

சத்தியாம் சித்தியாகும் தரணியில் பத்து நாட்கொள்
முத்தியாஞ் சாஸ்தி ரத்தின் சத்தியு முண்டா மப்பா
பத்தியாய் மாதங் கொள்ளப் பார்வய தாயி ரந்தான்
உத்தம மூன்று மாதம் முடிவரத் தின்றூற் கேளே. (647)

கேளப்பா கெவுனம் பாய்வான் கிருபையா யாறு திங்கள்
நீளப்பா தின்றூ யாகில் நினைத்ததோ ரிடத்திற் போவான்
வாளப்பா வல்ல வன்காண் மஹாஅப மிருத்தும் வெல்வான்
நாளப்பா நீரின் மேலும் நெருப்பிலும் நடப்பான் நன்றே. (648)

நன்றிசெய் வேலி கற்பம் நயமுடன் கொள்ளும் முன்பு
என்றிசைப் புளியு முப்பும் எண்ணெய்சுண் ணும்புந் தள்ளு
சென்றிடும் பத்தியந்தா னிதுகளைத் தீர்த்த பின்பு
நன்றிகொள் வேலி கற்பம் நயமுடன் கொள்ளச் சித்தே. (649)

சித்தியாம் வேதை கண்டால் செய்தது சரிதா னப்பா
முத்தியாம் சித்துக் கண்டால் முடிந்தது யோக மப்பா
பத்தியாம் சுடரைக் கண்டால் பலமது கிடையா தப்பா
சத்தியைப் பூசை செய்ய சத்தியம் வேதை தானே. (650)

வேறு-விருத்தம்.

வேதையென்ற விரைப்பாகற் றயிலங்கொண்டு-விருப்பமுடன் துருசதற்குப் பூசிப்பின்பு, ஆதித்தன் பார்வைபடப் பதினேழாநாள்-அப்பனே சுண்ணும்பாங் காரமீறும், வாதிகளே பின்னுங்கேள் ரவியிற்கூட்டில்-வலுவாக நாலாநாள் கட்டிப்போகும், நீதியாய்ப்திமூன்று நாளேசென்றூல்-நிச்சயமாய்த் துருசுகுரு சுண்ணந் தானே. (651)

சோதிவிருக்ஷக்கற்பம்.

தானவனுஞ் சோதியென்ற விருக்ஷகற்பம்-தயவாக அடையாளஞ் சொல்லக்கேளு, ஏனமடா ஊமத்தை யிலைபோலப்பா-இருக்குமே வெட்டினூற் பாலேபாயும், ஞானமுடன் ராத்திரியின் நிலவுபோலே-நன்றூகக் கொழுந்துகளில் பிரகாசிக்கும், வானவர்க்கும் சித்தருக்கும் பகலிற்றூேற்றும்-மற்றவர்க்குப் பகல்த்தெரியா மந்திரந்தானே. (652)

மந்திரந்தான் சொல்லுகிறேன் நன்றூய்க்கேளு-வகையுடனே அரியும் இரியும் கிலியும், மந்திரந்தா னிது தானும் சுமுகாயா நமாவென்றே-வாகாக இலைத்துவா நமாஹாவென்று, மந்திரந்தா னுருச்செபித்து மூன்றுநிற நூலால்-வகையாகக் காப்பதுவுங் கட்டிக்கொண்டு, மந்திரந்தான் சொல்லிநமஸ் கரித்துநீயும்-வாகுடனே போகிப்பின் மறுநாள்வந்தே. (653)

மறுநாளில் வந்தவுடன் மரத்தைக்கண்டு-வாகான கணபதிக்கு ப் பூசைசெய்யத், தருவதனிற் பழந்தேங்காய் வைத்துடைத்துத்-தயவாக நிவேதனந்தாம் பூலம்வைத்து, உறுதியாய் மரத்தடியிற் பொங்கலிட்டு -உத்தமனே வயிரவாக்குப் பூசைசெய்து, அறிவுட னே அம்மரத்தை நமஸ்கரித்து - அன்பாகச் சமூலமது வாங்கிக் கொள்ளே. (654)

வாங்கியே சமூலமதைக் குடத்திலிட்டு - வண்மையாந் தயிலமதா யிரக்கிக்கொண்டு, பாங்குடனே யிரும்புபாத் திரத்தில்வைத் துப்-பண்பாக வண்டுகட்டி வைத்தபின்பு, தாங்கியே யிருபதுநாள் நெற்குள்வைத்துச் - சரியான நாட்சென்ற பின்னெடுத்து, வாங் கப்பா அதன்பின்பு தயிலந்தன்னை - மருத்துமொரு பாத்திரத்தில் வைத்திடாயே. (655)

வைத்ததொரு தயிலமது கொள்ளும்போது - மனதாரப் படு பட்சி யில்லாநாளில், ஐங்கரனை மறவாமல் முதல்நாள்தானே - அப் பனே ஒருகளஞ்சி தயிலங்கொள்வாய், செய்யதொரு விரண்டா நாள் களஞ்சிரெண்டு - சேர்ந்ததொரு மூன்றுநாள் களஞ்சிமூன்று, உய்யதொரு நாலாநாள் களஞ்சிநாலு-உத்தமனே அஞ்சாநா ளது வாய்க்கொள்ளே. (656)

கொள்ளவே ஆறுநாள் களஞ்சியாறு-கூட்டப்பா ரசங்களஞ்சி கூட்டிக்கொண்டு, கொள்ளப்பா ஆறுநாள் மூர்ச்சைபோகும்-கூர்ந் துநீ யப்போதி லரைக்ஷணத்தில், மெள்ளவே தான்கடத்தி யிரண் டுகோலில்-விரலான பெருவிரலிற் சீலையாலே, துள்ளாமற் கூட்டியே செவ்வையாகச்-சுகமாகக் கிடத்திவைத்துப் பின்னுங்கேளே. (657)

கேளப்பா கையிரண்டும் ரெண்டுகோலிற் - கிடத்தியே உச்சிநெ ஞ்சு செவிகண்ணிற்றன், வேளப்பா கதலிபழம் நெய்யுஞ்சேர்த்து-விருப்பமுட னதையேதான் பஞ்சிற்றேய்த்துத், தாளப்பா சொன் னதொரு தலங்களெல்லாம் - தளமாக யிட்டுவைப்பாய் தவறுமற்று ன், கேளப்பா வாயினிலே பாலொழுகிக் - கிலேசம்விடு யேழாநாள் கண்விழிப்பான். (658)

விழித்தவுடன் யெடுத்தனைத்தும் நன்றாய்ச்சாத்தி-மீண்டுமவர் சுகம்பெறக்கு மளவுமட்டும், பழிப்பில்லாப் பனங்கருப்புக் கட்டி யோடு-பாங்காகச் சோறுக்கி உண்பாய்பின்பு, ஒழிப்பாகச் சொல் லவில்லை யிந்தக்கற்பம் - உற்பனமா யென்நாளுஞ் சாகமாட்டான், சளியாம லிக்கற்பந் தன்னையுண்டு-சதாசிவன்போற் சாவில்லா திரு ந்திடாயே. (659)

சாவில்லை யென்பதல்லாற் பின்னுங்கேளு - சாரத்தி லுற்றவுமி நீருஞ்சிறுநீர், மேவியதி ருலேமலை யுருகவேதை-வேதாந்த நவலோக மெல்லாம்வேதை, ஆவியென்ற தவனமல மூத்திரத்தை -யாரொருத்தர் புசித்தாலும் பின்னுங்கேளு, மேவியதோ ரவனுமந்தப் படியேயாவான்-விமலனே நந்தா னிவனெனவே விள்ளுவேனே. (660)

விள்ளுவே னிதன்பாலைக் கலையிலேதான் - விருப்பமுடன் பதினைந்து நாளூமூட்டி, வள்ளலே ரவிமுகத்தி லுலர்த்திக்கொண்டு - வைப்பா வராகநெய் புத்தோட்டிற்றூன், அள்ளலே மைபண்ணிப் பஞ்சலோகம்-அதனிலிட நூற்றெட்டு மாத்துமாகும், உள்ளதொரு மூலிகையின் தோலுலர்த்தி-உற்றபொடி யொருநாழி யெடுத்துக் கொள்ளே. (661)

வேறு விருத்தம்.

கொள்ளுவாய் நெய்யிற் குறிப்பாய்நெய் நாழியிலே
என்ளளவாய்ப் பாண்விட்டு யிருபத் தொருநாளில்
வள்ளலே ரவியிலேதான் வைத்துட னெடுத்துக்கொண்டே
விள்ளுவாய் நீயொருமா விடையதாய் நித்தமீதே. (662)

இதுகொண்டு பின்புட னுவின்பா லருந்து
அதிசய முப்பது நாட்கொள்வா யாகில்
திதியுள்ள அட்டமா சித்துகள் செய்திடும்
கதியுள பாசிப்பய ரளவுகொள் கற்பமிதே. (663)

உப்புக் கட்டு.

கற்ப மிதுதன்னைக் கதிப்புடன் கண்டார்
பொற்கிரி வாழும் போகர்தா னப்பா
உற்பன வேதை உயர்கின்ற தெவ்விடம்
நற்கல் லுப்பு நாட்டுநில வுப்பே. (664)

உப்பென் றறியா ருசியிலா மாந்தர்
உப்புகல் லுப்பு மிதுக்குறை கேளு
அப்பு சமுத்திர மானதின் கூறு
உப்புறைந் தல்லோ கல்லுப்ப தாமே. (665)

கல்லுப்ப தான கறியுப்பைக் கட்டவே
சொல்லக்கே ளப்பா சுகசிற் றமுரி
வெல்லு மிதுதான் வியப்புடன் சித்தி
மல்லுக்கட் டாதே வகையிது சொன்னேன். (666)

வகையினிக் கேளு மானிலத் தேதான்
தகையிலாச் சத்தி தனக்குமே கேளு
பகையறி யாரறு பத்துநால் மட்டும்
தொகையுட னுனக்குச் சொல்வேனட் டாங்கமே. (667)

அட்டாங்க சத்தி ஆதிநில வுப்பாம்
அட்டாங்க சத்தி யப்பாரி லுப்பாம்
அட்டாங்க சத்தி யாகிய பூரணம்
அட்டாங்க சத்தி ஆதித்த னலேயே. (668)

ஆதித்த னலே யதுவெள்ளை யாச்சுது
சோதியி னலே சொரூபப் பிறப்பாம்
பாதிப் பனியிற் பிறக்கும்பா ருப்பு
மேதினி தன்னில் விளைவது தானே. (669)

தானவ ளான சத்தியீ தப்பா
ஏனமாய்க் கைமுறை யிப்பத்தி நாதம்
வான மனத்தை வலுவாகக் கட்டும்
நானுங்கொங் கணரும் நடமுடன் கண்டோம். (670)

உடன்கண்ட செய்தியை யுரைத்தேன் முன்னுகை
குடவரை விட்டுக் குளிகையால் ராஜன்
சடமது நுழைந்து சத்திரியன் மனைவியை
திடமுடன் கூடிச் சேர்ந்திடும் நாளில். (671)

வகையுட னென்னிடம் வாங்கியே யொளித்த
குகைதனில் நுழைந்து குருநா லான
தகமையா யுள்ளயிச் சாஸ்திரந் தன்னைப்
பகமையில் லாமற் பார்த்தெடுத் தேனே. (672)

எடுத்துப் புவியெலா மெங்கும் விதைத்தேன்
எடுத்த கருக்க ளெதுவுந்தப் பில்லை
விடுத்துநீ வேதை விளங்குமிப் போது
தொடுத்ததோர் கற்பம் தோன்றுவ தெல்லாம். (673)

எல்லாந்தான் சித்தி யியல்பான வேதை
எல்லாக் குருவு மெடுத்துரைத் தேனன்
நல்லா விரையின் தயிலத் துருசும்
எல்லாஞ் சுண்ண மிடையினிற் கேளே. (674)

கேளப்பா தாளகங் கிருபை யுடனே
நாளப்பா வெயிலில் நல்லதோர் சுண்ணம்
வாளு மனோசிலை வையொன் பதுநாள்
வேளப்பா கெந்தி வெளுக்கும்பதி னேழே. (675)

பதினேழா நாள்பெறப் பற்பம தாகும்
பதிவான வங்கத்திற் பத்தரை மாத்தாம்
விதிதாள கந்தான் வெள்ளையை வெள்ளியில்
நிதியா யொன்பது மாற்றுச்சரி யாமே. (676)

சரிசிலை பற்பம் தாம்பிரந் தன்னிற்
சரிவய தெட்டரை தப்பாது கேளு
சரியுள வகைகள் தான்களஞ் சிக்குச்
சரிப்டை கூட்டி ரசவேதை கூட்டே. (677)

கூட்டிடும் வேதையிற் கோரோ சனையும்
பூட்டிடும் புனுகது கூட்டிடு நீயும்
போட்டிட வேதை பொய்யா தப்பா
கூட்டிடு கோசமும் பீசமு மாமே. (678)

ஆமிது கோரோ சனைவன்னி மீறும்
நாமது சொன்னோம் நலியாமல் வேதைபார்
பூமியி னுள்ளே புலம்பும் வாதிகாள்
சோம சுரோணிதஞ் செந்தூரஞ் சொல்லே. (679)

வேறு விருத்தம்.

சொல்லென்ற கோச பீசம் துணிவுட னறிய மாட்டார்
வல்லபக் கொங்க ணர்தான் வருசட்டை நாதர் தாமும்
நல்லதோர் மூல ரோடு நந்தியு மொழிந்த தல்லால்
வெல்லென்ற கோச பீசம் விளம்பாமல் மறைத்திட் டாரே. ()

மறைத்ததோர் கோச பீசம் வருபூரம் புனுக தாகும்
உறைப்புட னிதுகூ டாட்டால் உற்றதோர் வேதை காணான்
மறைப்புடன் வேதை காண்பான் வர்ணங்க ளுற லாகும்
குறைபட்ட மனிதர் போலக் கூனியே திரிய வேணும். (681)

கூனுடன் திரிவ தேது கோசமும் பீச முந்தான்
ஆனதோர் வன்னங் கோரோ சனைமேலே யாட்டிக் கூட்டித்
தேனினி லாட்டி நன்றாய்ச் சிறுபயறள வில்லை செய்து
தானது நிழலு லர்த்தித் தயவுடன் வேதை பாரே. (682)

பாரப்பா நிலவுப் பாலே பார்கரி யுப்பைக் கட்டும்
பாரப்பா யிரவி விந்து பண்புடன் சித்தி செய்வாய்
பாரப்பா கார சாரம் பகலவன் பார்க்கச் சுண்ணம்
பாரப்பா கருக்க ளெல்லாம் பராபரங் குருவா மென்றார்.(683)

குருபோக நாத ரைத்தான் கூறுடன் பூசை செய்து
குருமூலர் சட்டை நாதர் கொங்கண ரோடு என்னைக்
குருவென்று பூசை செய்து கூறுமிச் சுவடி வைத்துக்
குருவென்று பதம்ப ணிந்தோர் கூறுடன் வேதை காண்பார்.()

ஆமப்பா புத்தி சொன்னே னழிபுத்தி சொல்ல வில்லை
ஆமப்பா வேதை கண்டால் கற்பத்தை யதன்பின் கொள்ளு
ஆமப்பா சித்தி யாகும் அன்புடன் செய்து பாரு
ஆமப்பா குருவைக் காணு அன்புடன் சொல்லி னேனே.(68 5)

கெந்தகத் தயிலம் - நொண்டிச்சிந்து.

அந்தமுள்ள கெந்தகத்தின் தயிலம்
அறைகிறேன் திருமூலர் கொங்கணர்மெய்க்க
மாசில்லாக் கெந்தகந்தான் இதனை
வாங்கியே ஐந்துபலம் கல்வத்திலிட்டு. (686)

சாரமுடன் வீர முந்தான் இருகாசு
சமத்தான வெடியுப்புப் பலமரையும்
தாளகம் லிங்கமுடன் இரண்டும்
சமத்தாக மூன்றுகா சிடைகூட்டி. (687)

அரைப்பா யாவின் நெய்யில் கொண்டு
அருமையான வெள்ளைச் சீலையிலூட்டி
மேற்புடம் கீழ்ப்புடமாய் அதனை
மெத்தவே பாகமுடன் வைத்திடவே. (688)

தயில மிறங்குமப்பா அதைச்
சந்தோஷ மாயெடுத்து விந்தையுடனே
ஒயிலாகப் பீங்கானில் வைத்து
உண்மை யுடனெடுத்து நன்மைபெறவே. (689)

பணவிடை சர்க்கரையிலும் கற்கண்டிலும்
பண்புடன் காலைமாலை உண்டுவர
தீரும் வியாதி சொல்வேன் பின்னுந்
தீராத சயரோகம் ஈளைகுன்மம். (690)

குஷ்ட மொடுகொடுமை வெள்ளை
கொடிதான மேகமொடு வாயுவாதம்
ஒருமண் டலங்கொளவே தீரும்
உத்தம வாதியருக் கிந்தமுறை. (691)

வாய்த்துதென் றூலதுவும் ராஜ
வயித்திய னென்றே பேரும்பெறுவான்
சத்தியமாய்ப் பத்தியமில்லை இந்தமுறை
சண்டாளர்க் கொருபோதுங் கிட்டாது. (692)

கெற்பசித் துடனேதான் ஆகாய
கெவுனமும் பாய்வான் கண்ணின்முன்னே
மாசில்லாத் தயிலமிது சித்தர்
மறைப்பாகப் பாடிவைத்தார் தெரியாமல். (693)

வெளியாகச் சொல்லிவிட்டேன் இந்த
மேதினியி லுள்ளவருங் கியாதிபெறவே
தெளிவொடு தெரிந்துகொண்டு தயிலஞ்
செய்துகொள்வாய்மாந்த ருய்துகொள்ளவே. (694)

என்குரு போகநாதர் பாதம்
இனிமை யுடன்பணிந்து கனிவுபெற்று
தன்மை யுடனேதான் இந்தச்
சாஸ்திரத்தி லுற்றபடி நேர்த்தியுடனே. (695)

கைபாகத் துடன்செய்துக் கொண்டு
கருத்தாக வாதமுறை பொருத்தமுடன்
செய்பாகந் தன்னுடனே எதுவுந்
தீர்க்கமுடன் செய்துகொண்டேன் பாக்கியமென்றே. ()

கற்ப முறைகளையும் வகையுடன்
கண்டு தெரிந்துஅதைக் கொண்டாக்கால்
விற்பன னிவன்றானே என்றும்
வீற்றிருப் பான்சட மழியாமல். (697)

புத்திமா னானக்கால் அவனும்
பொருத்தமாய்ச் செய்துகொள்வான் திருத்தமுடன்
பத்தியாய்ச் செய்திடுவான் இந்தப்
பாரினிற் சாகாத வரம்பெறுவான். (698)

காலாங்கி நாதருந்தான் வேதைசெய்யக்
கருத்துடன் தயிலங்கள் தான்முடித்து
கோலா கலமாக யாருங்
குறிப்பிட்டறியாமல் சதுரகிரி. (699)

மத்தியில் தயிலக்கிணறு வைத்து
மகாபெரும் பாரைக்கல் லால்மூடி
சித்தர்வந் தாற்கொடென்று கருப்பணை
சீராகக் காவல்வைத்தார் நேராகவே. (700)

காவல் பதனமென்று கருப்பனுக்கு
கட்டளைகளிட்டுவிட்டார் திட்டமுடனே
தேவை யுடனேதான் சித்தர்
தேடிவந்தாற் கிட்டுமப்பா தெரிந்துகொள்வாய். (701)

கருவூரார் வாத காவியம் எ00, முற்றிற்று.